உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புன்கூர்ப் புராணம்.

மகாசனம் பொருந்திய மகா-ள-ள-ஸ்ரீ

உடையார்பாளயம் சமஸ்தான வித்துவான்

கம்பராமாயணப் பிரசங்கம் வீரசைவ

**கனகசபைக்கவிராயரவர்கள்**

இயற்றியது.

இஃது

திருப்புன்கூர் சிவாலய தருமகர்த்தாவாகிய

காரைநகரத்தார் மகாசனம் பொருந்திய

மகா-ள-ள-ஸ்ரீ பூ. கரு. சித. சிதம்பரஞ்செட்டியார்

அவர்கள்

வேண்டுகோளால் இயற்றப்பட்டு

ஷை-யார் பொருளுதவியால்

சிதம்பரம்

சண்முகசுந்தரவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிலவங்க ஞு ஆடி மீ

2?th July 1907.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

GF
@ 2:38 pm
D-1

உ

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

கல்வி, செல்வம், அறிவு, ஒழுக்கமுதலிய நற்குண நற்செய்கைகளாலுயர்ந்த சைவசமயாபிமானிகளே!

அரிய மனிதப்பிறவி யடைந்த நமக்கு இலௌகீக வைதீக விவகாரங்களை நன்கு நிலைபெற நடத்தற்கு முக்கியமாக வேண்டப்பட்டன கல்வி செல்வ மென்பனவேயாம். இவை துணையாக இம்மை மறுமை வீடு ஏய்தப்பெறுதல்வேண்டும். இம்மூன்றின் வளமுஞ் சிவபுண்ணியத்தாற் சிறந்து விளங்குவதாக லின் கல்வி செல்வமுடையார் முழுமுதற் பரசிவத்தை வழிபடன் முதலிய சிவபுண்ணியஞ் செய்தற்பாலார்.

செல்வப்பேறு மிக்குடைய பிரபுவும் தனவைசிய குலத்தோன்றலுமாகிய காரைக்குடிகாத்தான் மகா-ள-ள-ஸ்ரீ தூ. கரு. சித. சிதம்பரசெட்டியாரவர்கள் அறத்தாறீட்டிய தமது நிதியை, இத்திருப்புன்கூரென்னும் அற்புத தலத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் பெருமானுக்குத் திருக்கோயில்முதலிய அரியபெரிய திருப்பணிக் குபயோகித்தது மன்றி, அத்தலமான்மியத்தையும் வடநூற் புலவர்களைக்கொண்டு மொழிபெயர்த்துக் கல்வியறிவிற் சிறவாத வென்னை நோக்கி "இம்மான்மியத்தை இனிய தமிழ்ப் பாடல்களாற் பாடி ஒவ்வொரு படலத்திறுதியிலும் வசனச்சுருக்கமும் எழுதித்தருக" என்று அன்போடு வற்புறுத்தினார்கள். அஃதுணர்ந்த யான் இப்பதிபுண்ணியத்தைச் செய்தல் இன்றியமையாததே என்று கருதி பெரிய அறிவாளிகளுந் துணிந்து செய்தற்கரிய இவ்விஷயத்துச் சிறிய அறிவாளியாகிய யான் அவாவான் முற்பட்டுத் தொடங்கி ஆன்றோர் வழக்கிற்கேற்ப நாடு நகரமுதலிய அலங்காரங்களையும் முக்கியமாக வேண்டப்பட்ட பிறவற்றையுஞ் சேர்த்துப் பைந்தமிழ்ச்செம்பாடல்களாற்பாடி வசனமும் எழுதி முடித்தேன். இம்மான்மிய மொழிபெயர்ப்பைச்சூரியனார்கோவிலாதீன மஹாசன்னிதானமும், வடமொழி தென்மொழிகளில் மிகவல்லவர்களும், சைவசித்தாந்தபானுவுமாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகளவர்கள் முற்றும் கருணையோடு கடைக்கணித்துத் தமது மாணாக்கரைக்கொண்டுசிறப்புப்பாயிரமுமளிப்பித்தார்கள். இவர்கள்பெருந்தகைமையை உள்ளன்போடு வந்திக்கின்றேன்.

## இந்நூலாசிரியரியற்றியன.

கெங்கைகொண்டசோளேச்சரத் தலபுராணம்.

குழமூர்த்தல்புராணம்.

உடையார்பாளயத் தலபுராணம்.

பெண்ணையாற்றுத்தலபுராணம்.

திருப்புன்கூர்த்தலபுராணம்.

[illegible]யபுராணச்சுருக்கக்கலிவெண்பா.

க[illegible]ம்பர்கோயிற்பிள்ளைத்தமிழ்.

மணத்தட்டைப்பிள்ளையார் பிள்ளைதமிழ்.

சிவஞானபாலையசுவர்மிகள்மாலை.

குருநமசிவாயமாலை.

திருவேரகமாலை.

தையனுயகிமாலை.

கணக்கர்மாலை.

தருமகர்த்தாமாலை.

உ

சிவமயம்.

# திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

## திருப்புன்கூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

முந்திநின்றவினைகளவைபோகச்
சிந்திநெஞ்சேசிவனார்திருப்புன்கூ
ரந்தமில்லாவடிகளவர்போலுங்
கந்தமல்குகமழ்புன்சடையாரே. (௧)

மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூ
ராவரென்னுமடிகளவர்போலு
மேவினல்லாரெயில்மூன்றெரித்தாரே. (௨)

பங்கயங்கள்மலரும்பழனத்துச்
செங்கயல்கள்திளைக்குந்திருப்புன்கூர்க்
கங்கைதங்குசடையாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (௩)

கரையுலாவுகதிர்மாமணிமுத்தந்
திரையுலாவுவயல்சூழ்திருப்புன்கூ
ருரையினல்லபெருமானவர்போலும்
விரையினல்லமலர்ச்சேவடியாரே. (௪)

பவளவண்ணப்பரிசார்திருமேனி
திகழுவண்ணமுறையுந்திருப்புன்கூ
ரகழரென்னுமடிகளவர்போலும்
புகழநின்றபுரிபுன்சடையாரே. (௫)

தெரிந்திலங்குகழுநீர்வயற்செந்நெல்
திருந்தநின்றவயல்சூழ்திருப்புன்கூர்ப்
பொருந்திநின்றவடிகளவர்போலும்
விரிந்திலங்குசடைவெண்பிறையாரே. (௬)

பாரும்விண் ணும்பரவித்தொழுதேத்துந்
தேர்கொள்வீதிவிழவார் திருப்புன்கூ
ராரநின்றவடிகளவர்போலுங்
கூரநின்றவெயின்மூன்றெரித்தாரே. (௭)

மலையதனாருடையமதின்மூன்றுஞ்
சிலையதனாலெரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர்வல்லவரக்கன்றருக்கினை
மலையதனாலடர்த்துமகிழ்ந்தாரே. (௮)

நாடவல்லமலரானுமாலுமாய்த்
தேடநின்றாருறையுந்திருப்புன்கூ
ராடவல்லவடிகளவர்போலும்
பாடலாடல்பயிலும்பரமரே. (௯)

குண்டுமுற்றிக்கூறையின்றியே
பிண்டமுண்ணும்பிராந்தர்சொற்கொளேல்
வண்டுபாடமலரார் திருப்புன்கூர்க்
கண்டுதொழுமின்கபாலிவேடமே. (௧௦)

மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்
நாடவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சிவலோகநாதர். தேவியார் - சொக்கநாயகியம்மை.

௨

சிவமயம்.

## திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்த

### திருப்புன்கூர்—திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பிறவாதேதோன்றியபெம்மான்றன்னைப் பேணாதாரவர்தம்மைப்பேணாதானைத், துறவாதேகட்டறுத்தசோதியானைத் தூநெறிக்குந்தூநெறியாய்நின்றான்றன்னைத், திறமாயவெத்திசைக்குந்

தானேயாகித்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நிறமாமொளியானைநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (௧)

பின்றானுமுன்றானுமானான்றன்னைப்பித்தர்க்குப்பித்தனாய்நின்றான்றன்னை, நன்றாங்கறிந்தவர்க்குந்தானேயாகிநல்வினையுந்தீவினையுமானான்றன்னைச், சென்றோங்கிவிண்ணளவுந்தீயானானைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நின்றாயநீடூர்நிலாவினானைநீதனேனென்னேநானினையாவாறே. (௨)

இல்லானையெவ்விடத்துமுள்ளான்றன்னை யினியநினையாதார்க்கின்னாதானை, வல்லானடைந்தார்க்கருளும்வண்ணமாட்டாதார்க்கெத்திறத்துமாட்டாதானைச், செல்லாதசெந்நெறிக்கேசெல்விப்பானைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நெல்லால்விளைகழனிநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (௩)

கலைஞானங்கல்லாமேகற்பித்தானைக் கடுநரகஞ்சாராமேகாப்பான்றன்னைப், பலவாயவேடங்கடானேயாகிப் பணிவார்கட்கங்கங்கேபற்றானைச், சிலையாற்புரமெரித்ததீயாடியைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நிலையார்மணிமாடநீடூரானை நீதனேனென்னேநானினையாவாறே. (௪)

நோக்காதேயெவ்வளவுநோக்கினானை நுணுகாதேயாதொன்றுநுணுகினானை, யாக்காதேயாதொன்றுமாக்கினானையணுகாதாரவர்தம்மையணுகாதானைத், தேக்காதேதெண்கடனஞ்சுண்டான்றன்னைத்திருப்புன்கூர்மேவிய சிவலோகனை, நீக்காதபேரொளிசேர்நீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (௫)

பூணலாப்பூணானைப் பூசாச்சாந்தமுடையானைமுடைநாறுபுன்கலத்தி, லூணலாவூணானையொருவர்காணாவுத்தமனையொளிதிகழும்மேனியானைச், சேணுலாஞ்செழும்பவளக்குன்றொப்பானைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நீணுலாமலர்க்கழனிநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (௬)

உரையார்பொருளுக்குலப்பிலானை யொழியாமேயெவ்வுயிருமானான்றன்னைப், புரையாய்க்கனமாயாழ்ந்தாழாதானைப்புதியனவுமாய்மிகவும்பழையான்றன்னைத், திரையார்புனல்சேர்மகுடத்

தானைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நிரையார்மணிமாடநீ டூரானைநீதனேனென்னேநானினையவாறே. (௭)

கூரரவத்தணையானுங் குளிர்தண்பொய்கை மலரவனுங்கூடிச் சென்றறியமாட்டா, ராரொருவரவர்தன்மை யறிவார்தேவீரறி வோமென்பார்க் கெல்லாமறியலாகாச், சீரரவக்கழலானைநிழலா ர்சோலைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நீரரவத்தண்கழனி நீடூரானைநீதனேனென்னேநானினையவாறே. (௮)

கையெலாநெய்பாயக்கழுத்தேகிட்டக்கானிமிர்த்துநின்றுண் ணுங்கையர்சொன்ன, பொய்யெலாமெய்யென்றுகருதிப்புக்குப் புள்ளுவராலகப்படாதுய்யப்போந்தேன், செய்யெலாஞ்செழுங்க மலப்பழனவேலித்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நெய்தல்வா ய்ப்புனற்படப்பைநீடூரானை நீதனேனென்னேநானினையவாறே. (௯)

இகழுமாறெங்ஙனேயேழைநெஞ்சே யிகழாதுபரந்தொன்று ய்நின்றான்றன்னை, நகழுமாவரைக்கீழிட்டரக்கர்கோனை நலனழித் துநன்கருளிச்செய்தான்றன்னைத், திகழுமாமதகரியினுரிபோர்த் தானைத்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நிகழுமாவல்லானைநீடூ ரானைநீதனேனென்னேநானினையவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகளருளிச்செய்த

### திருப்புன்கூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத வவனைக்காப்பதுகாரண மாக, வந்தகாலன்றனாருயிரதனை வவ்வினாய்க்குன்றன்வன்மைகண் டடியேன், எந்தைநீயெனைநமன்றமர்நலியி லிவன்மற்றென்னடியா னெனவிலக்குஞ், சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்செழு ம்பொழிற்றிருப்புன்கூருளானே. (௧)

வையகமுற்றுமாமழைமறந்து வயலினீரிலைமாநிலந்தருகோம் உய்யக்கொள்கமற்றெங்களையென்ன வொலிகொள்வெண்முகிலாய்

ப்பரந்தெங்கும், பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ், செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே, (௨).

ஏதநன்னிலமீராறுவேலியேயர்கோனுற்ற விரும்பிணிதவிர்த்துக், கோதனங்களின்பால்கறந்தாட்டக்கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற, தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்சடைமிசைமலரருள்செயக்கண்டு, பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. [௩]

நற்றமிழ்வல்லஞானசம்பந்த னாவினுக்கரையனாளைப்போவானுங், கற்றசூதனற்சாக்கியன்சிலந்திகண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள், குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன், பொற்றிரள்மணிக்கமலங்கள்மலரும்பொய்கைசூழ்திருப்புன்கூருளானே, [௪]

கோலமால்வரைமத்தெனநாட்டிக்கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த, ஆலநஞ்சுகண்டவர்மிகவிரியவமரர்கட்கருள்புரிவதுகருதி நீலமார்கடல்விடந்தனையுண்டுகண்டத்தேவைத்தபித்தநீசெய்த சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்செழும் பொழிற்றிருப்புன்கூருளானே. (௫)

இயக்கர்கின்னரர்ஞமனொடுவருணரியங்குதீவளிஞாயிறுதிங்கள், மயக்கமில்புலிவானரநாகம்வசுக்கள்வானவர்தானவரெல்லாம் அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனையர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு, திகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே, (௬)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்பொழில்கொளால்நிழற்கீழறம்புரிந்து, பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்தருளினாய்ப்பண்டுபகீரதன்வேண்ட, ஆர்த்துவந்திழியும்புனற்கங்கைநங்கையாளைநின்சடைமிசைக்கரந்த, தீர்த்தனேநின்றன்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௭)

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரிலிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல், காவலாளரென்றேவியபின்னையொருவநீகரிகாடரங்காக, மானைநோக்கியோர்மாநடமகிழமணிமுழாமுழக்கவருள்

செய்த, தேவதேவநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றி ருப்புன்கூருளானே. (அ)

அறிவினால்மிக்கவறுவகைச்சமையமவ்வவர்க்கங்கேயாரு ளபுரிந்து, எறியுமாகடலிலங்கையர்கோனைத்துலங்கமால்வரைக் கீழடர்த்திட்டுக், குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்கோலவா ளொடுநாளதுகொடுத்த, செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (கூ)

கம்பமால்களிற்றின்னுரியானைக்காமற் காய்ந்ததோர் கண்ணு டையானைச், செம்பொனேயொக்குந்திருவுருவானைச்செழும்பொ ழிற்றிருப்புன்கூருளானை, யும்பராளியையுமையவள்கோனையூர ன்வன்றொண்டனுள்ளத்தாலுகந், தன்பினாற்சொன்னவருந்தமி ழைந்தோடைந்தும்வல்லவரருவினையிலரே. [க0)

திருச்சிற்றம்பலம்.

## சருக்க அகராதி.


| | சருக்க அகராதி. | பக்கம். |
|---|---|---|
| 1. | சிறப்பாயிரம் | 1. |
| 2. | கடவுள் வாழ்த்து | 1. |
| 3. | திருநாட்டுப்படலம் | 6. |
| 4. | திருநகரப்படலம் | 9. |
| 5. | நைமிசபபடலம் | 14. |
| 6. | தலவிசேடப்படலம் | 19. |
| 7. | பிரமதேவர்பூசித்தபடலம் | 25. |
| 8. | இந்திரன்பூசித்தபடலம் | 39. |
| 9. | அகத்தியர்பூசித்தபடலம் | 54. |
| 10. | பன்னிருவேலிபெற்றபடலம் | 67. |
| 11. | இராஜேந்திரசோழன்பூசித்த படலம் | 76. |
| 12. | சந்திரன்பூசித்த படலம் | 80. |
| 13. | சூரியன்பூசித்தபடலம் | 84. |
| 14. | அக்கினிபூசித்தபடலம் | 88. |
| 15. | வானரம்பூசித்தபடலம் | 91. |
| 16. | பதஞ்சலிமுனிவர்பூசித்தபடலம் | 94. |
| 17. | வியாக்கிரபாதமுனிவர்பூசித்தபடலம் | 97. |
| 18. | சப்தகன்னியர்பூசித்தபடலம் | 100. |
| 19. | வீரவிக்கிரமச்சோழன்பூசித்தபடலம். | 106. |
| 20. | விறன்மிண்டநாயனார்பூசித்தபடலம் | 118. |
| 21. | நந்தனார்பூசித்தபடலம் | 121. |
| 22. | ஏயர்கோன்கலிக்காமநாயனார் படலம் | 129. |
| 23. | தீர்த்தப்படலம் | 135. |
| 24. | முனிவர்பூசித்தபடலம் | 139. |

கணபதிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

---

## தருமபுர வாதீனத்தைச் சேர்ந்த வித்வான் ஸ்ரீலஸ்ரீ சண்முகசுவாமிகளவர்கள் இயற்றியது.

தேனாடுபொழின்மலிந்த பாண்டிநாட்டினுக் குயிராச்செப்பற்பாற்றாங், காணாடுகாத்தானென்றிடுநகரிற் காநாடுகாத்தானென்ன, மேனாடுபுகழ்மலிந்த பட்டினத்துப்பிள்ளைமரபினில்விளங்குங், கோனாடுசெல்வமெலாந் தனதாகரம்பெற்றிலங்குங்குமணனன்னான்.

பார்குறிப்புக்கொளும்வேளூர்ச்சினகரத்தைப் புதுக்கிக்கும்பாபிஷேகஞ், சீர்பெறச்செய்தன்ன சத்திரந் துலங்கப் புரிந்திட்டுசீலமிக்க, பேர்கறுப்பன்புகழ்வெளுப்பனிறஞ்சிவப்பன் றிருப்பசுமை பெற்றோன்பெற்ற, வேர்பொறுத்தபுண்ணியத்தாலின்றதவபாலனென விலங்குஞ்சேயோன்.

வாய்மைபொறையடக்கமிகுவண்மை குணங்குலமரபின்றரும்வாய்ந்த, தாய்மையெலாமோருருக்கொண்டென்ன வருகுலதிலகதனவானென, சேய்மையெலாம்புகழ்மலிக்க சிதம்பரவேளென்னுமபிதானச்சீரான், ஆய்மெயித்தசுசியமைந்த வுள்ளத்தான் யாவரினுமறிவின்மிக்கான்.

கல்யாணகுணம்படைத்தே கருணையுருப் பிறங்கவருகாராளர்க்குட், கல்யாணம்பல்லோர்க்குப்புரிந்துமிகுபுகழ்படைத்துக்கனகசேரராய்க், கல்யாணமனைத்துறலாற்பலநர்திமாராய்த்துன்னமேமிக்க, கல்யாணசோழபுரமையாறுமகிட்டிசைகாட்டவன்னே.

திருப்புன்கூர்த்தலமதிலாயிர மறத்துட்சிவதருமஞ் சிறந்ததென்று, திருப்பெங்குநாடாம லெந்தைக்குமன்னைக்குஞ் சினகரத்து, விருப்புங்குற்றிமெத்திவாரமுதலாவரண மியாவுமாக்கிப், பொருப்பிங்குபலகருங்கற்பணி சிகரம்புதுமையுறப் பொலியச் செய்து.

இத்தலமான்மியமாகும்வடமொழியைத்தென்மொழியிலீவா யென்னிற், கைத்தலவாமலகமெனப் பலருமறிகுவரென்னக்கட்டுரைப்ப, வெத்தலமுமிச்சரிதந்தனைக் காணூக்கூட்டுண்டேயினிமையெய்தி, முத்தலமுமுவப்புற்றே நற்பயனையெய்தும்வண்ணமொழிந்துற்றானல்.

விடையாரும்பாண்டரங்கனருட்பெருக்கையாழியெனமிகப்படைத்த, கொடையானிதனைத்தையுமீங்கெண்டிசையும்புகழ்மணக்குங்குணக்குன்றன்னா, னுடையார்பாளைய மேவிநற்றருமச்செங்கோலையோச்சுகின்ற, வடையார்கள்பரவுகச்சியுவராங்கேந்திரன்சமூகவித்வானை.

வாலைசரஸ்வதி சுப்ரமணியகவிச்சக்ரவர்த்திவரத்தில்வந்த வேலையெனுமிலக்கியமுமிலக்கணமும்வரம்புகண்டவீரசைவச் சீலமுளன்கம்பராமாயணப்ரசங்கமது செய்யவல்ல, காலையுதித் திடும்பரிதியெனுங் கனகசபைப்பெயர்கொள்கவிவல்லோனே.

சூரியனார்கோயில் சிவாக்ரயோகிகளாதீனம் ஸ்ரீலஸ்ரீ
மஹாஸந்நிதான உத்தரவின்படி மாணாக்கராகிய
ஸ்ரீமத்முத்துக்குமாரதம்பிரானியற்றியது.

திருத்தொண்டின்வீறுதிகழ் மரபின் வருமேயர்குலதிலகர் முன்னாட், பொருத்தங்கொள்பணிசெய் திருப்புன்கூரின்மான்மியந்தென்மொழியாற்சொல்கென், றுருத்தஞ்செய்குலத்துவரு சிதம்பரசைவசியன்புகன்றவாற்றாற் சொற்றான், கருத்தொன்றுமன்புநிறை கனகசபையெனும்பெயர் கொள்கவிஞன்மாதோ.

2 3

## சிதம்பரம்

## ஸ்ரீசபாநாயகர் திருவனந்தல்காலசந்திகட்டளை

## ஸ்ரீமான் V. தில்லைநாயகமுதலியாரவர்கள் இயற்றியது.

மணமலி மலரோ னிறுவிய நிலக்கண் மன்பதை யோரிரண் டாகும், பணமலி யறிவ ரௌவுரை தருப பயிலிவை தன்னிடத் தாமென், றெணமலி புகழ்சால் சிதம்பர நாமத் தேந்தருன்றலங் களிற் சிறந்த, குணமலிதிருப்புன் கூர்ச்சிவ கதையைக்குணி க்கபைந் தமிழினுலென்ன.

தலன்றரு பனக சபைக்கதி பதியின் றந்தையா கிலவிய வெ ண்மை, பொலன்றரு வனக சபைவிலா வுவப்போன் புகழ்தருதி ருவருட் குறியை, யலன்றரு தனக சபையிக வரம லமர்த்திய வீ ரமார் சைவப், புலன்றரு கனக சபைப்பெயர்க் கவிஞன் புகன்ற னனுய்யுமா றுலகே.

மேற்படி முதலியாரவர்களின் மாணுக்கரும்
• சிதம்பரம் செந்தமிழ்ச்சங்க உபகாரியதரிசியும்
டவுன் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

## ஸ்ரீமான் S இராஜாப்பிள்ளை யவர்கள் இயற்றியது.

ஆறுமூர் திெயனச் சிவணியசீர்ச் சிவபெருமானருட்பெ ருக்கால், வாறுடுந் தமைப்பரவத்திருப்புன்கூரமாந்தருளும் வண் மையெல்லாந், தேனுடு மினியதமிழ்ப் பாவுரையிற் றெளிவாகத் தெரிக்குகென்னக், காணுகொத்தான்வாழ் சிதம்பரமென்றனபுரல ன்கழறக்கேட்டு.

சுவரங்கம் வீழ்ந்தானு மலரரங்கந் தாழ்ந்தாலுந் தனிக வொண்ணு, நவரங்கத் திருமேனிப்பொன்னரங்கனிலைவழுத்தப் துபோற்றும், யுவரங்க மகிபாலனரங்கமெனு[illegible] க்காஞ், சிவரங்கன் கனகசபைத்தவரங்கச் [illegible] ணுல்,

## சிறப்புப்பாயிரம்.

### கன்னியார்குடி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் வீரசைவசோமசுந்தரையரவர்கள் இயற்றியது.

தருமமெலாந்தழைத்தோங்குகாணுகொத்தானிற்றனவான்கல்வி, யருமையெலாமறிந்த சிதம்பர வணிகர்குலதிலகனன்பினாலே, பெருமையெலாந்தழைத்த திருப்புன்கூரின்றிருப்பணிகள் பெரிதுஞ்செய்திங், குரிமையெலாம்பெறுமிந்தத்தலத்தின் சீர்செந்தமிழினுதவுகென்ன.

தஞ்சைநகராதிபர் முன்சாராசரரந் தெரிந்ததலே வனென்னமிஞ்சுபுகழ்பெற்றதன்றிக் கவர்னர்முதற் றுரைகளெலாமெச்சவுற்ற, மஞ்சனைய கொடைக் கச்சியுவரங்க சமஸ்தானபதிமதிப்ப, ரஞ்சிதமாங்கவிபொழியுங் கனகசபையெனுங்கவிஞன் வின்றுன்மன்னே.

### திருப்புன்கூர் மகா-ா-ாஸ்ரீ தா. கரு. சிதம்பரசெட்டியாரவர்கள் தர்ம்ம பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் சாமிநாதஅய்யரவர்கள் இயற்றியது.

சீர்பூத்தநறும்பொகுட்டுமலரணையா ளுகணையான்சேவித்தேத்து, நீர்பூத்தசெஞ்சடிலர்திருப்புன்கூர் மான்மியத்தைதமிலவச்செய்தா, ளூர்பூததமுற்கபுரிச்சமஸ்தானயுவரங்க ராசன்மெச்சும், பேர்பூத்தவீரசைவகனகசபையெனும் பெயர்கொள்ப்ரப்லவானே.

### உடையார்பாளயம் மகாகனம்பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ சமஸ்தானக் தாசில்தார் சுப்பராயபிள்ளை அவர்கள் குமாரரும் தென்னார்க்காடு2-வது கிரேட்வக்கீலுமான சிதம்பரம் மகா-ா-ா-ஸ்ரீ வைத்தியநாதபிள்ளை யவர்கள் இயற்றியது.

கல்வியினதருமையறியாதவர்க்குக் கனத்தகொடைகொடுத்துக்காட்டிக், கல்வியினதருமை யறியார்பாற்செல்லொண்ணுது கவின்றதமிழ்மை, கல்விஜயப்பெறக்காக்குங்கச்சியுவரங்க மஹாராஜன்முன்பு, கல்விடயஞ்சொனுங்கனகசபைப்புலவன் கரஞ்சவனலஞ்சேர்ற்றுனல்.

இந்நூலாசிரியர் மாணாக்கராகிய அழகாபுரம் மகா-ா-ா-ஸ்ரீ
சுப்பராயநாயடு
இயற்றியது.

வாணுடிங் கற்பகப்பூ வளநாடு முரகர்கடம் வயங்கு நாடுந்
தேனுடு மலரிருந்த திசைமுகன் றன்றிருநாடுந் திகழ்வை வகுந்த
மாறுடும் புகழ்பெருகு மண்ணாட்டுட் பட்டினத்தார் மரபில்வந்த
காணுடு காத்தானிற்கருத்தாவின் றவத்தில்வருகதிரேபோல்வான்.

பொருள்விளங்கப் பொருளில் வரும்புண்ணியங்கண் மிகவி
ளங்கப்புகழ்சை வத்தி, னருள்விளங்க வாகமங்கள் பலவிளங்க
நிலைவிளங்கவரிய ஞானச், சுருள்விளங்கச் சொன்மறையின் றிர
ள்விளங்கச் சுருதிகலை சொல்வோர் தம்மிற், றெருள்விளங்கத் த
ன்றிருப்பேர் சிதம்பர மென் றிசைவிளங்கத் தெரிக்கும்வள்ளல்.

பதிவளரும் பயறணிப்பே ரமலனுறை முற்கபுரிப் பாளயத்தி
னிதிவளருங் கச்சியுவ ரங்க சமஸ்தானபதி நிருபர்முன்னார், துதி
வளருஞ் சாமிமலைக் கனகசபைக் கவிவல்ல தூயன் றன்னை, மதி
வளர நேர்ந்தனுற் றிருப்புன்கூர் மான்மியத்தைவழங்குகென்ன.

சீர்வாங்கு மெழுத்தொடு சொற் பொருளணியாப் பினிதிலங்கி
ச்செவ்விதாகி, நேர்வாங்கும்வழுத்தவிர்ந்து வனப்பமைந்துநல
முதவு நிலைய தாகிப், பார்வாங்குந் தமிழ்மொழியிற் கவியினமா
ப்புனைந்து நெடும் பாவலோரிற், பேர்வாங்கியளித்தனனு லிவன்
பெருமை யாவரே பேசற்பாலார்.

மாயூரம் விஸ்வப்பிர்ம்ம வம்ஸ வைதீககுருஸ்தான
அஷ்டாவதானம் பிர்ம்மஸ்ரீ
சந்திரசேகரகவிராயரவர்கள்
இயற்றியது.

பூவுலகம்புகழ்புன்கூரமர்ந்தரு
டேவதேவன்சிவலோகநாதன்
சிவகதைமுழுவதுந்தேர்ந்தவுமையோ
டுவகையோடேதிருவுள்ளங்கொண்டது
நந்தியடிகணந்தனுர்பொருட்டு

முந்திவிலகிய முறையதுநிற்கச்
சந்நிதிப்புலவர் தாங்கூட்டுண்ண.
வன்னியரொதுங்க வடிபெயர்ந்துலாவி
யொதுங்கிநின்றங் குணர்ந்தபடியென
முதங்கொடுசெவி கொடுமுற்றுமுண்டுட
லதுபூரிக்க வரங்கேறியது
மதுமலரெனவெம் மருங்கும்வாசிப்பது
சூரியனார்தளித் தொன்மலயந்திக
ழாரியந்தமிழ்க்கட லனைத்துமுண்டோன்
சங்கத்தமிழின் றலைமைப்புல்வன்
றிங்கட்சடையன் செல்வக்குருவா
முத்துக்குமார முதற்பெயர்பூண்டோன்
பத்தழகுடனாற் பன்னோக்கமைதி
பெற்றுளதென் றுளம் பேணிமகிழ்ந்தது
மற்றிதுவடமொழி வாய்ந்துவந்ததுபோற்
றனபதிவந்துதக் கணம்வாழ்க
கனநிதிக்குவையொடு கலந்தாலென்ன
வந்துபார்காத்தான் வாழ்பெருந்துறைபோற்
சிந்தையினமைந்த திருப்பணிசெய்து
சோணாடுகாத்தான் றொல்லறங்காத்தான்
கானாடுகாத்தான் கடிநகர்காத்தான்
புலவரைக்காத்தான் புகழினைக்காத்தான்
பலரும்புகழ்சிதம் பரவேளென்னுந்
தன்பெயர்காத்தான் றான்வேண்டியது
பண்பதமாதிய பன்னோக்கமைந்த
பதின்மர்க்ஷத்திரிய ரிற்படைகுடிகூழரண்
முதலுளவீரன் முதற்க்ஷத்திரியன்
கொடையான்புலவர் கூறும்புகழா
னுடையார்பாளயமோம்புநரேந்திரன்
கச்சிகல்யாணரங் கேந்திரன்களித்த
வுச்சிதமிகுந்த வொப்பிலாப்பௌத்திரன்
விரிகடலுலகில் மெய்க்குக்களஞ்சியன்
புரையெலாநீக்கும்பொய்க்குப்பகைஞ

## சிறப்புப்பாயிரம்.

னூல்கலைவதீகளெல்லா ஙகமோர்ந்து
கலமெலாமுணர்ந்த நற்குலதிலக
னெண்டிசையுள்ளோ ரியாவருமேத்து
மண்டலாதிபதியா னவரோதயன்
சுவையெலாமுணர்ந்த சுகுணசஞ்சித
னவையெலாம்புகழு மருங்குணரஞ்சிதன்
றட்டரையடக்குஞ் சுயாண்மைமிக்கோ
னிட்டவைக்காக்கு மேதுவின்றக்கோன்
கச்சியுவராங்கக் காவலனரண்மனை
மெச்சுங்கவிஞன் வீரசைவன்
சிவப்பிரகாசத் திருப்பெயரடிகள்
கவிப்பிரகாசங்காட்ட மீண்டு
முதித்தாலென்ன விங்குதித்திடுபெரியோன்
மதிக்குளன்றியுமறைமுடிவிளங்கு
மனகனைபுரத்தி லணிபெறத்தரித்தோன்
கனகசபைப்பெயரர் கவிராஜசேகரன்
றமிழெனும்பாற்கடற் றுலநாட்டி
யமரர்கள்வியப்ப வருள்கொடுமுயன்ற
புராணப்பெயரொடு புவியிற்பிறந்தது
தராதலத்தோருளந் தழைக்கவினித்தது
கொங்கார்மலர்ப்பொழிற் குலவியசீர்திருட்
புன்கூர்திருத்தலப் புகழாமமுதே.

சிறப்புப்பாயிரம்
முற்றிற்று.

௳

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புன்கூர்ப்புராணம்.

## விநாயகர்வணக்கம்.

பூமேவுபுத்தேளும்பூமேவுமாதவனும்போற்றெம்மானைத் [நார்
தாமேவு * மொருமதத்தனென்றிடமும்மதத்தனெனச்சண்மதத்
நாமேவிப்புகலவவன்றனக்குமேலோனெனவேநண்ணுகின்ற
மாமேவுகுஞ்சரமாமுகவனிருசெஞ்சரணைவணங்கிவாழ்வாம்.

## கடவுள்வாழ்த்து.

### சிவலோகநாதர் துதி.

விருப்புன்கூரடியென்னுந் தொழும்பர்தமக்கருடழைந் துவினை
க்கேடாகக், கருப்புன்கூர்பவப்பிணிகளணுகாமலுத்தமாங்கத்தின்
மீதுமருப்புன்கூர்வரைகோலால் புண்ணியத்தைவரைந்திருமைவா
ழ்வளிப்பத், திருப்புன்கூரிடைமேவுஞ்சிவலோகநாயகன்றாட்செ
ன்னிசேர்ப்பாம்.

### சௌந்தரநாயகியம்மை துதி.

அலைமகளாய்க்கலைமகளாய்த்துற்கையாதியைஞ்சத்தியெனம
றைகளறையநின்ற, மலைமகளேயுதித்து நவராத்திரிக்கண்மாவிர
த்முற்றநையாார்வகுக்கவல்லா, ரலைமகளுங்கலைமகளுங்கண்ணு
யன்னார்கண்மணியாயவர்க்கருளுமழகுமீந்து, தலைமகளாயிலங்கி
நின்றவிணையாரென்னுஞ்சௌந்தரநாயகிமலர்த்தா டலைமேற்கொ
ள்வாம்.

### சபாநாயகர் துதி.

பனகசயனன்முதலாவொவ்வொர்குணம்வசிக்கவுளீர்பண்பதீத
வனகனெனப்பொது வுற்றோர்க்கமைபாரபட்சமேதமையும்வண்

மதம்என்பது சைவமதம்.

ணஞ், சினகரமாய்க்கலவுமெனுஞ்செஞ்சிலம்பார்குஞ்சிதத்தாடிக மூக்காட்டிக், கனகசபையினிடைஞ்செய்யுயிர்க்குயிராம்பேரொளியைக்கருத்துள்வைப்பாம்.

### சிவகாமியம்மை துதி.

சேட்டிகழுவோரையுயிர்நாட்டிலுறுவோரையுமேதீமைநன்மை நாட்டிவைத்தேயுழலும்வகைவினைக்கயிற்றாலூசலாட்டுதல்போன்று, மாட்டிவைக்கும் பெருமானையாடட்டிவைப்பனெனவம்பலத்து, ளாட்டிவைத்துக்கூத்துக்கொள்சிவகாமசுந்தரிதாட்கன்புசெய்வாம்.

### தக்ஷிணாமூர்த்தி துதி.

நத்திரையுங்கடற்றுயின்றோனயன்மகவாய்வருசனகராதிநால்வர் பத்திரையாய்நிவேதித்துமாணவராய்த்திருவடியாம்பதுமம் போற்றிச், சித்திரையாயூட்டியருளெனவாக்காலளக்கொண்ணாச்செல்வத்தைத்தச்சின், முத்திரையின் * மரக்காலாலளந்தருள்செய்முதல்வனடிமுன்னிவாழ்வாம்.

### தலவிநாயகர் துதி.

தோளாற்றலாற்றடத்தைத்தொட்டெந்தைதனையென்றுஞ்சூலாய் விழாவை, நாளாக்கண்டிறைஞ்சுதிருநாளைப்போவார்க்கரனூர்நல்கலென்னக், கேளாக்கொள்ளாதகொடுந்துன்மதியேன்பவமனைத்துங்கெடுத்தெஞ்ஞான்று, மாளாப்பிறவிபோக்குமாமுகவன்மலர்ந்தாளைவணங்கிவாழ்வாம்.

### சுப்பிரமணியர் துதி.

.. கருமையிலேறுறுமாலுங்கரு † மையிலேறுறுவானுங்கண்டுவெந்தே, யுரிமையிலே§றம்மானொருதவுமம்மானார்முறைமையொருவித்தாளையிருமையிலேறும்படிக்கிங்கிறிலாச் சுகம்பெறவேயிறைஞ்சியேத்தும்பெருமையிலேறும் பெருமான் பெருமையிலேறும் பதத்தகைப்பேணிவாழ்வாம்.

---

* மரக்காலால்—ஆலமரத்தினது இடம்.

† மை—மேகம்.

§ அம்மானார்—மான்போன்ற பெண்களை.

### வீரபத்திரர் துதி.

தாமதத்தை மனத்துன்னித்தவத்தை யறத்தினைமகத்தைச் சரியையாதி, நேயகத்தை யுளுற்றிடினுந் துன்பமன்றியின்பமுறுரென நிகழ்த்தத், தீமுகத்தோடாணவத்தனயனுதிவிபுதராசிர்வதிக்க, மாமகத்தைப்புரிந்தோர்க்குமறிமுகத்தையளித்தோன்றாண் மருவிவாழ்வாம்.

### நாமகள்துதி.

தேவுறை தென்மலைமுளைத்துச்சங்கப்பாத்தியில்வளர்ந்துதிசைமுகத்தோ, னுவெனுநாற்கொழுகொம்பிற் றழைந்துகற்றோரிடம்படர்ந்து நாலுக்கேள்வி, மூவுலகுங் கிளைத்துமணந்தன்பரும்பித்தவமலர்ந்து முதிர்ந்தபோகப், பாவினநற்கனியையருள் கொடியினெழிலடியைமுடிபடியவாழ்வாம்.

### சம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி.

சேலுண்டவரிநெடுங்கட்டெரிவையர்கள்பலர்பாலைத்தெவிட்டச்செவ்வாய், மேலுண்டதலைகிடிற் பாற் பரவை யொவ்வாதென வுண்டுவிழைமாலுண, மாலுண்ட சாதமற *வதிரேகம்பலவியற்ற வள்ளம்வாய்ந்த, பாலுண்ட§கொம்பிலாக் கோழியோன்றாளிணையைப்பரவிவாழ்வாம்.

### அப்பர்சுவாமிகள் துதி.

ஊழியினிற்கதிரவன்றனொளியுருப்பம்வதன்முறவொண்சரத்தி, னேழியனுடுயிலின்றி வருணனைப்போற்றிய விரதனிதய மாழ்கப், பாழியுற்றோர்பலர்தாம்பிறுற் பிணித்துக் கடலுய்ப்பப்பகர்நொடிக்கு, ளாழியுற்ற கன்மிதப்பவாழியுற்றோன் றிருவடிக்கே யன்புசெய்வாம்.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

மட்டிதட்டாயரை மலரின் மனைவியொடு குடிபுகுந்த வாழ்வை நீக்கி, மூட்டியெடுத்தயின்று முத்தாநதியினிடை வீழ்ந்திறப்ப முயன்றோனைப், பெட்டியினி லெடுப்பான்போனதியிலிட்டுத்தடத்தெடுத்த பெருமைக்கேற்ப, விட்டிகையை யேதங்கக்கட்டியாக்கினனடிக்கே யிதையம்வைப்பாம்.

---

* அதிரேகம்—ஆச்சரியம்.

§ கொம்பிலாக்கோழி—காழி.

## மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

முருந்துறழ்வெண்மூரலிள முலைமடவார் மயலுண்டு விதூரன் முன்றி, லிருந்துறையிலுணவெல்லாந் தன்னகட்டுக்குண்டவன்ற னெண்ணமாழ்க, வருந்துறையுளோரெல்லா மயனீங்கி யன்பினா னந்தமல்கப், பெருந்துறையினிடைமூழ்கிக் குருந்தினிடைவிருந் தோன்றாட்பேணிவாழ்வாம்.

## நந்திகேஸ்வரர் துதி.

மசவண்ணப்பண்பொருவி மகியுளோர் மறைமுடிவாழ் வள்ளருளி, னிசவண்ண முதுக்குறைவுற்றிட வடியர்க்கடிமையுறு நேயம் பொங்கத், தசவண்ண வங்கமுறு கல்யாணபுரியினிடைச் § சாதமுற்ற, வசவண்ணப்பெருமானந்திகேச்சுரன்மலர்த்தாண் மன்னிவாழ்வாம்.

## சத்தமாதர்கள் துதி.

மோதரெனுமூவருக்கும் யாவருக்கும் விறலளிக்கு முதல்வி யாகி, வேதரெனவுரைதருவோர் விளம்பரியதத்துவமாய் மேலைப்பாலாய்ப், பூதரமுங் காவணமும் புடைகொள் தழுதாழை நகர்ப் பொலியுஞ்சத்த, மாதரெனுமுமைதுணைகொள்பாதமலராதரவின்வணங்கிவாழ்வாம்.

## சிவப்பிரகாசசுவாமிகள் துதி.

அறைமங்கலத்தமிணீயேகோடலருட் பெருக்கிற்கழகதன்றா லிறைமங்கலச்சொல்லாலியம்பொனாப்புல்லறிவினேனையேற்கு, நிறைமங்கலப்பொருளாய் நிகழ்த்துதமிழ்கூரவருணோர்ந்தளிப்பத் துறைமங்கலச் சிவப்ரகாசப் பேர்க்குரவவுனைத்தொழுதுய்வாமால்.

## சண்டேசுரநாயனார் துதி.

திடத்தோடு நினைக்கண்டார்க்கெனைக் கண்டபலனன்றிச்சேராரென்று, விடத்தோடுபுணர்களத்தான ளித்தபெரும்பதவிகண்டு விழைமாலேங்க, நடத்தோடு தரிசிப்ப வானந்தப்பெருக்கினிடைநண்ண நாத, னிடத்தோனை யென்றுந்தன் வலத்தோளிற் பெற்றோன்றாளிறைஞ்சிவாழ்வாம்.

---

§ சாதம்—பிறப்பு

கடவுள்வாழ்த்து.

## அவையடக்கம்.

நறும்பெருமறைகள்யாவு நவிலொணாத்திருப்புன்கூ
ரூறும்பெருஞ்சிவலோகப்பேருத்தமன் கருணைதன்னைக்
குறும்பதிலுயர்வெறும்புன் கொச்சையேன் கூறுவன்சிற்
றெறும் பகிலாண்டம் யாவுமிரைகொள்வனென்னல் ஒக்கும்.

கலையினைமறையைமுற்றுங் கற்றகண்ணாவரேனோர்க
ணிலையினைமதிக்கத்தக்கார் நிகழ்த்தொணாதறுமிக்காதை
யுலைகருங்கொடியைப்போலக் குளறுநானறைதன்மேரு
மலையினை வேர்பறித்துத் தள்ளுறு மசகமானும்.

கலையினர்பாற்சென்றன்றோ கலைக்குற்றங்களைவரென்ப
கலையினைப்புனைந்து சென்னி பாலுறுகலையையுற்றாய்
கலையினைக்கமலமன்ன கரத்தினிலணிந்தபற்பல்
கலையினனன்றோநீயென் கலைக்குற்றங்கலையென்பேனால்.

சங்கையொன்றின்றிச்சாற்றுந்தன்மைதானென்னென்றுன்னிற்
பொங்கிழிவிருக்கினன்றோ புலவர்சொல்லுயர்வுகாட்டு
மிங்குறும்பறையிருக்கின் யாழினுக்கேற்ற மாமால்
பங்கயமாம்பல் கொட்டி மலர்ந்துறிப்படிக்குமேன்மை.

பாயிரம் முற்றிற்று.

## சிறப்புப்பாயிரம்.

சீரமையுந்திருப்புன்கூர்மான்மியத்தைச் செந்தமிழிற்செப்புவாயென், றேரமையவ்வாலயத்தின் றிருப்பணிகணன்கமைய வின்பானாற்றிப், பேரமையுந்தன வைசியகுலமணியாஞ் சிதம்பரவேள்பெட்பினோத, நேரமையும்வீரசைவக் கனகசபையெனுங்கவிஞனிகழ்த்தினானால்.

---

## திருநாட்டுப்படலம்.

இகத்தினின்மறைகளாதி யெனுமுருகேசனாறு
முகத்தினிற்கேள்வியுற்ற முத்தமிழ்முதல்வனென்னு
மகத்தியமுனியேகூறப்படாப்பொலிவமைந்திருப்பின்
சகத்தினிற்சோழநாட்டின் றகைமையார்சாற்றற்பாலார். (௧)

நீள்பலமுகிற்கணங்கணிரையயிராவதத்தின்
கேளுறவானிற்சென்று குரைகடல்கெழுமியுண்டு
மீளுறத்தன்னுடேற்றுப் புரப்பதுவிழைவுபெற்று
வேள்விநாயகனுடன்னான் மேவுருக்கொண்டுமீண்ட. (௨)

சையமால்வரையின்மீது சயிந்தவந்தன்னினின்று
மெய்யதாஞ்சிவாலயத்தி னறத்தினைவிழைவுற்றார்போற்
பெய்யுமாறுருமியார்த்துப்பெய்தனவெள்ளம் பொங்கி
வையநாற்றிசையுந்தாம்பால்விசித்தெனவருவிமல்கும். (௩)

வரையினிலுதித்தநங்கை தரையினின்மருவலன்றி
வரையினில்வாழ்வுண்டோவென் றுருநொடிவரைநில்லாம
லரையுறு*காகதுண்டஞ் சாந்தம் பொன் கலையனைத்தும்
விரைவொடுவரன்றி மாமியிற்செல்வாள்போலமேவும். (௪)

மலையுறுவெள்ளமென்னுங் குழவிபாலாசைமன்னித்
தலையுறுமுலைப்பாலன்றித் தக்கபாலையிலுற்றோங்கி
நிலையுறு மருதப்பாலப்பாலெலாங்கலப்பானேர்ந்தே
யலையுறுகடற்பாலுண்டேயாயிடையமருமன்றே. (௫)

நிலமேலேயுதித்தனான்றே கொழுனன்மீதுறுநேயத்துக்
கலகாலேயளக்கற்பாற்றோ வம்புயத்தமர்வோன்றானு
நலகாலிற்சிலம்புசூழ்ந்து நறுந்தடம்பண்ணைமேவிப்
பலகாலால்வாவிச்சென்று பரவைநாயகனையுற்றாள். (௬)

திவளொளிமணிவில்வீசத் திரளுறுபண்ணையின்சார்
தவளமாவொளி வெள்ளேறு தக்கசெந்நிறத்தவேறு
குவளையினிறத்தவேறு குழுக்கொளமள்ளர்யாவு
நவமணிமாலைபோன்று நதியவேர்நடத்தினால் (௭)

---

* காகதுண்டம்—அகில்.

ஆற்றினைக்கவராரண்டத் தமர்தருமுகிலைவெஃகார்
சேற்றினைப்புரிவரேவல் செய்யெனுமுன்னஞ்செய்வர்
நாற்றினைநடுவர்வேண்டும் நாரத்தைநண்ணவாப்பர்
காற்றினைக்கடுப்பவெங்குங் கண்ணெனக்காப்பரம்மா (அ)

செந்நெலே கன்னலாகச்செறுவினிற்செழித்துநின்ற
கன்னலேகமுகமாகக்கமுகமேதெங்கதாக
வின்னலேபுரியவந்தவிண்ணடைசெவ்வல்லிநீலம்
பின்னலேகளைகட்டாகப்பெரிதுமேவோம்பாநிற்பர். (கூ)

கீழோருக்கிருக்குமிந்த விறைப்பெனக்கிளைமேற்காட்டித்
தாழ்வாரேமேலோரென்னக் கதிர்த்தலைதாழக்காட்டி
யாழ்வார்கடமக்குஞ்சைவர் தமக்குமேபெரியோர்க்கன்பின்
வாழ்வார்களிற்றென்றோதி வணங்குமிப்பைங்கூழெல்லாம் (க0)

அரிபடுமமையத்துக்கூ னிரும்பினையுங்கைகொண்டே
யரிபடுமென்றேயாங்காங்கரிபடவமைப்பரன்னோர்
விரிபடுங்கதிர்கடம்மைக் குவிப்பவர்மென்மேலாகத்
தெரிபடக்கிடந்தவற்றைக் களமுறச்சேமிப்பாரால் (கக)

நன்புலத்தார்கண்மன்னர்க் காறிலொன்றமையநல்கித்
தன்புலத்தமையப்பண்டி தனிற்கொடுசமையச்சேர்த்தே
தென்புலத்தார்கடெய்வம் விருந்தொக்கலெனச்செப்
பைம்புலத்தார்க்குமாற்றியயர்ந்தனரறிவின்மிக்கார். (கஉ)

ஐந்திணைநிலத்தினுள்ளுமணிநிலமாயமைந்த
மைந்திணைப்பெற்றேபற்ப னதியுறுமருதக்கோமா
னிந்திரன்றெய்வமாகவிந்திரைமேவிவாழுஞ்
சுந்தரமிக்கமல்கித்துறுவதுசோழநாடு. (கங)

புலம்பொருளேவலென்றுபுகலுமூன்றினுக்குமுன்ன
நலம்பெறவிருக்கினன்றேவிரண்டுமேநண்ணுமென்று
மிலங்குறுமேனைநான்கி லேதெனப்பனுவலாட்டி
துலங்குவெண்கமலமேவித் துறுவதுசோழநாடு. (கச)

நகைநிலாவேணியெம்மா னண்ணுறக்கயிலையாதி
வகையிலாறைந்திரண்டி லல்லதுமருவுறற்கே

தகையிலாதமைவமென்றேபொன்னியினுருகுவாய்ப்பத்
தொகையிலாச்சினகரங்டோய்வதுசோழநாடு. (௧௫)

வல்லரும்பனையகொங்கைமாதொருபாகன்சென்னி
யொல்லுறும்புகழேயன்றிப் பகீரதிக்குயர்வுண்டேயோ
தொல்லருங்கணேசனுக்கக் கங்கையின்பவந்தோய்ந்தோட்டுஞ்
சொல்லரும்புகழ்கொள்பொன்னியுடையதுசோழநாடு. (௧௬)

மெய்திடமென்றேயெண்ணிமேவுறுஞ்சனனவாரி
கொய்திடக்கேழ்வியுற்ற குழுக்கெலாம்பேரானந்தஞ்
செய்திடவெங்கோமான்றன்செவியிடைத்தேவாரத்தேன்
பெய்திடமூவர்வந்துபிறந்ததுசோழநாடு. (௧௭)

மேரெனும்விற்கரத்துவிமலனுரெட்டெட்டென்னுஞ்
சீருறுலீலைசெய்துசிறந்தகூடலின்பதிக்கண்
பேர்வரகுணனுமென்னும்வழுதிதான்பெற்றிருந்த
தீர்வருபழிதீர்ந்துய்யச் செய்ததுசோழநாடு. (௧௮)

இந்தெனுநுதலாள்பாகத் தெம்மிறையியைய்த்தக்க
மந்திரமெவைக்குமேலாப் புகழுறுமறைகள்போற்ற
வந்துறுதிருவாரூரே முதலமண்ணுதிவாய்ந்த
வைந்தெனுந்தலத்தையுங்கொண்டமைந்ததுசோழநாடு. (௧௯)

வேறு.

தோற்றமேவுமித் தூயநன்னாட்டினி
லேற்றமேவுமறமுநல்லின்பமுஞ்
சீற்றமேவருந் தீமையிறேவரைப்
போற்றன்மேவும் புலமையினோருக்கே. (௨௰)

சோலையெங்குந் துறுவனதோகையே
மாலையெங்கினு மாக்களதோகையே
சாலையெங்கினுந் தக்கவரம்பையே
வாலையோர்கொள்வர் நீதிவரம்பையே. (௨௧)

மாலையெங்கும் மலிவனவண்டுகள்
சாலையெங்குந் தரும்பரிவண்டுகள்

வாலைமங்கையர்செங்கையும்வண்டுகள்
சோலையெங்குந் துறுவனவண்டுகள். (௨௨)

நடைதனக்கிணை நாட்டிறிலன்னமே
புடைகொள்பண்ணைநெற் போரினிலன்னமே
மிடையுமாதர்கள் மெய்ந்நிறஞ்சொன்னமே
யிடையிலாரிவர்க் கீடெனச்சொன்னமே. (௨௩)

கரங்குவிப்பர்பெரியரைக்கண்டதே
மருங்கின்மாதர்கள்வாய்மொழிகண்டதே
தரங்கமேவுந்தடமெங்குஞ்சங்கமே
யரங்கமெங்குமருந்தமிழ்ச்சங்கமே. (௨௪)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் (௪௭)

## திருநகரப்படலம்.

இனையதாகியவளம்பல விளையுமிந்நாட்டிற்
புனையுநீளுறுப்பளவில வென்னவேபொருந்த
நினையவேறுவேறுள்ளன பதிபலநெருங்கி
வனையுமாமுகத்திருப்புன்கூரணியையார்வகுப்பார். (௧)

மனையைச்சார்ந்தவர் தமக்குமம்மனையின்றித்துறவின்
முனையைச்சார்ந்தவர்தமக்குமேமுற்றினும்புரிந்த
வினையைத்தீர்த்தருட் பாக்கியமளிக்குமேதகையால்
வினையைத்தீர்த்திடுந் தலமிஃதெனவிளம்புவரால். (௨)

இந்திரைக்கிங்கோரிருப்பிடமானவிப்பதியின்
சுந்தரத்தினைநோக்கியே யவ்வியந்தோன்றி
வந்துமிப்பதிக்கேயிணை பெறுமையின்வானே
யந்தரத்ததாயாகுமே யிதனையென்னறைவாம். (௩)

சேணுவாகியவுலகமேவேண்டியசெல்வங்
காணலாவதோருருவொடே யாந்தரல்கண்டே

நாணுலாவிய நெஞ்சினிலவ்வியநணுகி
யூணுறக்கமற்றுயிதின்வேறுண்டோவுரைக்கின். (ச)

பாற்கடற்றிரைதந்தவவ் வமுதலாற்பாரின்
மேற்கடற்பெறுமமுதமும் விண்ணுலாம்வரையின்
பாற்கடற்பெறுமமுதமும் பழுவத்தினமுது
நாற்கடற்குளா ரமுதமுண்டோவிணைநும்பால். (ரு)

விண்ணிலைந்தெனுந் தருவலால்வேறுளதேயோ
மண்ணிறைந்தசெங்கரம்பைக்கும் வழங்குவர்நாம
மெண்ணிறந்தனகற்பகம் வேண்டிவவீந்து
நண்ணலாலுயர் பெறுமெனுந்திருப்புன்கூர்நகரம். (சா)

புகழ்மைமிக்கதாலெந்நதி யினுந்திரைப்பொன்னி
மகிமைமிக்கதுமலரினிற் றிருவுறைமலரே.
சிகரியின்கணேமிக்கதுசெம்பொன்மா மேரே
நகரின்மிக்கது நாமெனுந்திருப்புன்கூர்நகரம். (எ)

சொன்னிதானமா யானென்றுசொன்னதுகேண்மின்
பொன்னிதானமாய்ப்புகலுறும் புகழ்கொளிந்நாட்டை
சென்னிநாடெனக்கூறலாற் சென்னிக்குட்சிறந்த
நன்னிதானங்காண் கண்ணெனுந்திருப்புன்கூர்நகரம். (அ)

பொன்னிநாட்டுக்குட் கற்பகத்தருவையேபுகழ்வர்
கன்னிநாட்டுக்குக் கற்பகமுண்டுகொல்காணின்
முன்னிநாட்டுக்கு நகர்க்குமெய்ப்பொருளுமீமுதன்மை
யுன்னிநாட்டுறுங் கற்பகந்திருப்புன்கூருறுமால். (கூ)

மலையசத்துமாதேவிமுன் வவ்விமாநிலத்தி
னிலையைசத்திடாதி ருத்தினனேர்கிலாதோடி
யிலையசைத்திலை யிலையெனவியம்பலென்னென்று
தலையசைத்திந்தச் சோலைவிண்சோலையைச்சாரும். (க0)

ஆணியாகியபொற்கலசங்கள்கொண்டலகிற்
பூணுலாவியகலைகொண்டு நூல்புயல்பொருந்திச்

---

க0-மலையசத்து உமாதேவி· தென்றல் நாட்டுக்குரியமீனாக்ஷி.
மலையசம்—தென்றல்.

சேணிலாவுறுமெய்யொடு மன்னத்திற்சிறந்தே
வாணிநேரொனப்பிறங்குறு மாமணிமாடம். (கக)

அன்னமேலுறக்கொண்டுநற் பொறியெழுத்தமைத்துச்
சென்னிநான்முகம்படைத்துறு சிருட்டியைத்தேர்ந்து
புன்னியைத்திருத் தாலத்திற்கொடுமுறைபரவி
மன்னியேயயன் றனைநிகர்த்தனமணிமாடம். (கஉ)

பூதலத்திணையிடையுற்றுப் பாற்கடற்பொலிந்தே
யோதுசக்கரத்தொடுதிரு வினையுரத்துற்றுக்
காதறன்னிலாழ்வார்க்கரு டந்துபொற்கலைகொண்
மாதவன்றனைநிகர்த்தன மாமணிமாடம். (கங)

உவந்துளத்தினிலடியர்வேண்டுனவெலாமுதவி
நிவந்தபாண்டியன்செல்வமேற்றங்கயனீண்டு
தவந்தபக்கெனப்பசுமையாய்த் தடாதகையான
சவுந்தரத்தெம்மோய் தனைநிகர்த்தனதருமாடம். (கச)

மறையவர் வீதி. வேறு.

காரிகைநன் னூன்மேவிக் கருதலங்காரமேய்ந்து
சீரியமணிபொன்னூறு மங்கலப்பொருடிகழ்ந்து
பாரியவனப்புமல்கி வண்டொடைமலிந்துபாவி
னேரியலமைந்தமுன்னோர் மறுகின்சீரெடுத்திசைப்பாம். (கரு)

மறுகினில்வீரம்பனைத்தும்வாய்ந்து நன்மகாருக்கெல்லா
நெறிமுறைமறைபயிற்றி நிகழுமுத்தீவளர்த்து
வறுமைவந்தெய்தாதாலே வரம்பிறவொழுகாதென்றுஞ்
செறியுறுமும்மலத்தின் றீயினையவிப்பரம்மா. (கசா)

வைசியர்வீதி. வேறு.

பணம்பெற்ற பணிகண்மிகக் கொண்டு கலையோடுகோசிகம் பரித்துக், கணம்பெற்ற வெள்ளிதங்கம்பலகொண்டு கான்மாற்றி நகதிகமென்று, குணம்பெற்றமாணிக்கமுதன்மணிகள்பலவிற்றாக்கூடலுற்று, வணம்பெற்றசுந்தரனுக்கிணையாயின்வணிகரையென்வகுப்பனம்மா. (கஎ)

## வேளாளர் வீதி. வேறு.

ஆழியைநிகர்த்தசெல்வ மமைவுற்றேயடியர்க்கென்று
மூழிவந்துற்றபோதுமுறைமுறையொருவுறா
யேழிசையறிதல்கல்வி பயிற்றலின்படைதலேய்ந்து
மேழியின்கொடிவளர்ப்போர்வீதியென்விளம்புகிற்பாம். (கஅ)

### வேறு.

நட்டாலுமிவர்போன்று நட்புறவருளர்கொல்லோஞாலமீது
தொட்டாலுஞ்செயற்கரிய காரியமுமுற்றுவிக்குஞ்சூட்சியுற்று
ரிட்டாலுமிவர்போலவருமையறி பெருங்குணத்தரெவரேனோரைக்
கட்டாலுமினியொன்றுங் கருதாவண்ணங்களையக்காண்பரன்றே ()

கங்கைமரபினில்வந்தே யறம்வாய்மைதவமானங்கடைப்பிடித்துப், பங்கயத்தாளருளடைந்து கவிவலர்க்குத்தார்கொடுத்துப் பரிவுற்றோர்க, டிங்கள்கதிருள்ளவரை யெழுபான்மூவர்களொரு சொற்றிறம்பாமைக்கே, தங்கடலைதந்தமர பினர்பெருமையாவரேசாற்றற்பாலார். (உ0)

மன்னவர்கண் மன்னனுக்குச்செங்கோன்மைமுடிகொடுக்கும் வண்மைமிக்கார், தென்னவர்க்கும்விண்ணவர்க்கும்வந்தபகைமாற்றிமுகில்சேரத்தந்தே, யன்னவனுற்றருங்கதலி கமுகமுகு சாலிதெங்கென்னைந்தும்பெற்றோர், முன்னவர்க்கும்பின்னவர்க்குமிவரலாலுய்வுண்டோமொழியுங்காலே. (உக)

### பரத்தையர் வீதி.

சமையவிசேடத்தோடு நிருவாணமென்பதனைச்சமையாசாரி, யமையவுரைத்தருளுதல்போலாடவர்கண்மனங்கவற்றவவர்தனித்தல், சமைபமவர்கரந்தொடலேவிசேடமரைந்துகினீத்தருனிர்வாணங், தமையினிதுகாண்மினெனச்சித்திரந்தீட்டுங்கணிகைத்தானஞ்சொல்வாம். (உஉ)

ஆடவர்கண்மனந்தழுவி யலங்கன்மார்பினைத்தழுவியணிவார்கொங்கைக், கோடிகத்தைநெகிழ்த்துமகிழ்கொடுப்பவராய்ப்பொருள்பறிக்குங்கொள்கையோராய், நாடகத்தைக்காட்டிப்பாற்கின்

ணமாற்றிகொண்டதடிப்புக்காட்டி, விடமையத்துறவளிப்போர்
விறன்மிக்கார்பெருமையையார்விளம்பவல்லார். (உரு)

! அறவினையுற்றோரேனுமயன்படைப்புற்றோரேனுமமலன்று
ளுக், குறவினையுற்றோரேனுஞ் சித்தியையுற்றோரேனு மொருங்
குண்மைக்கண், டுறவினையுற்றோரேனு மனலயப்பட்டோரேனுந்
தோற்றங்காணிற், பிறவினையற்றவர்க்கேவல்செயத்தொண்டுகொ
ண்டாளும்பெற்றியோரே. (உச)

வேறு.

ஓதலார்க்குமே யொண்ணுறுத்திருவிழாவுற்ற
போதலாதவெப்போழ்து மாலயன்முதற்புலவர்
காதலாற்பரவலிற் சிவலோகத்தைக்கடுக்கு
மாதலாற்சிவலோக நாயகனெனவறைவர். (உரு)

செப்புங்காலைக்காளுடு காத்தானெனுந்திருப்பேர்
வைப்பமேவியவிந்திரன் கிட்டிசைமகிழ்வா
லெப்பெண்பாலுமேனகை யரம்பையரெனுமெழிலா
ளப்பொன்னுடைத்தென்பதற் கையமென்னறைவீர். (உசா)

உம்பருக்குமாத்துறவினார்தங்கட்குமுறற
விம்பருக்குமப்பொழுதினு மெய்ப்பறவெவணுங்
கும்பமுற்றபாறதியறுசுவைப்பதங்கொடுத்த
வெம்பிராட்டிமுன்னருளறச்சாலையையேய்க்கும். (உஎ)

வேறு.

தொழுதகுதலங்கட்கெல்லாந் தூயதிஃதெனத்தெரிப்பப்
பழவினைதீர்க்காரந்த வைத்தியநாதர்பாரின்
விழவினைக்காணுவோர்க்கு மேலதாய்மேல்பாலுற்றே
பழவினைதீர்த்தாரென்னப் பகருதல்பாராரரோ. (உஅ)

வந்தியைவுற்றபாண்டி வரகுணன்பழிதீர்ந்துய்ய
முந்தியையுற்றேமீண்டு மென்றரிசனத்தைமுன்னு
வந்தியைப்பகலேயன்வீண் விரளுதிரார்மினென்ன
நந்தியைவிலக்கிக்காட்டு நன்றியார்நாடாதாரே. (உகூ)

உகூ- விரளம்—நீக்கம்.

நாடிமேல்வீடுகேட்டி நண்ணும்வானவர்கள்காண
வாடிமேலாடியாங்கே யமையதிரேகந்தன்னைப்
பாடிமுற்றுறுமோவீண்டு பங்கயன்பகர்ந்தபோதுங்
கோடிநாட்செல்லுமாற்றுற் செல்லினுங்கூறொணுதே. (௩0)

தனந்தனையிச்சையற்றார் தம்மனங்குவியுமன்றித்
தனந்தனிலிச்சையுற்ற தமியனேன்றகைக்கற்பாற்றே
மனந்தனிலிச்சையற்ற மதிமிகவுடையனுன
வனந்தனும்பதுங்குவானே லவணிலையறிவர்யாரே. (௩க)

தீதினையகற்றவிண்ணோர் திருப்புன்கூர்நகரமேன்மை
வேதனையுரைநீயென்ன வேதனைசெயாதீரொன்றே
பேதினையெடுத்துக்காட்டான் வெள்ளனமிறங்காதேயோர்
போதினுளொளித்துளானேற் போதினுட்புகல்வர்யாரே (௩உ)

ஆகச்செய்யுள். (எக)

---

## நைமிசப்படலம்.

நேமியைக்கலையென வுடுத்துநீளரை
நேமியிற்புண்ணிய நிரம்பியுற்றிட
நேமியன்முதற்றவ நியமமுற்றிடு
நேமிமாவனத்தின்சீர் நிகழ்த்துவாமரோ. (க)

வெண்ணிறநீற்றினை வீதிகொண்டனர்
கண்ணிறைமணியினைக் கவினக்கண்டன
ரொண்ணறுந்திரியென வுரைக்குந்தண்டின
ருண்ணிறையன்பின ருலப்பிறொண்டினர் (உ)

விடையினரருள்பெறு விமலர்தாளவர்
நடையினைச்சாபத்தி னவீபுமானவ
ருடையினைச்சீரையா யுடுத்தலானவர்
சடையினைக்கரகத்தைத் தாங்குமானவர். (௩)

அண்டத்தைப்படைத்தவ னயனுமாதலாற்
றண்டத்தையுடையவன் பாலிற்சார்ந்துளங்
கொண்டத்தையுரைத்திடிற் கூறுவானென
விண்டத்தையாவரும் விழைந்துளாரரோ. (ச)

ஒருங்குறவனைவரு மொன்றியிண்டையான்
மருங்குறவவனடி வணங்கியீட்டலுஞ்
சுருங்குறவுரையினீர் தோன்றலென்னெனப்
பெருங்குறைதனைத்தவர் பேசுவாரரோ. (௫)

நவம்புரியிண்டையின் மேயநாதனே
யவம்புரிதரும்புல னைந்தடக்கியே
தவம்புரிதரத்தகு தாவங்காட்டியே
சிவம்புரியருளினைச் சேர்விப்பாயென்றார். (௬)

வரத்தினைக்கேட்டவர் மகிழுறும்படிச்
சுரத்தினைக்கரங்கொடு சலசம்வாழ்பிரான்
றரத்தினைக்காட்டனே மிமைச்சமைத்துந்தன்
னுரத்தினைக்காட்டென வுய்த்துச்செப்புவான். (௭)

நீவிரிந்நேமியோ டெய்திநேமிதான்
பூவிரிகானெலாம் புக்குறுமலே
காவிரிநாடன்ன ககனங்காட்டுறு
மாவிர்நற்றவகிறைவாற்றற்கென்றனன். (௮)

நேமிசென்னெறியினை யெய்திநண்ணினார்
நைமிசைதகதவமெலாங் கண்டபோற்களிப்
பைமிசையெய்தினர் பதுமன்றந்ததா
நைமிசவனமென நவிற்றினாரரோ. (௯)

திங்களைச்சென்னியிற் சேர்த்தராவினை
யங்களைந்தேபசுங் கொடியோர்பாலமைந்
தெங்கணுமுள்ளிய விடையையேய்தலாற்
சங்கரனென்னவே தயங்குமவ்வனம். (௧0)

நான்முகத்தினுமறை வேள்விநண்ணலா
னான்முகனன்னமர் திரங்கணுடலா
னான்முகந்தனிலுங்கா யத்ரிநாவினா
னான்முகனென்னவு நண்ணுநைமிசம். (௧௧)

௫ - இண்டை.—தாமரை.

வள்ளறந்தாளிணை மருதனோன்பின
றெள்ளவிவ்வேள்விக ளியற்றுவார்மகப்
பிள்ளைகண்மறைபயில் கழகம்பெற்றபைங்
கிள்ளையுமறைமொழி கிளக்குமாலரோ. (௧௨)

மேகமேபொய்ப்பினும் விரிதிரைக்கட
லேகமாய்க்குன்றினு மூவிரண்டெனும்
பாகமார்பருவத்தும் வளம்பயத்தலான்
மோகமார்நிதியவைப் பெனவுமுன்னுவார். (௧௩)

மீன்பிறழ்கண்ணினாள் பங்கன்சென்னிமேல்
வான்பிறையொடுமரா மருவல்போலவே
கான்பிறழ்பகையொரு கணமுமின்றியே
மான்பறழ்புலிமுலை யுண்டுவைகுமால். (௧௪)

அகரமேமுதல்மந் திரமனேகமாய்
நிகாவினிலோம்பவேள் விகண்ணுமுங்கலால்
வகாவகைத்தாமத்தை மஞ்சென்றெண்ணியே
சிகாவளம்சிறைவிரித் தாடல்செய்யுமால். (௧௫)

வேள்விகணிரம்பவும் விளங்குமோருழை
கேள்விகண்மறைபயில் கிடைகளோருழை
நீள்வினையருச்சனை நியமமோருழை
நாள்வினைதவமென்றே நடத்தலோருழை. (௧௬)

பற்றறுத்தோருக்குப் பவமொசித்திட
முற்றுறுபரம்பரன் முன்னினானெனக்
கற்றவர்யார்க்குமெக் கலையுந்தேர்ந்திடச்
சொற்றிடநல்லநஞ் சூதன்றோன்றினான். (௧௭)

தோன்றலுமடவியிற் சுரந்தபாறரு
மான்றனைக்கண்டகன் றவாவுற்றென்னவே
சான்றவரனைவருந் தவமியற்றியே
யீன்றநற்றாயென வெதிர்கண்டாரரோ. (௧௮)

முருக்கிலைச் சுருக்குகை முனிவர் நாதனுக்
கருக்கிய முதலியக் கடன்க ளாற்றியே
யிருக்கென வாதனத் திருத்தி யேவருங்
குருக்களை யிறைஞ்சுறக் கூறுகி ஞரரோ. (கக)

வீழ்ந்தனர் காதலங் கடற்குண் மெல்லடி
தாழ்ந்தனர் தமதுளச் சங்கை யாவையும்
போழ்ந்தன ராமெனப் புனித னின்னருள்
வீழ்ந்தன் ரினியென்றே மறுக்க மேனெறு. (உ0)

அவ்வயிற் சௌநக ராதி மாதவர்
செவ்வயிற் கலியுகஞ் சேர்ந்த தன்மையைக்
குவ்வின ரெண்ணியே குறிக்கொ ளாமக
மெவ்வமில் வகையினை யியற்றற் கெய்தினார். (உக)

பத்தொடி ரண்டெனும் பருவந் தன்னிலே
மெய்த்தவர் கூடியே யிழைக்கு மேன்மைசேர்
சத்திர வேள்வியைச் சமைத்தி டும்படி
யுத்தமர் பலருமே யுவப்பச் சூழ்ந்தனர். (உஉ)

ஆயவை நிகழ்வுறு மமையந் தன்னிலே
மாயவ னாகியே வருவி யாசனுந்
தூயவ னிடைப்பல புராணத் தொன்மையை
நேயமாய்க் கேள்விமா ணவக னோர்ந்துளான். (உ௩)

புண்ணிய நதிகணீர் பொலிவி னாட்டினர்
மண்ணினி கழூற்ற வருத்தம் வாட்டினர்
உண்ணிய கந்தமூ லங்க ளூட்டினர்
தண்ணிய முகமனுத் தகுசொற் சூட்டினர். (உ௪)

எப்புரா ணந்தமென் னதிபு மெங்கணு
மெய்ப்புறு தலங்களின் மெய்ம்மை யாவையுஞ்
செப்புறப் பாலவா நின்னின் யார்தெளிந்
துப்புவிக் கண்ணெமக் கோது வார்களே. (உ௫)

ஆதலாற் சையமால் வரையி னண்ணிபே
போதலாற் புண்ணியப் பொன்னி பாங்கரி

ளேதலாம் பதிகளி னுயர்பு கேட்டுய்யக்
காதலார்ந் தனமவை கழறு வீரென. (௨௬)

திருப்பதி பூசைமுன் செய்து தீமையை
யரிப்புறு தலமுமா னந்தக் கானமும்
பருப்பதர் திருவெண்கா டதுவும் பண்புறு
திருப்புகழ் விரிப்பருள் செய்யு மென்றனர். (௨௭)

விரிஞ்சனே யாதிபுத் தேளிர் மேலவாம்
வரஞ்செயப் பெற்றிடு மிகியி னுள்ளெனைப்
புரஞ்சிறப் பனைத்துமே பொம்ம லுற்றிடு
கரஞ்சமா வனதிதின்சீர் கழறு கென்றனர். (௨௮)

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் (௧௦௭)

## நைமிசப்படலம்.

சவுனகர் காசிபர் கவுசிகர் கௌதமர் பரித்துவாசர் ஜமதக்கினி வசிஷ்டர் அகஸ்த்தியர் முதலிய முனிவ்ரர் யாவரும் கூடி, நாமெல்லோரும் தவஞ்செய்வதற்கு தகுந்தவனம் யாதென்று தம்முள் வினவி சகலாண்டங்களையும் படைத்தவர் பிரமதேவராதலா லவரால் தெரிந்துகொள்ளலாமென்று சத்தியலோகம்போய்ப் பிரமதேவரைக்கண்டு வணங்கலும், அப்பிரமதேவர் மிகக்களிகூர்ந்து நீவிர் வந்தகாரியம் யென்னென வினவ, ரிஷிபுங்கவர் பிரமதேவர் வதனநோக்கிச் சர்வாண்டங்களையும் சிருட்டித்தமகானுபாவரே! யாங்களெல்லோரும் தவஞ்செய்துய்யும் வண்ணம் தபோவனமொன்று கூறியருளல்வேண்டுமென்று விண்ணப்பிப்பாராயினர். அதற்குப் பிரமதேவர் மிக மனமகிழ்ச்சியோடுமுனிவர்களைநோக்கி 'நீவிர் கேட்டசெய்தி மிகவுநன்று' மென்று தன்கையிலிருக்கும் தருப்பையை வட்டவடிவாக்கி "இச்சக்கரஞ்செல்லும் நெறியே செல்லுவீராயின் உங்களுக்குத் தவஞ்

செய்யும் வனத்தைக் காண்பிக்கு'மென்று அச்சக்கரத்தைப் பூமியின்மீது உருட்டினார். தபோதனர் அச்சக்கரஞ்சென்ற நெறியே சென்று ஓர் வனத்தையடைந்தனர். அவ்வனமானது நேமியால் காண்பித்ததால் நைமிசவனமென்றாயிற்று. அங்கு மகரிஷிகள்கூடி வேதாகமங்களை முறையேயாய்ந்து யாகாதிகிருத்தியங்கள்புரிந்து தவமியற்றி வசித்தார்கள். அப்போதவண் சகல வேதாகம புராணங்களும் தேர்ந்த சூதமகாரிஷியானவரெழுந்தருள, எதிர்கொண்டு பசுவைக்கண்ட இளங்கன்றுபோல மிகவும் ஆவலுடன் தோத்திரஞ்செய்து வணங்கி அர்க்கியபாத்திய முதலிய உபசாரங்களைச்செய்து ஆசனத்திலிருத்தி "தங்கள் வரவு அடியேங்கள்செய்த பெரும்பாக்கிய" மென்று குதுகலித்தனர். அவ்வுழி சவுனகாதிரிஷிகளெல்லாம் பன்னிரண்டாண்டு புரியும் யாகத்தைப்புரிந்து மகரிஷியைச்சூழ்ந்து "சகலபுராணங்களும் தலத்தின்மேன்மைகளும் மொழியத்தக்கவர் தம்மைவிட உலகின்கண் யாவிருக்கின்றனர்? ஆதலால் எங்களுக்கு யாவையும் அருளிச்செய்யவேண்டு"மென்று வினவியபடியே தன்னாசிரியனாகிய வியாசரை வணங்கி மொழிந்தருளினார். அவற்றைக்கேட்ட மகரிஷிகள் "உலகின்கணுள்ள யெல்லாத்தலங்களினும் மிகவிசேடமுள்ளது கரஞ்சவனமென்றமையா லவ்வனத்தின் பெருமையை யடியேங்களுக்குச் சவிஸ்தாரமாக விரித்துக் கூறியருளல்வேண்டு" மென்று வினவ சூதமகரிஷியானவர் சொல்லத்தொடங்கினார்

## தலவிசேடப்படலம்.

அடியவர் குறைவு தீர்த்தாண் டருண்முத லடிகள் போற்றி
முடியமர் வியாசர் பாத முண்டகத் துணைகள் போற்றி
வடிவுறு காப்பை வீதி பாலத்தின் வனைந்து கொண்ட
வடிகளா னோர்க்குச் சூத மாமுனி யறையு லுற்றார். (க)

வாரண வாசிராம னருச்சித்து வழிபட் டேத்து
மாரண முதல்வன் காஞ்சி மாவடி யமர்ந்த வம்மா
னாரணன் முதலோ ரேத்தும் பொன்னி நன்னதியின் பாங்க
ரோரணத் தலங்கண் மேன்மை யனைத்துமே யியம்பிப்பின்னர்.(உ)

கரஞ்சிரங் கூப்பிக் கண்ணீர் கம்பலை ததும்பிக் கையை
யுரஞ்செறிந் துறவே கூட்டிக் குடந்தம்பட் டொருங்குறைக்குங்
கரஞ்சமா வனத்தின் சீரைக் கட்டுரைத் திடுவன் கேட்டுத்
திரஞ்செவி வாயுண் டாவ தீருவி ரென்றான் செம்மல். (௩)

தலையினா னடந்துசெல்லுந் தகைமைபாம்ப சுத்தன் மந்தான்
கலையினா கரத்தான் காதை கைலைக்குக் காலாற் செல்ல
லலைவெலாம் பறந்து செல்லல் சிவபூசை யடியார் பூசை
தொலைவறு வாய்வா மெண்ணு மனஞ்சுத்த ஞானஞ் சொல்வர்.

விரைவுற நடந்து செல்லும் விதஞ்சிவ காதை கேட்டற்
புரையிலா வறிவா ளர்க்கே யல்லது பொருந்தப் பாற்றே
தரையினி லும்மை யொப்பார் யாவரைச் சாற்று கிற்பேன்
பிரையுறு பாலில் வெண்ணெ யெடுப்பபோற் பெறுவீரம்மா (௫)

கரஞ்சமா வனத்தின் மேவிக் காண்சிவ லோக நாதன்
றரஞ்சொல வொண்ணு மோவச் சதுர்மறை சாற்றற் பாற்றே
நிரஞ்சனன் காதை கேட்கி னிரையஞ்சேர் பவமொ சித்து
வரஞ்செறிந் தளவில் செல்வம் மருவினன் முத்தி வாய்ப்பர். (௬)

பிணியினை விரள வேண்டின் பெரிதுற வாணாள் வேண்டி
னணிதரு செல்வம் வேண்டி னறிதருங் கல்வி வேண்டின்
றணிதரா விபுதர்வந்து தாழ்வுற வேண்டி னந்த
வினையறு சிவலோ கப்பே ரெந்தையை நினைக வென்றும். (௭)

இரசித கிரிக்கு நேராப் பவுத்திர மியைந்த தெய்தி
னரசருக் கரசனாக்கி யருளினை மிகவ ளிக்குந்
துரிசினை யுற்ற பூதந் தொடருறு வகைதொ லைக்கு
முறைசெறி யவ்வ னத்தின் பெருமையென் னுரைப்பனம்மா. (௮)

ஐந்தன்றி மூன்று நாளொன் றூன நாளேனு மார்ந்து
விந்தணி குடிலத் தெம்மா னிருசர ணேத்து வோர்க்கு
வந்தமை பயனிற் றென்ன வகுப்பவ ருளாது கொல்லோ
யைந்திரட் டியச்ச வத்தின் மகப்பய னமைக்கு மன்றே. (௯)

சினகர விமானங் கண்ணிற் றெரிசித்த வளவின் கண்ணே
பனகனு மியம்பொ ணாதபலபல பவமு மாறித்

தினகரன் போலு ளார்ச்சி செறிந்துமீச் சுபமு ண்டாகி
யனகமா முத்தி யெய்தி னதற்கிணை யாதாமன்றே. (க0)

வாரண வாசி காஞ்சி கரஞ்சமா வனமிம் மூன்றும்
பூரண மாந்த லங்க டம்மிலுந் தமமாய்ப் போந்த
மாரண மடையின் முத்தி காசிகச் சியின்வ திந்தால்
காரண முண்மை யன்றோ சிவலோக நாதர்க் கண்ணில். (கக)

உன்னிலு மில்லை வேறு தலமிதற் கொப்பா யூழி
முன்னிலு மில்லை யாண்டிந் சுயம்பென முளைத்திருந்த
பின்னிலு மில்லை மேலாய்ப் பிறங்கிட லுலக மூன்று
தன்னிலு மில்லை கூற வென்னிலு மில்லை தக்கீர். (கஉ)

இத்தலத் துறைவோர் காசி கேதாரம் ப்ரயாகை யென்னு
முத்தமத் தலம யோத்தி புட்கர மொல்கு வாரோ
மெய்த்தவம் பிறவுண் டேயோ பகீரதி மேவியாடப்
பித்தரும் நினைவர் கொல்லோ பயனென்னே பெருந்தவத்தீர். (கங)

வெவ்வலி புரத்த ரேனு மண்ணல்தான் வீத்தல் போலும்
கைவலி மத்த மாவை யங்குசங் கடிதல் போலும்
வவ்வுறு குலிசத் தான்மா வரைச்சிறை மாய்க்கு மாபோல்
எவ்வித பாவ மேனு மிதையுறி னிரிக்கு மன்றே. (கச)

வான்கவிந் திறைஞ்சுங் கைலைச் சிகரமென் னும்பேர் வாய்ந்த
தேன்கமழ் கரஞ்ச மான வனத்தின்வாழ் சிவலிங் கத்தை
யான்கசிந் துரைப்ப தென்னே யறம்பொரு ளின்ப மென்னு
நான்கையுங் கண்டோ ரெய்தி நலமுற்று நண்ணுவா ரால். (கரு)

திப்பிய வருண லத்தைத்தருமைந்து சிருங்கங் கூடி
மெய்ப்புறு மிலிங்கப் பெம்மான் மெய்யடி யவர்கட் கெல்லா
மெப்பொழு தினுமே நோக்கு மளவினே யிம்மை யெய்துஞ்
செப்பிய பயனனைத்துஞ் செறியவே யளிக்கு மன்றே. (கசு)

தவமிகு மிருடர் வேத ரமரர்கள் தருவ சுக்கள்
சிவமிகு பதினொன் றான வுருத்திரர் கதிர்கள் சித்தர்
நவமிகு கருடாதி நாகரே முதலோ ரொருஞ்
சிவமெனு நாதன் றன்னைச் சிந்தியா ரெவரே செப்பீர். (கஎ)

காமியர் புத்தி சித்தி சிறப்புகள் கைக்கொள் வார்கிட்
காமியர்மெய் ஞ்ஞானத்தை முத்தியைக் கடைப்பி டிக்கிற்
றேமிலா தடைத லெல்லாந் தூய்சிவ லோக நாதன்
தோமிலா தருள்வ னென்று சொற்றிட லுண்மை தானே. (கஅ)

வேறு.

பாவி சைக்கப் பயிலுறு மாந்தரை
நாவ சைக்கப் புடுமோ நரரெனக்
காவ சிக்குங் கனகவன் னாட்டினுள்
ளோவ சிக்குறு தேவர்க ளென்பவே. (க௯)

பொன்னை வவ்வி மதுவைப் புசித்தவர்
கன்னி தன்னைக் கரவிற் புணர்ந்தவர்
மன்னு மாதவர் தம்மினை வைதவர்க்
கென்ன பாதக மேனு மிரியுமே. (உ0)

இருது காலத்தி லில்லினைச் சேர்வுறு
தொருவி நின்றவ ரோதுப தேசஞ்செய்
குருவி னில்லினைக் கூடுபவ மெலா
மிரித ரச்செயற் கென்னசந் தேகமே. (உக)

வேறு.

கைத்தலந்தன்னிலுழுந்தளவாகக்கடலினைக்காண்குறுமுனியுஞ்
சத்தியைப்பெற்றமாதவர்சோழன்முதலியதக்கவர்யாரு
நத்தியெஞ்ஞான்றுஞ்சொல்லொணாதானநஞ்சிவலோகநாயகன்பாற்
சித்தியையடைந்தாரன்றியேமற்றத்தேவரையாவர்சேர்ந்தனரே.

கேட்டின்பப்படுமாத்திரத்தில்லைநீத்துக்கிளர்சிவஞானமுற்றீறில்
வீட்டின்பமெய்துவாரெனிற்சிவலோகப்பெம்மான்மேதகுகாதைப்
பாட்டின்பங்கேட்டுச்சிந்தனைசெய்வோருறுபயன்பகர்தரற்பாற்றோ
நாட்டின்பமனிதரென்னினுமீசனென்பதற்கையமென்னவில்வீர்.

மூருக்கலரதனைவிளர்த்திடச்செயும்வாய்மூளரிமாமுகவுமைதன்னை
யுருக்குலைகையினேமணந்திடுகோமான்காதையையுரைத்திடுவோரைக்
குருக்களென்றுன்னவேண்டுனரல்லான்மக்களுளொருவனுக்குமிற்றே

தருக்கினையுடையோர்வாயினிற்புழுக்கள்சரியுமென்றுரை செய்
வோர்தக்கோர். (உசு)

ஆதியிற்கைலையங்கிரிமேயவண்ணலார்நந்திகேசனுக்கங்
கோதியமூவாறும்புராணத்தைச்சனற்குமாரனுக்கவனுரைப்ப
வேதியர்மணியாமன்னவன்வியாசற்குரைப்பவவ்வியாசனெற்குரைத்த
நீதியார்ந்ததையானுரைக்கமேயினதானிமலனென்றேகுறிப்பீரால்

சிவபுராணத்தின்பொருளினையுரைக்கப்புக்கவர்சிறியராயினுங்
கலமதுமிக்கமூப்பினரெனினுங்கௌவைகொள்மிடியர்களெனினுந்
தவமதுபெற்றசான்றவரென்னச்சார்ந்தவர்ப்போற்றுறத்தகுமா
லவமதிப்பாகவெண்ணுதலென்றுமறிஞருக்கடாதெனவறிமின்.

அலகறுநூல்களறிந்தவராயுமறிவமைபவுத்திரராயுங்
குலனருடெய்வங்கொள்கையராயுங்குறிக்கொணுமேன்மையராயுங்
கலைபயிறெளிவிற்கட்டுரைவன்மைகாணருநிலமலைநிறைகோல்
மலரெனுமுவமைகையுலகியலறிவுவாய்ந்தவரேகுருவென்ப. (உஎ)

எழுவினைச் சிறந்த தேசிகனுமென் றிறைஞ்சிய துரோணமா
முனிவன், வழுவறத் தனுமா மறையெலாமுணர்ந்தான் மாண்புற
ச்சனகியா மன்னை, பழுதறவுரைத்த பயன்படா தொழிந்தான்பத்
தெனுஞ் சிரத்தவ னதனாற், றெழுதகுகுரவ ரேவராயினுந் தோ
மிலாக் கடவுளென் றேத்தி. (உஅ)

இரவிவந் தெழுமுன் வழிபடன் முனியா னீறிலாச் சார்ந்தநற்
குணனாய்ப், பருகுவ னன்ன வார்வத்தனாகிப் பாலைபோ லடக்க
முள்ளவனு, யொருதரங் கேட்ட பொருளினையுள்ளத் தொருவுறு
தூக்கமுற் றவனாய், மருவுறத் தக்கான் சீடனுதலினால் வவ்வுவன்
சொலச்சொலத் தேர்ந்தே. (உகூ)

பரவுறு வியாசா சனத்தினை யடைந்த பண்பினர் பரசிவ னுவ
ந்த சரிதமுற் றுறவே கேட்டுறுங் காறுந் தக்கவர் யாவருற் றிடி
னும்புரவுறுஞ் செய்கை யொழுக்க மன்றென்று பகருநூன் மு
றையினைப் பார்த்தே; காணம்யா வையுமே யொழுங்குறக் கேட்
டல் கடனிதைக்கடைப்பிடிப்பீரால். (௩0)

துர்த்தர்களாயுஞ்சினத்தர்களாயுந் தூய்மையில்லாதவராயும் மேத்ததன்னெறியையெய்தினராயும்பத்திமையில்லவராயும் வாய்த்துறுபொறுமைமன்னினரிவர்கள்வள்ளறன்சரிதங்கேட்டுநினு மேதுதபுண்ணியத்தின்பலனடைவாரோவெய்தாருரெனவியம்புவரோ.

நேயமாச் சரிதங் கேட்டுறும் போழ்து நிவந்த வாசனத்தினி லிருந்தோர், வாயச வுருவாய்ச் சனித்து வெந்நரகில்மருவியே ப ற்பலநாளுழப்ப, ராயதோர்வீராசனத்தினிலமர்ந்தோர் யர்ச்சுன விருக்கமாயாவர், மேயவன்போடுபெணிந்திடாதுறைந்தோர் விழ ற்றருவாகுவர்மெய்யே. (௩௨)

சிவகதைநடவாதுறும்வகைபலவாந் தீயவிக்கினமிழைத்தி ட்டோர், நவலருங்கொடியநரகினையுற்று நோதருகேழலாயுதி ப்பர், பவமதுநீங்கமுற்றுங்கேட்டொன்றும் பாலியாதுறைகுண ருக்குத், தவலருமெத்தீங்கெய்துமோயாவர் சாற்றுறத்தகுமருந் தவத்தீர். (௩௩)

வேறு.

என்று சூத முனிவ னியம்பிய
நன்று மேவுறுங் காதை நயப்புறீஇத்
துன்று சௌனக ராதித் துகளறு
குன்று முத்தவ வோர்களி கூர்ந்தனர். (௩௪)

தலவிசேடம் முற்றிற்று.

ஆகசெய்யுள். (௧௪௧)

---

## தலவிசேடப்படலம்.

சூதமகரிஷியானவர் நைமிசாரண்யவாசிகளாகிய மகரி ஷிகளைப்பார்த்து ஓ சௌனகாதிரிஷிகளே! கரஞ்சாரண்யத்தின் பெருமையை உங்களுக்குச் சவிஸ்தாரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருவர் முத்தியடையவேண்டில் கைலயங்கிரிக் குச் செல்லுதற்குத் தலையாலூர்ந்து செல்லுதலை யொக்கும். சிவகோடிகளுக்குச் செய்யும்தர்மம் காலால் நடந்து செல்லுதலை யொக்கும். சிவசரிதம் கேட்குதல் பறந்து செல்லுதலையொக்கும். சிவார்ச்சனை வாயுவேகத்தையொக்கும். அடியவரைப்பூசித்தல்

மனவேகத்தை யொக்கும் ஞானம்பெறாத விலைகளில் சிவசரிதங்கேட்டுக் கைலயங்கிரிக்குச் செல்லுத லறிவாளர்க்கே யல்லது மற்றோர்களுக்குப் பொருந்தப்பாலதல்ல வாகையாலும்மையொப்பாக வாரைச்சொல்லத்தகும். பாலில் வெண்ணெ யெடுப்பதுபோலாகும் நீவிர்வினவினது அக்கரஞ்ச வனத்தி லெழுந்தருளிய சிவலோகநாதர் மேன்மையை வேதங்களாலும் சொல்லவொண்ணாது. இச்சரிதங் கேட்கின் அரோகசரீரத்தோடு இம்மையிற் பலவித போகங்களையும் மறுமையிற் பரமகைவல்யமாகிய மோக்ஷத்தையும் பெறுவரெனின் வேறு கூறுவதென்னை? நோய்நீக்கம், வாழ்நாள், செல்வம், கல்வி, மகப்பேறுமுதலிய இகபோகங்களை வேண்டின் ஸ்ரீ சிவலோகநாதனைத் தியானிக்கக்கடவர். ஒருநாளாவது அத்தலத்துறையி னுண்டாம் பயன் இவ்வளவென்று வகுக்கற்பாலதோ? தூலலிங்கமாகிய கோபுரதெரிசனமாத்திரத்தே தீர்தற்கரிய மகாபாபங்களும் தீமுன்பஞ்சுபோலாம் இத்தலத்துக்கு நிகரானது பிறிதொன்று முக்காலத்துமில்லை யென்பது முக்காலுஞ் சரதமாம். இத்தலசரித்திரஞ்சொல்வோர் ஈசனென்றே எண்ணுந்தகுதியார் மக்களாக்கருதின் பெருங்குற்றம் விளையும். ஆகலின் மிக்கபேரன்போடு முறையாகக் கேட்கக் கடவீரென்று சூதபுராணிகர் சொல்லுகின்றார்.

---

## பிரமதேவர் பூசித்தபடலம்,

---

சொல்லவல்லவச் சூதமுனிவர
னல்லமாமுக நோக்குநான்முகத்
தெல்லையில்லவற் செய்தியமாக்கதை
சொல்லுகென்ன வத்தூயர்வினவுவார். (க)

அன்னவாகனன் வாரியயின்றவ
னென்னவாதியர் யாருமிறைஞ்சியே
மன்னினார்க்கரு ளீந்தவரத்தினை
யின்னதென்று முறையினியம்புவாய்.

ஞானதிலிங்க மமைபுறக்காரணம்
வந்ததென்னை கரஞ்சவனத்தின்சீர்
நந்தக்கேட்டுற நச்சினமாதலாற்
சிந்தையாரத் திருவருள்செய்கென. (௩)

நேமிமாவனத்தார்க்கு நிறைதவன்
பூமிமீதுறுசைவ புராணஞ்சொல்
தாமகோடியுருத்திர சங்கிதை
நேமமாக நிகழ்த்துறு மென்னவே. (௪)

ஆயதிற்சிவ லோகநாதாற்புத
நேயமாக நிகழ்த்துறுகாதையை
தாயகத்தினிற் சாற்றுவல்கேண்மினென்
றேயமுற்று மிசைத்துறவேய்ந்தனன். (௫)

வரமியைந்த தலத்தின் மகிமையை
யுரமிகும்படி யாமிங்குரைத்தனம்
பரமன்றாட் டுணைப்பங்கயம்போற்றிய
பிரமன்பெற்றியைப் பேசுறுவாமரோ. (௬)

வேறு.

புள்ளிமால்வரையாமேருப் பொருப்பினைப் புகல்வர்யார்க்கு
மெள்ளியோர்வழுதிசெண்டாற் புடைத்ததைபெவரேகாணு
ருள்ளியோரிடக்கரத்தேந் திறைபுமோருழியனென்னில்
வெள்ளிமால்வரையோமேரோ பெரிதெனவிளங்குங்குன்றம் (௭)

நண்ணியமதியார்வேணிச் சம்புவினடியார்யாரும்
பண்ணியபூசைப்பேற்றின் பலத்தினைப்பொருந்தவேறுக்
கண்ணியதலமுன்னை §மூன்றுமோருழிகைக்கொள்ளப்
புண்ணியந்திரண்டொருங்கு பொதிந்தெனப்பொலியுங்குன்றம்.

ஆழியும்வளியுமற்றே யழியுறுமமையத்துள்ளும்
வாழியமுளரிவாணன் மடிவுறுமமையத்துள்ளு
மாழியங்கரத்து மாயனந்தமாமளவதான
வூழியுமழியாதென்று மோங்குறுங்கைலைக்குன்றம். (௯)

இத்தகைக்கைலைக்குன்றத் திறைதிருவோலக்கத்தி
னுத்தமமண்டபத்தின் சூழல்புக்கொருங்குகண்ட

§தலம் தீர்த்தமூர்த்தி.

தைத்தினின்மணிபதித்த கவினனந்தனுஞ்சொல்லானேல்
மெத்தவேயிசையாதொன்றை விடுவதிற்குற்றமென்னே. (௧0)

கருணையேயுருவமான கதிர்மதிமிலைந்தநாத
னருணையப்பினையேவேண்டி யற்புதக்காட்சிநோக்கப்
பரிணதரென்னப்பட்ட பற்பலர்பரிவுகொள்ளுந்
தருணமீதென்னமிக்கக் களிப்பொடுசார்தலுற்றார். (கக)

வண்டுளர்நளினக்கஞ்ச மலர்மிசைவாழ்வையுற்றே
யண்டமீன்றிட்டவேத னமையத்திற்காட்சிநோக்க
வெண்டிருநீறோடக்க மிலங்கெகினத்தின்மீது
பண்டருகலைமாதோடு பணிந்தரனவைபுக்கானால். (கஉ)

உரத்தினிற்கமலைவாழ்வை யுற்றரையுடுத்துப்பீதாம்
பரத்தினைப்பெற்ற செங்கண்மான்முனம்பாதங்காணுந்
தரத்தினைப்பெற்றிலேனின் சன்னிதிகாணக்கண்ணு
மிரத்தினைப்பெற்றிலே னென்றனைமுனமெய்தினானால். (கங)

வேயுறுதோளிபங்கன் மிளிருமெய்வனப்பைக்காண
மரியவன்றனக்கும்வேதன் றனக்குமேவாய்க்குங்கொல்லோ
வாயிரம்விழிகள்பெற்ற பேற்றினையடைந்தேனென்று
மீயுயர்பொன்னாடாளும் புரந்தரன்மேயினானால். (கச)

பிணியினைமகவுநீங்கப் பெற்றதாய்மருந்துண்பாள்போ
லணியணியாகவீன்ற வண்டத்துயிர்கட்கெல்லாந்
தணிவுறப்பிறவிவெந்நோய் தணிதரவருமருந்தைப்
பணிவொடுவிழியாலுண்ணப் * பரஞ்சுடர்மேவினானால். (கரு)

இத்திருவோலக்கத்தி லெய்தரியாசனத்தில்
முத்திருத்தியகஞ்சத்தை யொத்திடுமுகத்தாளோடுஞ்
சுத்தவெமபரமானந்த சொரூபதற்பரன்முன்யார்க்கும்
வித்தகக்கருணைநல்க வீற்றிருந்தருளினானால். (கசா)

வண்டுபாண்முரலுங்கஞ்ச மாலைகொள்வாணிகேள்வன்
புண்டரீகக்கண்ணிள்மால் புரந்தரன்புலவரேனோர்
கண்டுகண்டுவகைபூப்பக் கரஞ்சிரங்கூப்பக்கண்ணீர்
விண்டுகமாலையாக வீழ்ந்துரைவிளம்பலுற்றார். (கஎ)

---

* பரஞ்சுடர்—உருத்திரன்

சங்கராபோற்றிவானத் தூற்பராபோற்றிநீண்ட
பொங்கராவணிந்தவேணிப் புண்ணியப்பொருளேபோற்றி
வெங்கராசலமுரித்த விமலனேபோற்றிவேதன்
கங்கராகருணையாள கடவுளேபோற்றிபோற்றி. (கஅ)

அருமருந்தனையாய்போற்றி யன்பருக்கனையாய்போற்றி
தருநிழற்குடையாய்போற்றி சலந்தரற்குடையாய்போற்றி
வருபெருவிடையாய்போற்றி வணங்கிடின்விடையாய்போற்றி
யொருவுறும்வினையாய்போற்றி யொருவற்கும்வினையாய்போற்றி

என்றிவர்துதித்திறைஞ்சி யிளமதியொளியையுண்ணத்
துன்றியபுட்கள்போல விழியருட்டொடக்கினிற்ப
மன்றுளேநடம்புரிந்த மணியெனும்வள்ளறானு
நன்றுரைமுகமன்கூறி நலமெலாமுசாவுற்றானல். (உ0)

வடிக்களிந்தொழுகலுற்ற மனத்தொழும்பொருக்கெல்லா
மிடிக்கணக்களைந்தெஞ்ஞான்று மிருமையுமின்பமெய்தத்
தடிக்கருங்கருணைகூருந் தனிமுதல்வனைநோக்கி
நடிக்கரும்பயில்வோன்போல நான்முகனவிலலுற்றான். (உக

வரியளிஞிமிறுபாடு மதலைசூடியசெவ்வேணிப்
பரசிவவடியார்கேட்கும் பரிசினைப்பளகென்றெண்ணு
துரைசெபுங்கோமானேயிங் குன்சமவாயந்தன்னின்
மருவியவெண்ணமொன்று வந்ததைவகுப்பையென்றான். (உஉ)

அண்டத்தினுற்றசீவ ரனைவர்க்குமணுவிடாமற்
பண்டொத்தவினையின்வண்ணம் பலபலபகுத்துந்துய்ப்ப
முண்டத்தில்வரைந்துய்க்கின்ற முளரிவாழ்திசைமுகத்தோய்
கண்டத்தைவினவுவாயேல் விளம்விடைகாண்பையென்றான். (உங)

கண்ணினுண்மணிபாய்நின்ற கடிகமழ்கடுக்கைவேணிப்
புண்ணியமுதல்வனின்றன் கணத்துளேபுணர்ந்துநின்றோர்
தண்ணியமதிபுனைந்த சடிலமுநுதற்றீக்கண்ணுந்
திண்ணியமழுமானேந்துஞ் செங்கையுந்திரணற்றோளும். (உச)

சித்திரவரையின்மீது § சித்திரகாயத்தோன்மேற்
பைத்தருமரவினாலே யசைத்திடப்பட்டோராகிக்

§ சித்திரகாயம்—புலி.

கைத்தலந்தன்னிற்குந்தங் கனுறுவிமானத்தின்கண்
சித்திபெற்றிருத்தற்கேது வென்னதைத்தெரிப்பையென்றான். ()

என்றயனுசாவலோடு மிறையவனுவகைபூத்து
நின்றநீர்பலருந்தேறநிகழ்த்தலா மென்றிருந்தோ
னன்றுரையாடக்கேட்ட நலத்தினையாவுமொன்ற
தொன்றுதொட்டானவற்றைச் சொற்றிடக்கேண்மினென்றான் ( )

அலகிலாச்சினகரங்க ளமைந்தனபொன்னிப்பாலில்
புலபலநதிகள்பாற்சிற் சிலசிவாகரம்பதிந்த
வலர்தலைபுறுவாய்நீயே யையுறவெய்துவாயேன்
மலர்தலைபுலகமெல்லாம் வகுத்துரைசெய்யற்பாற்றே. (௨௭)

அங்கண்வாட்போக்கிநாத ராரியவரசைநோக்கிச்
செங்கையானிவீர்பொன்னித் தீர்த்தமாயிரக்கலத்தை
யிங்களித்திடுதியென்றே யிரத்தினஞானமீந்தான்
கங்கைநீர்தனக்குமுண்டோ காணுமிம்மகிமையென்றான். (௨அ)

பூருவத்தலந்தான் பொன்னிசங்கமத்தைத்தானே
யோரிருபாலின்கண்ணு முறுவனஞ்சுருதிகாணப்
பேருறுமேமமன்றப்பெற்றிசேர் தில்லையென்னுஞ்
சீருறும்பதிதனக்குச் சேர்வுறுதென்பாலாமால் (௨௯)

ஆயிடைதன்னினந்தமம்சமைந்நான்கின்மேலே
யேயுநாலயுதத்தின்மே லிலிங்கமும்விளங்கிநிற்ப
மேயவிவ்விலிங்கங்கண்டோர் மேவிருமையுமின்பெய்தித்
தூயதாம்பரமவின்பஞ் சுகித்திடமுத்திசேர்வர். (௩0)

பொன்னியினுத்தரத்தின் றிசையினிற்புலவர்போற்ற
மன்னியதிருவாழ்காளி மாநகரெனுந்தலத்திற்
றன்னிகரிலாவானந்தத் தாரகதேவன்றன்னைப்
பொன்னடிவணங்கிக்காணில் புண்ணியராவரன்றே. (௩௧)

மற்றுமத்தலத்திற்கோடி பவத்தினில்வரிக்கப்பெற்ற
குற்றமத்தனையும்வெய்ய வற்கெதிரிருள்போற்கூடா
தற்றிடும்படியுமங்கண் மகேசனையமருவோமால்
சுற்றமோடெய்திக்காணினமதுலகத்திற்றேய்வர். (௩௨)

அந்நகர்தனக்குத்தென்மேற் றிசையினிலணிமையாக
மன்னுறும்வைத்தியலிங்க நாதனும்மகிழ்ந்தானாம்
பன்னருஞ்சடாயுவென்பான் பகரருமுத்தியுற்ற
சன்னிதிதுதிப்போர்க்கெய்தும்பலனையான்சாற்றலென்னே (௩௩)

அத்தலகுடபால்மேவு மதியதிரேகம்வாய்ந்த
வுத்தமத்தலத்துக்கெல்லா முத்தமத்தலமதாகுஞ்
சித்தர்களியக்கர்விண்ணோர் கருடரிந்திரரேனோர்கள்
கைத்தலத்தமர்ந்தநெல்லிக் கனியெனக்காண்பரன்றே. (௩௪)

சிவனடியவர்கடம்மைச் சிந்தையினிந்தித்தோர்க
டவனடியார்கட்கெல்லாந் தறுகணூறுசெய்தோர்
பவனடிமறந்துநான்கு மறையினைப்பழித்தோரேனு
மிவனடியுற்றோர்மிக்க புனிதராயிலகுவாரே. (௩௫)

கரஞ்சமாவனமாம்புன்க வனமெனக்கரையுநாமந்
தரஞ்செறிந்தானந்தத்தைத் தருவதாய்ச்சகலருக்கு
முரஞ்செறிதரவளிக்கு முத்தமக்ஷேத்திரத்திற்
பரஞ்சுடரிலிங்கமொன்று படைத்தனம்பரவைக்காக. (௩௬)

வேறு.

தாளிணையிறைஞ்சு மடியவரகத்திற் றங்குறுமாசொழித்தென்றும், வாளொளிகொளும்பஞ்சாக்கரவுருவின் மன்னியவிலிங்கமொன்றதனை, நீளொளிதுளும்புஞ்சௌந்தரநாயகிப் பெருநிமலையுள்ளுவப்பக், கேளலிறைவ முன்னைநாளென்றுங்கெழுமுறப்புரிந்தனனம்மா. (௩௭)

ஐந்தெழுத்துருக்கொளிலிங்கத்திலென்றும் பச்சிமதிசையினிலமர்ந்தே, தந்தமக்குற்ற பவம்விரளித்துத் தள்ளருமெய்ம்மைஞானத்தைச், சந்ததமருளிப்புரந்திடுவதற்குச்சார்ந்துநாந் தணப்புறுதுறைவோம், அந்தமாப்பதியினமக்குள காதலார்கொலோவளப்பவரம்மா. (௩௮)

பற்பலவுயிரைக்கருவினிலுருமற் பயந்திடுமுமையொடும்யாரும், நற்பயன்பெறவேயாடிடவேண்டி நந்தமைவேண்டியவதனால், பொற்புறுகைலைச்சிகரமேவுற்ற விடபதீர்த்தத்தையப்புன்கூர், நிற்புறவளித்தாங் கற்பகாலத்துமதனிணை நிகழ்த்துறுபாற்() றே. (௩௯)

வேறு.

ஐந்தெழுத்தெனுந் தாரகந்தனையறிவுற்றே
பைந்தொடித்திருவுமையவள் பூசிக்கப்பரிவின்
ஐந்தெனுஞ்சிருங்கத்தொடு மின்னுருவமைவின்
றந்தளித்திடுமிலிங்கமே தகைசொலுந்தகைத்தோ. (௪௰)

நன்றுறுந்தவச்சித்தியைப் பெறுகின்றநலத்த
தொன்றுதானங்கள் வாவிகள்முதலிவையுறவே
தொன்றுதொட்டமைத்திட்டனிப்பதிதன்னி
யின்றுமுள்ளனவாதலினேதவைக்கீடே. (௪௧)

ஆதலாலதிலாடினதாலு மைந்தெழுத்தை
போதலாயுறுவிலிங்கத்தின் றரிசனையுறலால்
மாதலாதிகமருவினோர் கைலையைமருவிக்
காதலானந்தங்கணத்தராளுரெனக்கரைந்தார். (௪௨)

முத்தலங்களும்பரவுறும் பெரும்பயன்மொய்த்த
தெத்தலங்களையெய்தினும் பலபெயரெய்துங்
கைத்தலங்களெட்டுடையவர் கரஞ்சமாவனமா
மித்தலங்களிகூருண்மைப் பெயரினையேற்றேன். (௪௩)

என்றிச்சீர்மையை யெங்கள் கோமரனயற்கேற்ப
நன்றுரைத்தலுங் கண்கணீரருவியாய் நல்க
வின்றுகாதுசெய்பேற்றினை நயன மேற்றிலயா
னென்றுகாண்டிறவேனென வுளங்கசிந்திசைத்தான். (௪௪)

கன்னற்பாகினுங்கனியினுங் கனிந்ததீஞ்சொற்கொ
ளன்னையென்னுமெஞ் சவுந்தரநாயகியான
மின்னைநின்னையான் பணிதரவிழைந்தனன் மிகவு
மென்னையாளுறுநாயக வென்னைநின்விடையே. (௪௫)

அத்திருப்பதி யிடபதீர்த்தந்தனிலாடி
மெய்த்திடும்பரமானந்த மிக்கடைவுற்றே
சித்தியாவும் பெற்றுய்ந்திடும் படிக்கருள் செய்வாய்
முத்தி தந்தருள் மூவர்க்கு முதல்வனே யென்றான், (௪௬)

விடையினுதனும் விளம்புறக் கேட்டுளம் வியந்து
விடையெனுந்திருக்கயத்தினின் மேவியாடுபுவவ்,

விடையின்வேண்டியசித்தியை யடைவை மெய்யென்று
விடையளித்தருள் புரிந்தனன் வேதனுக்குவந்தே. (சஎ)

அன்னமாற்றங்கள் கேட்டனு மணிமுக நீங்கா
அன்னமென்னுநன்னடைக்கலையாயிழையோடும்
அன்னவாகனமேறியே கைலையை யகன்றே
யன்னதக்கணதிசையினை யணுகினனங்கண். (சஅ)

கருத்திலொன்றினைநினைந்திடி னஃதுகைவந்து
திருத்தமாயுறின் களிப்பினைச்செப்புறப்பாற்றோ
கருத்திறைசைகூர் கரஞ்சமாவனத்தினைக்கண்டு
பெருத்தவானந்த வாரியுண் மூழ்கினன் பிரமன். (சகூ)

சொன்னமாமதி றனக்குமேல் பாலினிற் றோன்றும்
பொன்னந்தாதவிழ் புண்டரீகங் கொள் புட்கரணி
நன்னயம்பெற மூழ்குற நாயடியேனுக்
கென்னமாதவம்புரிந்ததோ வென்னுடபவமே. (ருo)

கரத்தினைக் கழலினை மிகச்சுத்தியாய்கண்டு
சிரத்தையோடறு குசப்பௌத்திரந்தனைச்செங்கை
தரித்துப்பாமகடனக்குமவ்வண்ணமே தரித்து
யருத்தியோடயன் சங்கற்பவிதிமுறை யாற்றி (ருக)

மறைகளுன்கெனுங்கடலினுட் புகுந்ததின்வருத்த
துறையுளே மகிழ்ந்தாடுறுஞ் சதுர்முகத் தோன்றல்
பிறையெனுநுதலாளொடும் பேணியத்தீர்த்தத்
துறையுளே புகுந்தாடினன்புளந்துளும்ப (ருஉ)

தெய்வநயகனுடுறக் கங்கையுஞ்செறிந்தாள்
வைஃநாயகனுடுறவாணியும் வதிந்தாள்
மொய்யுறும்பலதேவருங்கூடுறுமுனையா
லையவித்தடப்பெருமையாரளவிடற்கமைவார். (ருங)

இண்டைநாயக னெஞ்சுறுதருக்கெலாமிகந்து
தொண்டைவாய் மடமயிலொடிந்தூய்மையைத்துவன்றிப்
பண்டைசுற்றியகலையினைக் களைந்துபட்டுடுத்திக்
குண்டையூர்பவன் மூண்மலரினையுளங்கொண்டான் (ருச)

பிரணவத்தொடுந்திகழுஞ் சக்கரத்தினைப்பேணிக்
கரணமொன்றுற நீற்றினைப்புண்டரங்களால்
கிரணயத்தினிற்சிரநுதற் கரமுறநிரம்பத்
தெருணயத்தினிலணிந்தனன் றிசைமுகச்செம்மல். (௫௫)

பனுவலாட்டிக்குமத்தகை புரிந்திடப்பகர்ந்து
தனுவெலாமிகப்புனிதமென்றுறும்படிச் சமைந்தே
*யனுவெலாம் பெறத்தக்க காயத்திரியமையப்
பனுவலாரெனச்சந்திசெய்தே டரிவுற்றான். (௫௬)

விண்ணினாட்டுறு தேவரை நோக்கியே விரிஞ்சன்
மண்ணினாட்டுறுமலர்களும் விண்ணுறுமலரும்
பெண்ணினாட்டுறுபாகத்தன் பூசனைபேண
வெண்ணினாட்டுறுவனவெலாங் கொணர்கவென்றிசைத்தான் ( )

மற்றும்வேண்டியவுபகரணங்களும்வளப்ப
முற்றமாலையு நிவேதனத்திற்குறுமுந்று
மெற்றுவெண்டிரைக்கங்கை நீராதியவெல்லாம்
பெற்றுவம்மினென்றேவினன் றிசைமுகப்பிரமன் (௫௮)

உரைத்தமாற்றங்கள் கேட்டுளார் தம்மிலுள்ளுவந்தே
யரைத்தசாந்தமாதியவெலாஞ்சிற்சிலரமைப்ப
விரைத்தகற்பகப்பூந்துணர்சிலர்கொடுமேவ
நிரைத்தபுண்ணியதீர்த்தங்கள் சிற்சிலர்நேர. (௫௯)

இன்னவாறுபற்பல வெலாமியைந்தபினிண்டை
மன்னன்பானலக்கண்மடமர்தொடுமகிழ்ந்தே
யென்னையாளுடையெம்பெருமான் சிவலோக
முன்னவன்றனைப்பூசனை புரிந்துற முயன்றான். (௬௦)

எழுந்தபின்வலமாகவே மறுகிடையெய்தி
யுழுந்துருட்டுணை வேற்றுமையின்றி யுள்ளுருகித்
தொழுந்தகைப்படியடிக்கடி வீழ்ந்துகண்டுளிநீர்
வழிந்துசோர்தரச் சிகரிமுன்னுறவணங்கினனால். (௬௧)

வாழுங்கோபுரமதன் முடிமற்றதின்வாய்தல்
சூழுமாவரணம் பலிபீடந்தொன்மையதா

* அனு—பெருமை.

முறைமுநீக்குறுமிலிங்க மர்ச்சகனெனவுரைக்கு
மேமுங்கண்டவரீசனைக் கண்டவரேய்க்கும். (௬௨)
என்றுநூலெலாமியம்பலாலிச் சிகரத்தைத்
துன்றுதூலலிங்கம்மெனத் தொழுதுளாவரணஞ்
சென்றுமுவலஞ்செய்து நந்தியினருடேர்ந்து
நன்றுறும்படிப் பணிந்தன னளினம்வாழ்நாதன். (௬௩)
முனிதனிள்வரை யுச்சிவான் முழுங்கியதென்னத்
தனிதநீர்மையிலானகம் பலபலதாக்கக்
கனிதனீர்மையிற் கண்கணீர்மல்குசற்கருமப்
புனிதபூசனை புரிந்தனன் புண்ணியம்பொலிய. (௬௪)
பாளெளிச்சசிதனஞ் சயனெனுங்கணன்பரிவிற்
றுளளித்திடுஞ்சிவாகம நெறிதவறுமற்
றேனளித்திடுமலரினுற் சபரிசைசெயுமு
ஞனளித்திடுமைந்தையும் வழுன்முறையாற்றி. (௬௫)

வேறு.

எட்டயிலடானிடத்தைந்தையமுத நறுநெய்பாறதிதேனே னை, நெட்டுறுகன்னலை யுடைத்துக்கொள் சாறுகனிகளின்பா னிமிர்ந்தசாறு, மட்டறுதெங்களித்திடு செவ்விளநீர் குங்கும பனிதம் வாய்ந்தசாந்தஞ், சட்டமிகுதபனமிவை முறைமுறை யாயாட்டியுள்ளந் ததும்பிப்பின்னர். (௬௬)

வேறு.

எற்றுதெண்டிரைநீர்ஞாலத் தெண்ணிலாவுயிர்கடோறும்
பற்றியும்பற்றிலாதுமானவன் படிவந்தன்னி
லுற்றநீரதனைச்செங்கைக் கோசிகத்தாலுறுத்தா
தொற்றியேயகற்றிவைத்தே யொப்பனையுஞற்றலுற்றான். (௬௭)
தேசிகநிறத்துமேனிச் செம்மற்குச்சிந்துரத்தின்
மாசிகந்துறுததோலை யணிவதுவனப்போவென்னக்
*கோசிகமுள்ளாலுள்ளும் புறம்புமேகொண்டதென்னக்
கோசிகந்தரித்துக்கோடி யேலுமொப்பனைகுயிற்றி. (௬௮)
முக்கணேயன்றியெம்மான் முழுதுறுமுடலமெல்லா
மக்கமேயானதென்ன வறைதரவழகுவாய்ப்பப்

*கோசிகம் - சாமவேதம் - பட்டு.

பக்கமுமுன்னும்பின்னும் பாங்குறப்பதுமத்தண்ண
லக்கமேயணிந்தான் கண்டோரக்கமானந்தமாக. (௬௯)

தாளவக்கதையுஞ்சேர்த்துச் சற்பமேயெனமயங்கத்
திரளுறுமலங்கலிண்டையோடு பொன்னலங்கல்சேர்த்துப்
புரளுமப்புயங்கந்தந்தமணியதோவெனப்புகன்றே
மருளுடாமணியைச்செய்ய வதனத்தினுதலில்வைத்து (௭௦)

ஏவல்புத்தேளிரீட்டித் தந்தமாமலர்களோடு
கூவிளமாதியாம் பத்திரமெலாங் கரத்திற்கொண்டு
நாவுறுமீரைஞ்ஞூறென் றிடுமனுநன்கிசைத்து
மேவுறுமுளரித்தாளின் விதிமுறையருச்சித்தங்கண். (௭௧)

பலவகைச்சித்திரத்த பாத்தொடுநாளிகேரம்
பலவகையாவுமிக்க பண்ணியவகையுந்தீம்பால்
பலவகையமுதளாய பாயசநிவேதனித்துப்
பலவகைக்கருணையாவும் பரிவுமிக்குறப்படைத்து. (௭௨)

பரிமளநறியதூபஞ்சோடசம் பனிதஞ்சோதி
புரிவன புரிந்து சென்னிமேற்கரங்குவியப்பூட்டித்
திரிவுறுகரணமொன்றுச் செவிமுதற்பொறிகள் கண்ணுப்
பரிவுறநோக்கிக் கண்ணீரருவியாறுகப்பல்க (௭௩)

சிரஞ்செவி கரந்தோண்மோவாய் செறிதலட்டாங்கமாகுஞ்
சிரஞ்செவி முழந்தாடோய்தல் பஞ்சாங்கஞ்செறிதலொன்பான்
றரம்பணிந்தெழுதருமே யுத்தமஞ் சாற்றுமைந்து
தரம்பணிந்தெழுதன்மத்திமத் தொடல்லது சழக்கே. (௭௪)

இவ்வகைவாணிபோடுமெண்ணிலா வகைவணக்கஞ்
செவ்விதினியற்றியன்புதுறும் புறத்திசைமுகத்தோ
னவ்வியமவித்தசிந்தை யன்புருக்கொண்டதென்னத்
தெய்வநாயகற்பராவித் தெளிபுகழ்செப்பலுற்றான். (௭௫)

எம்முயிர்த்துணைவாபோற்றி யெனக்குநீதுணைவா போற்றி
யம்மைதன்கணவாபோற்றி யரிகிலாக்கணவாபோற்றி
பொய்ம்மையைப்படையாய்போற்றிபுகழ்மழுப்படையாய்போற்றி
செம்மதிக்குடையாய் போற்றி செறுநருக்குடையாய்போற்றி.

எவரையுமதியாய்போற்றி யெழிற்பின்னல்மதியாய்போற்றி
துவரையான்றுதியாய்போற்றி சொல்லனுத்துதியாய்போற்றி
நவரெனும்வரையாய்போற்றி தாழ்வினில்வரையாய்போற்றி
நவரெனுமுடியாய்போற்றி நஞ்சுண்டுமுடியாய்போற்றி. (எஎ)

வேண்டியவடியார்க்கெல்லாம் வேண்டியவடிவனாகி
யீண்டியவறமுன்னானநான்கையுமீ யுமெந்தாய்
பாண்டியனாகிமூன்றுமுலகையும் பரிக்கவல்லாய்
காண்டிநின்கருணையென்னு மழையதுகலிக்குமாறே. (எஅ)

செறுப்பதுபெருமையன்று சிறியவர் செய்ததீமை
பொறுப்பது பெருமை யென்று புகழ்ந்தநின்மறைபொய்யாமோ
வெறுப்பதுபுரிந்தெனக்கோர் சினகரமென்றுமேவா
தொறுப்பதுபுரிந்தாயுன்னைத் தேடினற்குறுகணுண்டோ. (எகூ)

என்றின்ன பலவுமேத்தி யிறைஞ்சியவிண்ணடையோனுக்
கொன்றியமதலைத்திங்க ளொளிர்தருஞ்சடிலத்தோடு
மின்றிகழ்மழுமான்செங்கை மிளிர்தரவிடையின்மீது
பொன்றிகழ் மேனிகாட்டி யருளினன்பொருவிலாதான். (அ0)

வேறு.

பூக்கமலாலயன் முதற்புத்தேளிர்க்கு
மூக்கவல்லிருளினை நீக்கியொள்ளிதாய்
வாக்குமாமனதுக்கெட்டாதமாக்கதி
யாக்கும்பஞ்சாக்கர மருளினரோ. (அக)

ஒவ்வொரக்கரத்தினுக்குரிய செய்கையுஞ்
செவ்விகொளிருடியுந் தேவுஞ்சேர்ந்தன
நவ்விகொள்சங்கர நாதனுன்முகற்
குவ்வுளரும்படி யுணர்த்தினரோ. (அஉ)

வேறு

கற்றறிமலரினனே கருத்தினம்மந்திரத்தை
யுற்றறிவில்லார் வேள்வி யுஞற்றினு நதிதோய்ந்தாலும்
பெற்றிகெந்தமுண்டு பெருந்தவமிழைத்திட்டாலு
மற்றவற்கிரணியத்தை யளிப்பினும்பயனின்றுமால். (அங)

நற்றவமனைத்துநல்கு நமதுமந்திரமேயெங்கு
முற்றுறுநாளுமூவா துறுத்தியே முயலவைக்கு
முற்றவுன்புகழ்மாலின்பதவியை யுறவிதிக்கு
மற்றமந்திரங்கள்கற்போர் மக்களுட்பதடியாவர். (அச)

ஆதலாலருளுகிற்போங் கேட்டியென்றருளலோடு
மோதலாவுவகை வெள்ளப் பெருக்கையுண்டுறுதிநாளிப்
போதலாலுளதோ வுய்ந்தேன் யானெனப்புகலக்கேட்டுக்
காதலாலுணர்த்தினனத் திருப்புன்கூர்கருணையாளன். (அரு)

வேறு.

பூவருமயன் முதற் பொருவில்வாணியுந்
தேவருமிருளினை யறுத்துத்திவ்வியத்
தோவருஞானமா மொளிதுலங்குற
மேவரும்பரிதிபோன் மேவினாரரோ. (அசா)

புண்ணியவுருவத்தைக் கொண்டுபோந்திடு
மெண்ணியவெஞ் சிவலோகநாதனீண்
டண்ணியவர்தவற் கருளளித்தபின்
கண்ணியவிலிங்கத்துட் கரந்துளானரோ. (அஎ)

பத்தியின்வழிபடு பங்கயத்தய
னித்தியத்தொடு நிருமலத்தை நேர்ந்தபி
னத்தியுவமலன்பால் விடைகொண்டேநறுஞ்
சத்தியவுலகத்தைச்சார்ந்துளானரோ. (அஅ)

வேறு.

தக்கமேன்மைகொள் சைவபுராணத்துள்
ளொக்குங்கோடி யுருத்திரசம்மிதைப்
பக்கங்கூறும் புகழினைப்பண்ணவன்
மிக்கசூதமுனிவன் விளம்பினன். (அகூ)

# பிரமதேவர் பூசித்தபடலம்.

இவ்வண்ணஞ்சொல்லியருளிய சூதமுனிவர் திருமுகம் நோக்கிச் சவுனகாதிமுனிவர் "பிரமதேவருக்குச் சிவலோகநாதர் வரமருளியதையுஞ், சிவலோகநாதருக்குப்பஞ்சலிங்கமமைந்தகாரணத்தையுங் கூறியருள்க" வென்றலும், முன்னொருகாலத்தில் திருக்கைலாய மலையில் பிரமதேவர் மஹாவிஷ்ணு இந்திரன் மற்றுமுள்ளதேவர்கள் யாவரும் சூழ்ந்து துதித்து நிற்கவும், பிருங்கியாதிமுனிபுங்கவர் வேதகோஷஞ்செய்யவுஞ் சிவபெருமான் நவரத்தினமயமாகிய சிம்மாசனத்தில் உமாதேவியாரோடு திருவோலக்கமாயெழுந்தருளி யிருக்குங்கால்; பிரமதேவர் பரமசிவத்தின் வதன நோக்கி என்னையனே! என்றன் எண்ணத்தில் ஒன்று தோன்றிற்று. அதனையனுக்கிரகஞ்செய்ய வேண்டும் என்று வேண்ட, அப்போது எம்பெருமான் அஃதென்னையெனக் கேட்ட மாத்திரத்தில் பிரமதேவர் சொல்லுகிறார். தேவரீர் சபையின் கண்ணே உற்றவரிற் சிலர் சந்திரனைத்தரித்தவராயும் நெற்றிக் கண்ணுள்ளவராயுஞ் சதுர்ப்புஜமுடையவராயுஞ் சூலந் தரித்தவராயும் உள்ள சிவசாரூபம் பெற்று இருப்பதற்கு ஏதுவென்னை? கடாக்ஷித்தருளல் வேண்டுமென்று கேட்க அதனையுணர்ந்த எம்பெருமான்; நீ கேட்டவாறு சொல்லுதும் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியின்கண் மகாக்ஷேத்திரமான தில்லையென்னுஞ் சிதம்பரத்திற்குத் தென்பக்கத்திலுள்ளதும், பொன்னி நதியின் வடகரையிலுள்ள காளிமாநகரமென்னுந் தலத்திற்கும் புள்ளிருக்கு வேளூரென்னுந்தலத்திற்கு மேல்பாலுள்ளதுமாகிய கரஞ்சவனமென ஓர் தலம் விளங்கும். கரஞ்சம்-புன்கு. யாவரும் போகமோக்ஷங்களை எளிதிற் பெறக்கொடுத்து விளங்கும் அத்தலத்தில் சௌந்தரநாயகிக்காகப்பரஞ்சுடரிலிங்கமொன்று தோற்றிவைத்தனம். அன்றியும் பஞ்சாக்ஷர உருவின் மயமாய் ஐந்திலிங்கங்களையும் அருளினம். அத்தலத்தினிடத்து நமக்குள்ள இச்சையை அளவிடப்படாது. நாமுமையோடு ஸ்நானஞ்செய்ய கைலைமலையிலுற்ற இடபதீர்த்தத்தை அத்தலத்தினிலைபெறச்செய்தனம். உமாதேவியார் பூசிக்க ஐந்து சிருங்கத்தோடுமுற்ற இலி

ங்கத்தின்மேன்மை சொல்லுமளவோ? அவ்விலிங்கத்தைத் தரிசித்தவர் நமது சாரூபமடைவரென்பது துணிபாக"லின் ஆண்டவ்வாறருச்சித்தேத்திச் சாரூப பதவி பெற்றனராவரென்றருளினர். அதனைக்கேட்ட பிரமதேவர் எமதுபெருமானே! அத்தலத்தைத் தரிசிக்க அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, சிவபெருமான் மகிழ்வடைந்து நீ சென்று இடபதீர்த்தமாடி சிவலோகநாதரைத் தரிசித்து வேண்டிய சித்தியையடைகவென்று திருவாய்மலர்ந்தருளினர். பிரமதேவர் சரஸ்வதியோடு அன்னவாகனமேறி தக்ஷிண திசையைநோக்கி வருங்கால் ஆனந்தபரவசராய் இடபதீர்த்தத்தில் மகாசங்கற்பவிதியே தீர்த்தமாடிப் பூசைக்குரிய உபகரண திரவியங்களோடு வலமாக ஆலயத்தினுள்ளே சென்று ஸ்ரீ சிவலோகநாதரைக்கண்டு பஞ்சகவ்வியமுதலிய அபிஷேகாதிகள் புரிந்து அர்ச்சித்து தூப தீபநைவேதன சோடசோபசாரத்துடன் வணங்கித் தரிசித்துத் தோத்திரஞ் செய்து நின்ற அளவில் எங்கோமான் பஞ்சாக்ஷரோபதேசம் அருளப்பெற்று விடைகொண்டு தனது உலகத்தையடைந்து பெருவாழ்வுற்றனர்.

---

முற்றிற்று.

## இந்திரன் பூசித்த படலம்.

---

வேறு.

ஏகநாயகன் பதம்பணி யிண்டையினிறைவன்
மோகமோடுபஞ்சாக்கரம் பெற்றமைமொழிந்தேன்
மாகநீங்குபுவகலிகை காதலின் வந்த
மேகநாயகன் காதையை விளம்புகிற்பேனல். (௧)

தூயதாயுளமுளரியைச் சிவனடிதுலங்க
மேயதாகியவருச்சனை புரிதருமெய்யீ
ராயதன்றியேவேறதி ரேகமொன்றறைவ
னேயமோடுறு நண்பினிற் கேண்மெனநிகழ்த்தும். (௨)

மறைகள்யாவையுந் தனதென முளரியில்வாழ்வோன்
றுறைகள்யாவையுமண்டங்க டம்மையுந்தோற்றி
யிறைகட்டம்மையாரெண்ணினு முதனிற்குமிறைவன்
றறைகண்மீதினி லவன் புகழ் சாற்றுவராரே. (௩)

முன்னிறந்தவர்பலருளு மொழியுமிவ்வுலகத்
தின்னிறைந்தவர்பலருளு மினிவருவோரு
முன்னிறந்திருக்குரல் முதலொருவர் போலொருவர்
மன்னிநின்றவருளர்கொலோ வெனச்செயும்வல்லான். (௪)

தஞ்சமேறியபலரையுந் தரைமிசைத்தங்கள்
வஞ்சமேறியேவாழ்வுறவின்னணம் வகுத்தான்
கஞ்சமேறியேயிருந்தவன் கூடவும்வாகனமா
யஞ்சமேறினானொருமக வினைப்பெறற்கமைந்தான். (௫)

விண்ணெலாமுளவிளங்கிழை யாரையும்விரிந்த
மண்ணெலாமுளமானனை யாரையுநாகர்
கண்ணெலாமுளார்தம்மையும் படைத்தபின்கைதேர்ந்
தெண்ணெலாங்குவிந்துரைக்கொணா வழகியையீன்றான். (௬)

அன்னதன்மையாலங்கணா மணிக்கிறையாவா
னென்னதன்மையின்வருவனோ வெனவுளத்தெண்ணி
தென்னர்சேகரன்றடாதகை தனையொருசேயாய்
முன்னமீன்றவனெண்ணிய தெண்ணியேமுயன்றாள். (௭)

தீர்த்தக்கங்கையென்றுரைக்குங் கோதாவிரிதீர்த்த
நீர்த்தரங்கத்துள்குணதிசை சங்கமநேர்ந்த
தாத்திரிக்கணேவிசேடமாந் தலத்தினிலமர்ந்தே
பூர்த்தியாமருந்தவரெலாம் வணங்குறும்புனிதன். (௮)

முச்சகப்பெயர்தன்னுளே பவுத்திரமுதிர்ந்தோன்
நிச்சலுந்திரிமகத்தினை நிகழ்த்துறுநேமன்
சச்சிதானந்தவுருவனாய் தற்பரன்பூசை
*சச்சதாப்புரி கோதமனெனுமபிதானன். (௯)

ஆயகோதமன்பன்னக சாலையினமர்நாள்
கூயதற்குமோரில்லவ ளில்லதோர்குறையால்
மாயிரும்புவிமுழுதுமே நோக்குபுமலர்வாழ்
நாயகன்றிசைமுகவன் மேவுலகினைநண்ணி. (௧0)

முளரிநாயகன் வாழுலையின்கணேமுன்ன
வளரிராவினைநீக்குறும் வெய்யவன்வரவே

---

* சச்ச—மெய்மை.

விளரிவண்டறையம்புயம் போன்முகமிளிர்ந்து
தளரிராமனக்களிப்பொடு முகமன்கள்சாற்றி. (௧௧)

வந்திடுஞ்செயலென்னென மகிழ்வொடு வணத்து
கந்திடும்படியிருக்கெனக் கௌதமமுனிவன்
கொந்திடுங்குழலகலிகை தன்னையான்கொள்ளத்
தந்திடுந்தமியேன் கருமந்தழைதரற்கே. (௧௨)

என்றகாலையிலிண்டையிலுறைந்திடுமிறைவ
னன்றுநன்றெனநன்குற நயந்தனனாகி
யன்றிருந்திடமகத்தினிற் சனியமைந்தாற்போல்
குன்றரிந்திடுவச்சிரத்தவன் குறுகுற்றான். (௧௩)

நின்றகாலையிலாதனமளித்தனனேரார்
பொன்றவேந்திய வச்சிரப்படையினன்புகுந்து
பின்றையேறிவீற்றிருந்தனன் முகமன்கள்பேசி
மன்றலந்தெரியலன்முக நோக்கிவாய்மலர்வான். (௧௪)

இன்றுநீயிவணெய்திய கருமமென்னென்னக்
குன்றுதானெனுங் குவிமுலைக்குமுதவாய்மதிய
மென்றுரைத்திடுவதனஞ்சேர் நின்மகளென்னுந்
துன்றலோதியைமணஞ்செயத் தோன்றினேனென்றான். (௧௫)

திரண்டதோளினன் செல்வியைக்கேட்டலுஞ்சிந்தை
மருண்டவாசவன்மொழிதடுப்பேன் கொல்மாதவற்கு
வெருண்டுரைத்திடுமொழிதடுப்பேன் கொல்மேலென்று
விரண்டுகன்றினுக்கிரங்குமோ ராவெனவிருந்தான். (௧௬)

வந்ததுன்பங்கள் வருவனவருகமற்றவையைச்
சிந்தைசெய்குதலறிவுடையோர் செயலன்றென்
றந்தவெண்ணத்தை மாற்றினனிலமிசைதேவர்க்கும்
புந்திவைத்துளநலனவி வனைத்துமேபொறிப்பான். (௧௭)

ஒருவருக்குமேதீங்கிலா தொன்றுரைத்திடினே
யிருவருக்குளேவன்மையை யிழைப்பவரெவரோ
திருவிருக்குமேந்திழையினை மணஞ்செய்கதிறம்பி
னாசரப்படையாரென வெண்ணியேநவில்வான். (௧௮)

நீயிரண்டத்தை மூவலமாகவேநேர்ந்தீ
ராயினன்னவரங்களை கொழுனனுவாக
மாயிரும்புவியிடையொரு போழ்தினின்வரலேல்
போயிரென்றனன்மரைமலருறைதரும்புத்தேள். (கக)

என்னக்கூறலுமிரு கோட்டிபமேறிக்
கன்னனுக்குளேவருவன் யானென்றுரைகழறிப்
பொன்னகர்க்கிறைசேறலும் பொருவில்கௌதமன்று
னன்னவாகனன்றன்முக நோக்குபொன்றறையும். (உ0)

இமைக்குமுன்னமே யெண்ணருங்கோடியண்டங்க
டமைக்குயிற்றிடவல்லநின்றனைவலஞ்சாரி
லமைத்தவண்டங்கடமை வலம்வந்ததேயாகு
மெமைக்குமார்க்கமா யெண்ணலெயனவலமியற்ற. (உக)

தனைவலஞ்செய்தகோதமன்றன்மொழிதடுக்கும்
வினையிலாமையிற் சிவபிரானளித்தமேற்கோளைத்
தினையுந்தள்ளொணுச்சீர்மையாற் றிசைமுகன்றிகைத்துப்
பினையென்செய்குவன் கொள்கெனக்கரகநீர்பெய்தான். (உஉ)

பாணிதன்னிடைப்பாணியை யேற்றனன்பசும்பொ
ஞணிதன்னனையாளைக் கொண்டவ்வயினீங்கிச்
சேணினீங்கினேன்வருமுனஞ்செல்வனென்றெண்ணிப்
பாணியாதுசென்றுன்றவமுற்றுமேபடைத்தான். (உங)

வாணியைக்கொண்டுசென்று றுமலரினேன்போலப்
பூணியைக்கரங்கொண்டவன் செல்லுறும்போழ்தின்
வேணிமேவுறுவாசவன் மெல்லியற்கண்டு
நாணியென்செயப்பாற்றினி யென்றுளநலிந்தான். (உச)

என்னையிவ்வணமுவலஞ் செய்யெனவியம்பி
யென்னையிவ்வணம் புரிந்தனனிதுதகமைத்தோ
முன்னையாவையும் படைத்திடு முண்டகாசனற்கு
முன்னைச்சென்னியின் வரைந்தனனேவந்தமுகுந்தன். (உரு)

எனவியம்பியே யெவ்விதத்தேனு மிவ்வெழில்கூர்
வனிதைதன்னையான் சேரிலேனெனினமகவானே

புனிதமுற்றிடு துறவிபால் விடேனெனப்புகன்று
சனிதனீர்மையாற்சூளுற்றான் கோளுற்றதகையான். (உசு)

உன்னியேயவனிருந்திடுகாலைபின்னோர்நா
ளன்னமாதவன் குசையிலைமைத்த வாதனமேற்
பன்னசாலையிற் குறைமதி நாள்வயின்பள்ளி
துன்னியேதுயிலுற்றனன் றோகையினோடும். (உஎ)

மாயையாலொரு வாரணமாக்கிவாயசமாய்
வாயையோய்விலாதலறியுங் கூவியுமருவப்
பாயைநீங்கியே புலரியாயிற்றெனப்பாரா
வேயைவென்றதோளணங்கினை யங்ஙனம்விடுத்து (உஅ)

புலரிக்காலையிற்பொருவரு சந்திகள்புரிய
வலரிகீட்டிசைவருமுன மரனடிக்கமலு
மலரைச்சிந்தையில்வைத்தொரு வாதுறும்வகையாப்
பலருமேவுசங்கீர்த்தனத்தொடு சென்றான் பழையோன் (உகூ)

வேறு.

அறங்கடைப்பட்டபேதமை தம்பினாயின்
புறங்கடைப்படுவானைப்போ லிலையெனல்பொய்யோ
நிறங்கடைப்படு நிகழ்செல்வங் கடைப்படுகிலைத்த
மறங்கடைப்படு மென்றறியாமலேவந்தான் (ங0)

உற்றநற்றவமுனிவர னேவுறும்வேலை
யற்றநேக்கினனமதெண்ண முடிந்ததென்றறிந்து
புற்றராவுளதென்பது தெரிந்தும்பேரியகழுங்
கற்றறிந்திலான்போலவே யுள்புக்கான்கடிதின் (ஙக)

காமமேகொலைகட்கெலா மாதியாக்கவியுங்
காமமேகளவுக்கெலா முதன்மையாக்காட்டுங்
காமமேகள்ளையுண்டிடுந் தொழிலினைக்கலிக்குங்
காமமேபெருநரகிடை யமுக்குறுங்கல்லே (ஙஉ)

காமமேபெருங்குலத்தினை நலத்தினைக்கடியுங்
காமமேமிடியனைத்தையுங் கொடுத்திடுகழகங்

காமமேபரகதியடைத் திடுமொருகபாடங்
காமமேகெடுதிக்கெலாம் வித்தெனக்கருதான். (௩௩)

வேறு.

தன்னவமுனிவரனென்னச் சார்ந்துளா
னன்னவளறியொணு மையினறிந்துமே
மின்னவள்செய்கையை விளம்பொணுதெனப்
பின்னவன்செய்கையைப் பேசுவாமரோ. (௩௪)

கண்டதற்சகுனங்கள் பலவுங்கைமிகக்
கொண்டவனுகவே குருகுறுத்தபின்
விண்டவன்ஞானக்கண் மேவிநாடியே
யண்டநாயகன்செய லென்றறிந்தனன். (௩௫)

ஏசறவுணர்ந்தபின்னில்ல மேவுறு
மாசையைநோக்கியே யணுகினுனரோ
வாசவன்முனிவரன் வருதலாலொரு
பூசையினுருக்கொடு போயினுனரோ. (௩௬)

போம்புருகூதனைநோக்கிப் பொள்ளெனத்
தோம்பெறுவோமெனச் செல்லுந்தூர்த்தனு
மேம்பலோயாகத்தி னிடையோராயிர
மாம்புழையோனியை யடைவையென்றனன். (௩௭)

அரவுறுசினமென வழன்றுகௌதம
னிரவினிறைடிவரையெய்துகென்னலுந்
துரிசினையுடையவன் றொக்கொருங்கவே
பிரகரமாகவே பெற்றுளானரோ. (௩௮)

மகபதியாயினன் மகம்புரிந்தபி
னகபதியாயினன் சிறைநறுக்கியே
சுகபதியாயினன் றருவைத்தன்னலாற்
பகபதியாயினன் காமப்பண்பினுல். (௩௯)

பகத்தினையளவில பெற்றுப்பையுளு
மிகத்தினிலளவில வாகவெய்தியழ்

முகத்தினிலகன்று சேணுற்றோர்மூலையிற்
றிகைத்தவனாய்த்துயர் செறிந்துசென்றனன். (௪௰)

தாங்களென்றிருந்ததே யன்றிச்சங்கமத்
தீங்கினையிழைத்திலாச் சிறியன்மாட்டினே
தாங்கொணாமுனிவினாற் சபித்திடேலெனப்
பூங்கமலச்சரண் வீழ்ந்துபோற்றினாள். (௪௧)

போற்றினாளடிதுவீழ்ந் துயிர்த்துப்பொய்ம்மியே
கூற்றினாருந்தயை கொள்ளும்வண்ணமே
சாற்றினாடழலெனத் தணப்பருஞ்சின
மாற்றியாளுறும்வகை மாழ்கிவேண்டினள். (௪௨)

மிதிலைபால்கல்வடி வுற்றுமேவினால்
சததளமலர்த்திரு மாதைச்சார்தரு
விதிவழிமணஞ்செய விராமன்மேவுநாள்
பதமலர்த்தூளியாற் சாபம்பாற்றுவாய். (௪௩)

ஆவயின்றொல்லுரு வமைதியானபின்
பாவைநம்முழிவரப் பாலையென்னவே
மூவுலகத்திற்கு மொழியுஞ்சான்றெனத்
தாவில்பாடாணமாய்ச் சமைதியாலென்றான். (௪௪)

உருவினில்யோசனை நாறுமூழலான்
வருவினையோர்கடம் வதனநோக்கிலா
திருநிலந்தன்னை நோக்குபுவியம்புவான்
குருவினையடைந்து தாள்பரவிக்கூறுவான். (௪௫

போதுளான்வரினுமே புந்தியெண்ணிலாக்
கோதுளானாயினேன் கோதமப்பெயர்
சாதுளான்மனைதனைத் தழுவினேனந்த
மாதுளானாயிரம்யோனிவாய்கென்றான். (௪௬)

வேறு.

பாசநீங்கினர் முன்னம்பகர்ந்திடும்
வாசகாதிகள் கற்றுமறந்தனை

நாசகாலத்தை நண்ணினையாதலால்
வாசவாவுன்மதி யெஃனென்றெள்ளினான். (சஎ)

புரத்தைவென்றவர்க் கொக்கும்புனிதன்றன்
றரத்தையெண்ணிலை தன்னருளாற்றரும்
வரத்தையெண்ணிலை மாதர்மயக்கத்தா
லுரத்தையெண்ணிலை யுன்னினைவென்னென்றான். (சஅ)

அற்பினாற்பெரிதான வனையிழை
கற்பினாற் பெரிதானவள்காசினி
யிற்பினாரிவரு க்கிணையென்னலரம்
வற்பினாலென் மறுத்திடப்பாலதோ. (சகூ)

செயற்கருஞ்செயல் செய்தனையாதலாற்
பெயர்க்கரும்பழி பெற்றிடுதன்மையால்
முயற்கறைதிங்கட் கில்லெனின் முன்னுடல்
பயக்குமென்று பகர்ந்தனன் பண்பினே. (ருo)

ஆனபோதுமறைகுவன் கேட்டியால்
மீனகேதனன்றன்னை விழியினாற்
றீனநோக்கினன் மேவுறுதிவ்வியத்
தானமல்லதுதீர்க்கத் தகாதரோ. (ருக)

காகமேறுமலையெனுங் காண்டகு
நாகம்பூணுமிராசலிங் கப்பெய
ரேகநாதனிலங்கும் வாட்போக்கிதான்
போகொணாப்பழி யாவையும்போக்குமே. (ருஉ)

தில்லையென்னுந் திருத்தலமொன்றுண்டா
லெல்லையில்லாத் தவப்பலனீயுமால்
சொல்லைச்சொல்லி முடியுங்கொறாய்மையை
யில்லையில்லை யிணையதற்கில்லையே. (ருங)

எத்தலத்தினி லென்புநெக்காகிட
மெய்த்தலத்துப் புளகம்விரவுமோ
வத்தலத்திலமர்ந்து பரவுறின்
கைத்தலத்தா மலகமாய்க்காணுதி. (ருச)

அன்னகேத்திரத் தானதிருப்பணி
நன்னயத்தோ டியற்றிநதியணி
முன்னவன்றனைப் பூசனைமுற்றுறி
னின்னவேதம் விட்டெய்துவையீண்டரோ (௫௫)

என்றுதேசிகன் கூறுமியல்லையுந்
தன்றுணைத்தாள் சரோருகந்தம்மையு
நின்றுறச்சென்னி மீதுறெமுங்கவே
சென்றுநீங்கினன் சேணகர்விட்டரோ (௫௬)

தானவாரண மூர்பவன்றூரணி
மானவாரண வாசிவதிந்தபின்
ஞானவாரண நாதனைநண்ணியே
தீனவாரணந் தீர்தரவெண்ணினன் (௫௭)

வேறு

காசியில்வாழ்விசுவேசனை யன்பிற்கரைகாணு
நேசமொடேபாறதிதே ளளவிலநேருற்றே
வாசமுயக்கபிடேகமதாற்றுபு மலர்கொண்டே
பூசனைசெய்துதுதித்து மனத்தொடுபோற்றுற்றான் (௫௮)

கேதாரப்பதியென்ற திருப்பதிசெழுமுற்றே
வேதாளத்துயர் போக்கியளித்திடு மேதக்கோய்
நீதானற்கருணைக் கடலைத்தரநினையாயே
லாதாரத்தெனையாள் பவராரினியறியேனே (௫௯)

என்றிவைபலதுதியேத்தி யிறைஞ்சியகந்தேகிக்
கொன்றைபுனைந்திடு கோகன்னப்பதிகூடுற்றே
நின்றுதுதித்துளநைந்து கரைந்தனனெடுமாயன்
பின்றுணையென்றிட முன்னவனென்னப்பெற்றானே (௬௦)

பொன்னியின்வடதிசை தென்றிசையெங்கும்பொலிவுற்ற
வின்னிசைபாடிறமன்னிய நற்றலமெங்கெங்குந்
துன்னியிணங்கிவணங்கி யுணங்கித்துதியேறி
பன்னியசீர்கொள்கடம்ப நுறைந்திடுபதியுற்றான். (௬௧)

வாரணவாசி-காசி

அத்தகைமேவிவணங்கலு மண்ணலருட்பாலால்
மெய்த்தலமுழுதுமிரட்டிய தாக்கிவிளங்கிடுமா
லுத்தமமானகரஞ்ச வனத்தினிலுற்றுயேல்
சித்திரமாவையெனக்கன விடையே செப்புற்றான். (சுஉ)

தேவர்தமக்குளவயுதப்பருவஞ் சேர்ந்தெங்குஞ்
சேவையியற்றினனாகி வணங்குபுவினைதீர்ப்பான்
கோவிலையுற்றுமனங்கசி வுற்றுக்குடதிக்கின்
மேவுறுங்குருவாணத்தல முற்றுமிடைந்தானல். (சுங)

கனவிடைகண்டவனனவிடை காணுங்காட்சியென
வனகமுறும்படித்தினகர னென்னவருட்சோதிக்
கனகநிறங்கொள்கரஞ்ச வனத்திற்கண்டுற்றே
மனமுறுகவலைதுணித்திட வெண்ணிவழிக்கொண்டான் (சுச)

இறும்பூதுற்றேயித்தலம் வாழெம்மிறையோனை
நறும்பூவுற்றுளொப்பா ளால்வருநலிவெல்லா
மிறும்போதின்றேயெய்தின னென்னுவிக்கைக்கா
ணெறும்பேயென்னவளப்பரு மாசையினையுற்றான். (சுரு)

வேறு.

கண்டிடுமௌவினெஞ்சங் கரைந்தனன்கண்ணீர்மல்க
வண்டமர்சோலையாவுங் கைலையின்மருவுய்யான
மண்டியதேயோவென்ன வதிரேகமிகவடைந்து
மண்டணில்விழுந்திறைஞ்சி வரம்பிலாமகிழ்ச்சிகூர்ந்தான். (சுசு)

தம்பெயர்தாபித்திட்ட தடமதொன்றியற்றவேண்டி
யும்பர்தம்பெருமானேறி யூர்தருமீரண்டு
கொம்பயிராவதத்தைக் குறுகிபுற்றிடநினைந்தா
னும்பனுமவ்வயின்கண் ணிமைப்பினிலுற்றதன்றே (சுஎ)

தானவெள்ளத்தைப்பெய்யுந் தந்தியினரசைநோக்கி
வானவர்பெருமான்றானும் வழங்குவனோர்மாற்றந்தான்
றேனிமிர்கடுக்கைவேணிச் சிவலோகநாதர்கீழ்பான்
ஞானதீர்த்தப்பேராலோர் வாவியைநல்குகென்ன. (சுஅ)

நாகமேயிங்கோர்வாவி நல்கெனநவிலுமுன்னை
நாகமேபூண்டசெங்கை நாயகற்காட்டுதற்கு
நாகமேயுலகமட்டு நாலெனுங்கோட்டாற்றுத்தி
நாகமேதடவுகையாற் பேர்த்தெறிந்தநாற்றிக்கும். (௬௯)

ஓரிருகோட்டுச்சேவா லுதவியதடம்பின்னாக
வீரிருகோட்டுமாவா லெய்தியதடமுன்னாகுந்
தாரிருகோட்டுக்கொங்கை நாயகன்சன்னிதானச்
சீரிருகோட்டத்தின்றன் வளமையார்செப்பற்பாலார். (௭0)

சசிமணவாளனைமந் தருவினுக்கிறைவனோக்கிச்
சுசியுறுமண்டத்துற்ற சுரநதிமுதலதொன்மை
வசியவரைக்கோடிசேர்ந்த மூன்றெனுந்தீர்த்தம்வந்திங்
கிசைவுறமல்குகென்ன வெண்ணினனெண்ணுமுன்னம். (௭௧)

அலகிலாக்கறந்தபோதுங் கீரமொன்றூற்போல
வலகிலாநதிகள்வந்திங் கமைந்தன திறமொன்றாயே
யலகிலாதுள்ளமற்றை யிடந்தொறுமமர்ந்தேயாடு
மலகில்புண்ணியதீர்த்தத்தின் பயனெலாமளிக்குமன்றே. (௭௨)

குமுதமுமுளரிதானு மலர்தருங்கோட்டந்தன்னி
லமுதமேயுண்டதேவர் நாயகனடியங்கச்
சமுகமாம்யோனிக்குற்றந் தனையொழித்திடுவனென்னி
லமுதமோவித்தடத்தின முதமோபெருமைத்தம்மா. (௭௩)

பிறர்மனைசங்கமத்தின் பிழையினைநீப்பதற்கங்
குறுமுறைசசியினோடுஞ் சங்கற்பவினையுஞற்றி
யறவினைநியமீந்தே யைந்தெழுத்துளத்தமைத்து
முறைமிகப்புரிந்துதீர்த்த மாடினன் முகிலூர்வானே. (௭௪)

அண்டருக்கிறைவன்சந்தக் கோசிகமரையுடுத்திப்
புண்டரநுதலிலங்கத் தரித்தங்கமாலைபூண்டே
யெண்டருஞ்சகஸ்த்திரத்தி லைந்தெழுத்திதயத்தெண்ணித்
தண்டலினித்யகன்ம விதியினைச்சமையச்செய்து. (௭௫)

என்புநெக்குருகக்கண்ணீர் ததும்புறவெயில்கடர்ந்து
முன்பரன்சினகரத்தின் மூவலமுறைபுரிந்து

மின்படிவத்திலங்கும் விடையிடைவிடையைக்கொண்டு
முன்பினில்விழுந்திறைஞ்சிச் சபரியைமுயலலுற்றான். (எசா)

துங்கமார்தயிலமாதிச் சொற்றுறும்விதியினோடுங்
கங்கையேமுதலவான நதிகளிற்கண்டநீருந்
திங்களார்முடியின்மீது திருந்துமந்திரத்தாலாட்டி
மங்களத்தபனபூசை யாகமவகைபுரிந்து· (எஎ)

துய்யகோடிகத்தாலொற்றித் தூயகோசிகந்தரித்தே
பையரவெனப்பிராந்தியுற்றிடப் படலைசாத்தி
மையறுகாப்பணிந்து வனப்புறுதிலதமிட்டுச்
சையவில்லெங்கோனுக்குத் தரளவக்கதைதரித்து. (எஅ)

மாழையின்மணிபதித்த வரம்பிலபூணணிந்தே
யாழிசூழுலகமெல்லா மணப்பவைந்தருவளித்த
வாழியமலருமற்ற மலரொடுமருச்சித்திட்டே
தாழ்விலநிவேதனித்துத் தாள்பணிந்திட்டபின்னர். (எகூ)

அண்ணலேநின்றுணைத்தா ளம்புயந்தன்னிலென்றுங்
கண்ணலாவெனதுநெஞ்சங் குவியச்செய்யென்றுகையை
யெண்ணுநெஞ்சினிற்குவித்திங் கிந்தியமெல்லாமொன்று
பண்ணுவையென்றுசென்னி மீதினிற்பருங்கைகூப்பி. (அ0)

நடைக்கலம்வந்துபொன்னோன் மனைவியைநண்ணிமாரன்
படைக்கலம்பொருதுசேர்ந்த பனிமதிதன்னைநீசெஞ்
சடைக்கலந்தருள்செய்திட்ட தன்மைபோற்றாட்கஞ்சத்தி
னடைக்கலம்புகுந்துளேனை யாளுறவருள்வைபோற்றி. (அக)

சலந்தரன்மனைவிதன்னைத் தண்டுளவணிந்தமாயோன்
கலந்துறவணைந்தகாலைக்கருணைநீ வைத்தன்னனைப்
புலந்துறச்செய்யாதென்றும் புற்கலமருவிலாயோ
நலந்தரவருள்செய்கிற்பாய் நாதனேபோற்றிபோற்றி. (அஉ

போந்திடுகொடுமைவஞ்சம் பொய்கொலைகளவுகாமஞ்
சேர்ந்திடுமடியனேனைத் தீயிடிமேலேவீழிற்

காந்தமுங்கவருமன்றோ வச்செயல்காண்கிலாயோ
திந்துகச்செய்யேல்காவாய் சேவடிபோற்றிபோற்றி. (௮௩)

கோதமன்மனையாற்போந்த குற்றத்தைநீப்பாயென்றே
வேதமந்திரநவின்று விழிகணீர்மாலையேய்ப்ப
வாதரவுடன்றுதித்த வமரர்நாயகனவ்வண்ண
மாதர்மென்முல்லையீன்ற முகைநகைமாதினுக்கும். (௮௪)

அத்தகையபிடேகாதி யாகியநிவேதனங்கள்
கொத்துறுமலரால்பீசாக் கரவருச்சனைகுயிற்றி
மெத்துறுபளிததீபம் யாவுமேமிகவியற்றித்
தத்துறலொழித்தியென்னச் சரண்சரணிறைஞ்சுங்காலை. (௮௫)

வில்லுமிழ்கலன்கள்பூண்டு மிளிர்தருசெம்மாணிக்க
வல்லியோர்பாகத்தோடு மத்தவாரணமுகத்தோன்
சொல்லருமுருகவேளுஞ் சூழ்ந்திடச்சிவலோகேசன்
பல்லியமுழங்கக்காட்சி யருளினன்பகலோன்போல. (௮௬)

வல்லியோர்பாகத்தெம்மான் மன்மிகவுவகைபூத்துப்
புல்லியகருணையால்மாற் றந்தனைப்புகலுகிற்பா
னெல்லையிலன்பாற்பூசை யிழைத்திடுநியமந்தன்னா
னல்லனவெல்லாமின்றேநல்குதும்பெறுகவென்றே (௮௭)

கோதமனில்லாடன்னைக் கூடியகுற்றமுன்னைத்
தீதியற்றுதுநந்தமாணையாற்றீர்த்தளித்தோ
னீதுயரடையாவண்ணம் புனிதமாய்நிகழ்வாயென்று
பாதமென்றலைக்களிக்கும் பரசிவனருளினானால். (௮௮)

மண்மிசைநாமுவப்ப நித்யநைமித்யம் வாய்ந்த
புண்ணியவிழாவையாண்டும் புரிதனம்மடியாருக்கிங்
குண்ணியவுணவளித்தல் செயஞ்செல்வமுண்டாமென்ப
துண்மையேயென்னும்வேத வுரையினையுணர்வையன்றே. (௮௯)

ஆதலானந்தமக்கு விழாவினையாற்றியீண்டு
மாதலாதிகமேயென்னப் பணிவிடைமன்னுவிப்பாய்
மூதலோத்தமமாம்வென்றி பெறநண்ணார்தமைமுடித்துக்
காதலாற்றருநாடெய்தக் கடைப்பிடித்திடுவையென்றான். (௯0)

வந்திரந்தோர்க்குமிக்க வரமளித்ததவும்வேந்தே
கந்திறவேசுளிக்குங் கடாம்பொழிகளிறல்யானை
வந்துநின்னேவறன்னுன் மணித்தடந்தொட்டதாலே
யிந்திரதீர்த்தமென்றீ திலங்குகவெந்தஞான்றும். (௬௧)

உருவினைக்காட்டியுய்யச் செய்திடுமொப்பிலானே
யருவினையடைந்தாகி யிலிங்கத்துண்மறைந்தானுகத்
தருவினையேவல்கொள்ளு மகபதிதணவாளுகிக்
குருவினைவரித்துவேண்டும் விழாவினைக்குயிற்றினுனல். (௬௨)

விடைமதிதன்னிற்பூர்வ வுவாவினில்விசாகநாளி
லடைவுறுமேகநாதன் றீர்த்தத்திலார்வமிக்கே
தொடையுறுகொன்றையண்ணல் விழாச்சிறபபணைத்துந்தோற்றிக்
நடையுறப்புரிந்துசென்றான் விண்ணுறைதனதுநாடு. (௬௩)

---

௭

## இந்திரன் பூசித்தபடலச் சுருக்கம்.

---

நைமிசாரண்யவாசிகளான மகரிஷிகளே! கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்லுகின்றார். பூர்வம் பிரமதேவரிருந்த அழகுள்ள அகலிகையென்பவளைச் சிருட்டித்து அப்பெண்வளர்ந்தபின்பு தக்கநாயகன் கிடைக்கவேண்டுமென்று உள்ளங்கொண்டிருக்குங்கால், கௌதமரென்னுமுனிபுங்கவர் பிரமதேவரிடஞ்சென்று ஐயரே! நான்விவாகஞ்செய்ய உன்புத்திரியான அகலிகையைத் தந்தருள்கவென்று கேட்டனர். அப்போது இந்திரன் வந்து உமது புத்திரியை நான்மணஞ்செயத் தந்தருள்வையென்று கேட்க; மலரோன் அவ்விருவரையும்நோக்கி நீங்கள் இருவருள் இவ்வண்டத்தை மூன்றுதரம் வலமாகமுன்னேவந்தவர்கள் யாவரோ? அவரே எமதுபெண்ணுக்கு நாயகனுகுவீரென்று அருளிச்செய்ய, இந்திரன் வெள்ளையானையின்மீதேறி அண்டத்தைச்சுற்றச்செல்ல கௌதமரெழுந்து நீர் அண்டத்தைப்ப

டைக்கும் நாயகராதலால் உம்மைச்சுற்றுதல் போதுமென்று அவரையேவலமாகவந்தார். பிரமதேவர் ஒன்றுஞ்சொல்லாதுஅக லிகையை மணம்புரிவித்தார். கௌதமர் அப்பெண்ணைக்கொண்டு செல்லும்போது இந்திரன் கண்டு பிரமதேவர்செய்கைக்குவருந் தி எவ்விதத்திலும் இவளைச்சேர்ந்து களிப்பேனென்று சபதங் கூறித் தேவலோகஞ்சென்றான். பின்னொருநாள் கௌதமர் நித்தி ரை செய்யும்பொழுது தான் காகவுருவடைந்து தனது மாயை யினால் வாரணத்தையும் உண்டாக்கிக் கொண்டு கூவுதலும், கௌதமரிஷியானவர் விடியற்காலமென்று கருதி தீர்த்தமாடச் சென்றார். அப்போது இந்திரன் உட்புகுந்து அகலிகையை மருவி மகிழ்ந்தான். அம்மகரிஷியானவர் ஞானதிருஷ்டியாலிஃதுணர்ந் து பன்னகசாலையையெய்திப்பூனைவடிவமாகச்சென்ற இந்திரனைக் கண்டு உன்சரீரமுழுமையும் ஆயிரம் யோனியாகுகவென்று சபித் து அகலிகையை நோக்கி நீ கல்லாகக்கடவையென்று கடுஞ்சாப ங்கூறினர். இந்திரன்வருந்தித்தன்குருவைக்கண்டு அடிகளே! இச் சாபம் நீங்கும்வகை எனக்கருள்வீரென்று வேண்டினன். அதற் கவரிரங்கி இந்திரனேக்ஷேத்திரங்கள் சென்று தீர்த்துக்கொள்வா யாக வென்றனர். இந்திரன் காசி முதலிய பலதலங்கள் சென்றும் நீங்காமல் கரஞ்சவனத்தைக் கண்ணுற்று மிகவு மகிழ்வுகொண்டு தன்பேரால்தீர்த்தமுண்டாக்கிச்சங்கற்பவிதியின்முறைப்படிக்குஸ் நானஞ்செய்து சிவலோகநாயகரை வலம்வந்து வேண்டுவன கொ ண்டு பூஜை புரிந்து பணிந்து தோத்திரஞ்செய்து ஆனந்தபரவச னாய்நிற்குமளவில் சிவலோகேசர் காக்ஷிதந்தருளி நீ செய்தபூசனை க்கு மகிழ்ந்தே உனக்குற்ற பழியைத்தீர்த்தனம். இனித்துயரம் ஒ ழிந்து நமக்குத்திருவிழாவை ஆண்டாண்டுதோறும் செய்வையெ ன்றருளினர். அப்போது இந்திரன் களிகூர்ந்து வைகாசி மாதம் பருவத்தில் விசாகநாளில் திருவிழா முதலியன சிறப்பனைத்துஞ் செய்து தனதுறைவிடமாகிய இந்திரலோகத்தையடைந்தான்.

முற்றும்.

௨

## அகத்தியர் பூசித்தபடலம்.

உம்பலூர்தருமும்பருக் கிறைபவனுமூனர்
கும்பலோர்பதிசாபத்தைத் துறந்ததுகுறித்து
நம்பனுற்றிடுதிருமணக் கோலத்தைநாடிக்
கும்பமாமுனிவரம்பெறு காதையைக்குணிப்பாம். (௧)

மைக்கருங்குழற்சிலையினை மகளெனப்பெற்று
முக்கண்மேவிய நக்கனுக்களித்ததின்முறைமை
மிக்கமாதுலனென்றிடு மேதகைவாய்ந்த
தக்கனென்னவேயாவருஞ் சாற்றபிதானன். (௨)

திருக்கிளர்ந்திடுசெல்வமெவ் வனமிராசதஞ்சேர்ந்
திருக்குறும்மவிவேகமோவ் வொன்றுகேடெய்து
முருக்குறுமிவைநான்கு மேவொருவன்பால்மொய்க்கிற்
றருக்கிறைகெடுவானெனற் கிவனொருசான்றன். (௩)

அரனடிக்கன்பினுயர்ந்தவர் பாவமாற்றிடினுந்
தரனுயர்ந்திடுமறமென்ப தகையிலாரறமும்
புரைசெய்பாவமென்றுரைப்பதைப் புகரறவிளக்க
வுரரில்யாகத்தின்மறித்தலை பெற்றிடுமுரவோன். (௪)

தீயசெய்கையிற்சிறந்தவன் சிறுவியென்றிடுபே
ராயதன்மைமைமாற்றிட வெண்ணியெம்மம்மை
நாயகன்றனைவினவின ணண்பினிதேனுக்கிச்
சேயவல்லியைக்கருக்குறுஞ் செய்யவாய்விள்ளும். (௫)

இமமலைக்கிறை தவம்புரிகின்றதாலேழாய்
சமமுலைக்கொடியாகவே தகைமையிற்றோன்றி
நமைமிகக்குறித்தருந் தவம்புரிதரினுமே
யமைவுறம்படிக்கடிமணம் புரிவமென்றறைந்தார். (௬)

கடுக்கைக்கண்ணியான்கூறலுங் கமலவாண்முகத்தா
ளடுக்கைசேர்தலுந் துணைக்கரமுதவுவபோல

விடுக்கணீக்கிடமகவிலாவறுமையை யிகப்ப
வடுக்கலுக்கிறைகாணுறக்குழவியா யமைந்தாள். (௭)

அன்னமன்னவன்காண்டலு மகங்களிதுளும்பிச்
சொன்னமென்கொடியென்வயிற் றோன்றியதென்னாக்
கன்னலின்சுவைக்கண்டினைக் கண்டெனக்கைக்கொண்
டின்னருங்களிப்போடுதவினன் மனையுவப்ப. (௮)

என்னமாதவஞ்செய்ததோ வென்கரமென்றே
தன்னகங்களிதுளும்புற மருமத்திற்றழுவிக்
கன்னமூட்டுறத்தெவிட்டுறு மதுரமேகடலின்
முன்னிலேகர்காணுவமுதே யெனமொழிந்து. (௯)

சித்தமேவுறுபெருங்களிப் புறுவதாய்ச்செவிகொண்
மத்தமேவுமாமருப்பிடை வராததாய்ப்பூணின்
மெத்தமேவுறப்புழையிலதாய் விலையறியா
முத்தமேயென முத்தமிட்டாள்களிமூழ்க. (௧௦)

குழலும்யாழுமேயினியவென் றேபலர்கூறி
யுழலுமாந்தரினுழன் றுழன்றே திரிந்தோர்தாஞ்
சுழலும்பாலொடுதேன்கலந் தாலெனச்சொற்சொல்
மழலைமென்மொழியா லவைநீத்திடவளர்ந்தாள். (௧௧)

பெண்ணினுக்கரசாகிய மயிலினைப்பிறங்கு
மண்ணினுக்கெளிதாகிய மதியினைவயங்குங்
கண்ணினுக்கொளியாகிய மணியினைக்காணப்
பண்ணினுக்கினிதாகிய வினிமையைப்பார்த்தே. (௧௨)

அல்லியாங்கமலச்சர ணடியருக்கருளிக்
கல்லியாவர்க்கும்வினையறு சிவக்கம்பக்கண்ணே
வல்லியாங்கொடியேறியே விழாவயங்கற்கு
மெல்லியாளவண்வளர்ந்திட வளர்த்தனண்மேனை (௧௩)

வெள்ளிதங்குங்குசேசயத் தவர்விழியாக
வொள்ளிதாகவேயுறைபினு முலகினினியல்லை

யெள்ளிலாமலேகுருமுன மெனைத்தையுமொருங்கே
தெள்ளிதாகவேயுணர்ந்தனள் சிகியெனுஞ்சிலையே. (௧௪)

மெய்ம்மையீரெழுபுவனமுந் தாங்குமேருவினை
மும்மையாம்புரமெரித்திட வளைத்தமுன்னோனை
யிம்மையெந்தலைதாங்குறு மென்றிளமுலைதா
மெம்மையும்வளைத்திடுவரோ பார்ப்பமென்றெழுந்த. (௧௫)

இமிழ்திரைக்கணேயின்னுமால் கடையுறினெய்துந்
திமிரமாம்விடஞ்சிவனலா லெவருணல்செய்வார்
அமிதமேதுளிர்ந்தாலுமே சோகநீங்குறுமென்
றமுதகும்பமேவளர்வபோற்றனம் வளர்ந்தமைந்த. (௧௬)

பார்க்குளேனைபோர்பரவுபார்த் திபர்க்கும்பன்னிக்கு
நீர்க்குளேகுளிர்போன்மனைத் திடைக்களிசிறப்ப
வீர்க்குளேபுகவிடமின்றித் திதலையையேய்ந்து
வார்க்குளேதனம்வளர்ந்திட வளர்ந்திடுகாலை. (௧௭)

எழுவராமுனிவரையரன்வருகெனவெண்ண
முழுவரம்பறிதருபவர் நண்ணலுமொழியும்
வழுவிலாமலைமகடனை மணம்புரிதற்கே
பழுதிலாதுநீர்பேசியே வம்மெனப்பணித்தான். (௧௮)

கோதுறுமலைசெயற்கருந் தவமுற்றுறங்குயிற்றிப்
போதுளானுமேபுகழ்தரும் புனிதர்கள்பொற்பின்
மாதையீன்றிடுந்தந்தையா மலைக்கிழவன்பாற்
றாதுசென்றனர்கண்டன னவனடிதொழுதான். (௧௯)

முந்தையோரென்மூதாதையோர் புண்ணியமுதிர்வா
லெந்தையோரெலாமெளியன்பா லெய்தினீரென்னச்
சந்தமாமுகமன்பல வுவகையிற்சாற்றி
வந்தகாரியமென்னென வினவினன்மலர்ந்தே. (௨௦)

அண்டம்யாவுமோரணுவதா யணுவண்டமாகக்
கொண்டபேருருச்சிற்றுருக் கொண்டவெங்கோமான்

றொண்டர்நாயகனீபெறு சுதையினைமணப்ப
விண்டிடும்படியெம்மை யுய்த்தானெனவிளம்ப. (உக)

வேறு.

தளிர்ப்புறுமுவகையிற் சாற்றலோடுமே
வளைப்புறுதோள்வளை விண்டவாகுவில்
களிப்பெனுங்கடற்கரை காண்குறுமலே
யொளிப்புறுவோரென மூழ்கியுற்றனன். (உஉ)

மாமலரெனுமவர் வதனநோக்கியே
காமனையெரித்தவர் கருத்திலுன்னியே
லேமுறத்தமியனைக் கேட்பதென்னினித்
தாமதமென்மணஞ் சமைக்கவென்றனன். (உங)

வேதியர்தம்மைக்கூய் விமலனுக்குநல்
லேதுவாமயினுக்கு மணமியற்றுறக்
கோதிலாப்புண்ணிய நாள்குறித்திட
வோதினன்மலையர சென்னுமுத்தமன். (உச)

முழங்குறுகணிதநூன் முற்றுணர்ந்திடு
மழுங்கிடாப்பேரறி வமைந்தமாட்சியா
ரொழுங்குறவோரை யாதியவையுள்ளியே
வழங்கினர்பணிமலை மன்னன்றேறவே. (உரு)

வேள்விநாண்முடங்கலின் விரைந்துதீட்டியே
கேள்விசால்முனிவரைக் கிளர்ந்தனுப்பினு
னீள்விசாலங்கிளர் கயிலைநேர்ந்தயி
ஞள்விசாரணையினை நவின்றுநல்கினூர். (உசா)

தாமரைவாழ்வுறு சதுர்முகத்தனைப்
பூமருவுறுதிருப் பொலிந்துளான்றனைக்
கோமருவுற்றபைம்புய குழாத்தினை
யேமருவுறவழைத்திடுமி னென்றனன். (உள)

கண்ணகனிலமெலாங் காப்பினோரையும்
விண்ணகத்துரிமையின் மேவுவோரையு

மெண்ணகத்தரவிறை யெனச்சொல்வோரையு
மண்ணலென்பவன்வர வறைமினென்றலும் (உஅ)

கின்னரரியக்கர்கந் தருவர்கேள்விசா
னன்னயத்தமரர்க ளுடஞ்சித்தர்கண்
ணின்னுறுசாரணர் கெருடர்விஞ்சைய
ரின்னவர்முறைமுறை யெய்தினரரோ. (உகூ)

பொன்னவனொடுமலர்ப் புனிதன்றன்னொடுந்
தொன்னமர்தேவர்தங் குழுவினோடுமே
யன்னமுங்கேழலு மறியொண்ணுதவ
னின்னியமார்ப்புற விமயமெய்தினன். (௩௦)

நாலிரண்டொடுமிரு திசையுநண்ணலான்
மேலதுகீழதாய் விபுலைமேவியே
சாலவேயுத்தரந் தாழ்ந்துதென்றிசை
யேலவேமிகுந்திடு மேற்றங்கண்டனன். (௩க)

மாமணவாளனும் வள்ளருனுமே
நாமணக்குந்தமிழ் முனியைநாடியே
யாமணம்புரியநீ தெற்கமைந்திடற்
பூமணேராகவே பொருந்துமென்றனன். (௩உ)

கருத்தினற்கடலினைக் கரத்தினள்ளியே
யருத்தியோடேமுனமயில வில்லையேன்
மருத்துவனுருத்துமே வச்சிரத்தினால்
விருத்திராசுரன்றனை வெல்லவல்லனோ. (௩௩)

பொன்னையேபொருவுதல் பொன்னையல்லதோ
மின்னையேபொருவுதன் மின்னையல்லதோ
வன்னையேபொருவுத லன்னையல்லதோ
நின்னையேபொருவுத னியலாருண்டோ. (௩ச)

தேவருமுனிவருஞ் சித்தர்யாவரு
மூவருமிடைந்துடன் மொய்ப்பவென்னொடே
யேவருமுனக்கிணை யல்லவென்றிடத்
தாவருநிலையதாய்ச் சமமதாகுமால். (௩ரு)

என்றிவைபலமொழிந் தேகவேவனு
நின்றிருவேள்வியைக் காணுநேயனே
னென்றிருநோக்கத்திற் கியைந்தபாவத்தால்
பின்றவேர்வெண்ணினிப் பேசற்பாற்றென்றான். (௩௬)

நலனுறுதிருமணக் கோலநாடியே
பலருமேபுண்ணியம் படைக்குமாற்றத்தால்
புலரியினெனையரும் போற்றமேவிடு
மலரியைக்காணுறுக் கூகையாகவோ. (௩௭)

எனநலிவுற்றுமா முனியியம்பலு
மனநிறைகருணையால் வதனநோக்கியே
சனநிறைகுழுவினுற் றரணியேற்றம்போ
னனியுறினெவ்வண நடத்தற்பாற்றென்றான். (௩௮)

* நரிப்பங்குருமலே நண்ணுவரெனில்
விருப்பெங்குமின்றியே வேட்டவண்ணமே
திருப்புன்கூரிடைநமைச் சேவித்துப்பலா
மிருப்பங்கேயெனத்தென்பா லேகுவாயென்றான். (௩௯)

என்றலும்விடையினை யேற்றமாதவக்
குன்றெனுங்குறுமுனி குறளுமென்றுமே
சென்றுறவேயெனுச் சிலம்பைநீங்கியே
தென்றிசைநோக்கியே சேறன்மேயினான். (௪0)

அலகிலாக்காவத மரைநொடிக்கணே
விலகிடுதவவிமானத்து மீதுவிண்
டலமெனுமாற்றினுற் சாருமாமுனி
கலகஞ்செய்விந்தமாங் கிரியைக்கண்டனன். (௪௧)

வேறு.

அவ்வரைதாறைதமாமுனி யுரைத்த மொழியதனையகத்திற் கொண்டு, நவ்விமிகும்பொன்மேரு தாழ்ப்பவுயர் வோமென்று நவிரமெண்ணிக், கவ்வைகொளி இப்புள்ளினத்துஞ்செல்ல நெறியில்லாற்ககனமெங்கு, மொவ்வுறவேவளர்ந்தகன்று செம்பிற் றுலென்னமிக வோங்கிற்றம்மா. (௪௨

---

நரிப்பு துன்பம்.

துறுமாற்றமிகும்விந்தமெனுங்குன்றம் பொன்வரைபோற்
றுவன்றியேகு, நறுமாற்றையடைத்ததனைக் குறுங்கரத்தைநீட்டி
ப்பாதலத்தைநண்ண, விறுமாப்பி னெவ்வளவி லுயர்ந்தனரோ
வவ்வளவுமிழிவரென்னுங், குறிகாட்டியிதைப்பார்ப்பீரென வழு
த்திச்சென்றனன்குரவனம்மா. (௬௫)

பாவிரியும்புகழ்முனிவன்சையமெனுந் திருநாமப்பறம்பின்
மத்த, மாவிரியும்வதனத்தைங்கரக்கடவுள் மாணியாம்வடிவந்
தாங்கி, நாவிரியுமறைபயிலும்பனவனுப்வந்தங்குநண்ணலோடுங்,
காவிரிதங்கிய கரகந்தனைச்சற்றுப் பிடியெனக்கைக்கொடுத்து()

பாணியாற்புனிதமதுபெறும்வண்ண மயலிடத்துப்பரிவினோக,
மாணியாங்கரிமுகவனஃதுதனைப் பூமிசையேவைத்துப்பின்னர்
வேணியார்ந்தலவுகின்றவாயசத்தி னுருக்கொண்டுகரகமேவிப்
பாணியானதுகவிழச்சாய்த்ததனால் வரையின்மிசைப்பரவிற்றம்
[மா.

வேறு.

காவிரியுஃபடிக் கவிழ்த்திடத்தெணீர்
பூவிரிந்தெங்குமே பொலியமேவலா
லாவிரியும்புகழ் நண்ணியெங்குமே
காவிரிநதியெனக் கழறவோங்கிற்றால். (௬௭)

முன்னதிபத்தரும் போற்றுமுன்னவ
னந்நதியிடைப்பணிந் தம்புவிக்கணே
யெந்நதிகளுக்குமே யேற்றமீதெனச்
சொன்னதியிடைப்படி வுற்றுத்தோய்ந்தனன். (௬௮)

தலைமுதலந்நதிப் பாங்கர்சார்தந்தே
யலைமுதன்மதியணி யண்ணலார்தரு
நிலைமிகுசினகரந் தோறுநேயத்தான்
மலைமகடன்னொடும் வணங்கியேகிபே. (௬௯)

வேறு.

மன்னுதிரிகோடியெனு மாதவர்கள்கூடி
முன்னமரனைச்சபரி செய்தமுறையாலே

சொன்னதிரிகோடியெனுங் காவலதிற்றூய
முன்னவனருச்சனை புரிந்தருண்முயங்கி. (௫௰)

* மாயுரமெனும்பதியின் வந்துவிடைதீர்த்தன்
தோயுறமகிழ்ந்துபடிதந் திறைதுதித்துக்
கேயூரமணிந்தெழில் கெழீஇயவடன்பாகன்
மேயவடித்தாமரையில் வீழ்ந்துபுகழ்ந்தேத்தி. (௫௧)

பொற்புமிகுமாதுகலை மாதுபொலிவாரு
மற்புதகுசேசயமலர்ந்த திருவாவி
யெப்புடையுமேவியெழின் மேவியிலகுற்று
கற்பகநிறைந்திடு கரஞ்சவனங்கண்டான். (௫௨)

தூயமறைவேதியர்கள் சூழமறுகெங்கு
மேயகலையாகமம் விராயமகவேள்வி
நேயமொடியற்றிட னெழுங்கவருதூம
மாயனெடுமாலெனவளர்ந் தவனையொக்கும். (௫௩)

எங்கினுமறப்புற மிசைத்திடுதல்பல்ல
வெங்கினுமேபட்டிமண்ட பம்மிலகல்பல்ல
வெங்கினுந்தொறுத்தொழுவ மேற்றிடுதல்பல்ல
வெங்கினும்வளங்கொடன மீந்திடுதல்பல்ல. (௫௪)

இன்னவளமிக்குறு கரஞ்சவனமெய்தித்
தன்னிருகணீரது ததும்பநிறையன்பின்
றுன்னலுறுவென்புகணெக் குற்றுறத்துலங்கிச்
சொன்னதலமீதென மனத்துவகைதூங்க. (௫௫)

என்னவதிரேகமென்ன வைபவமதென்று
பன்னியொடுமுன்னமொழி மாணவர்கள்பாங்காய்த்
துன்னநலமேவுகுடக்குங் குணக்குந்தூய்தாய்
நன்னயமிகுந்ததிருக் கோட்டமதைநண்ணி. (௫௬)

ஆகமவிதிப்படிச்சங் கற்பமதையாற்றித்
தாகமொடுமைந்தெழுத்தைத் தாலினிற்பதித்துப்
பாகமுறுதன்மனைவி யைக்கரம்பரித்தே
யாகமுறநாடியதி லாடினன்றயங்க. (௫௭)

---

* மாயூரம்-மாயுரம்எனக் குறுக்கல்விகாரம்

கொள்ளைகொடவந்தவைர் கூலமதிலேறி
வெள்ளைநிறக்கோசிகம் விரித்தரையுடுத்தி
யள்ளுறும்வெண்ணீறதனை யைம்மெழுத்தமைந்தே
தள்ளுதலிலாத திரிபுண்டரந்தரித்து. (நிஅ)

கண்டமதிலுஞ்சிரத்தினுங் கரத்தினுங்கை
கொண்டசெபமாலைபுனைந் தேதுவைகுலாவ
வண்டபகிரண்டமுதல் யாவையுமளித்த
துண்டமதிவேணியரனைக் கருத்திற்றுன்னி. (நிகூ)

நித்தியம்புரிந்திடு கன்மங்களைநிறைத்தே
யத்தலுறைதந்த திருவாலயத்துளேகி
யுத்தமதரத்தினி னிறைஞ்சுபுவுவந்தே
பத்தியொடுமூவல மியற்றுபுபரிந்தே. (சா0)

வேறு.

சித்துருவடிவமாயுமிலைகர்க்குத் தெவிட்டொணாத
புத்தமுதாயுமார்க்குமறிவினுக் கறிவாய்ப்பொங்கும்
வித்தகச்சிவலோகக்கோனென்னம்மை மேவுங்கோயில்
சித்திரமகுடத்தான மடிக்கடிதேர்ந்திறைஞ்சி. (சாக)

உத்தரபாகப்பஞ்சலிங்கத்தினுண்மைமகண்டிங்
கித்தலத்திவண்கணப்போ திருப்பினும்போதுமென்று
பத்தியாயுறைந்தெம்மான்றன் சன்னிதிமருவிப்பல்ல
சித்தியுமருள்வானென்றே சிந்தனையுவப்பினாலே. (சாஉ)

அண்ணல்வாழ்மூலத்தானத் தருகினுத்தரமுகத்தா
யொண்ணிறவல்லியத்தோ லாசனத்துற்றுவந்து
பண்ணுறுமறையகத்திற் பயினடமியற்றுகின்ற
வெண்ணுறுசிவலோகேசனேடு மைதனையுமெண்ணி. (சாங)

இதயபுண்டரிகந்தன்னி லிசைவுறமிகச்சிந்தித்தே
யுதவுமந்திரங்கடம்மினுத் தமக்குடியையுற்றே
பதிசெய்பஞ்சாக்கரத்தைப் பன்னீராயிரந்தரத்தின்
முதிர்வுறுசெபம்புரிந்தே முற்றியதவமுடித்தான். (சாச)

அத்தகுசெபதபத்தாலண்ணன் மிக்குவகையுற்றே
யுத்தமமூலலிங்கத் திடைநின்றுமூலப்பிலாத

பத்துநூருங்கரங்கொள் பானுவினுதயமென்னச்
சித்திரமணக்கோலங் கொளுருவினிற்றிகழ்ந்துநின்றான். (௬௫)
மங்களச்சோமன்றன்னை மகிழ்ந்துதன்சென்னிபெற்றோன்
மங்களச்சோமன்றன்னை வடிவழகுறவுடுத்திக்
*கங்கணமாமராவைக்கரத்தினி லணியப்பெற்றோன்
கங்கணந்தனைமீச்சோதி கஞலுறவேயணிந்து. (௬௬)
வேணியில்வேணிவைத்தே முடியெனவேய்ந்தோன்றானே
மாணுறுமணியிழைத்த மாமுடிசிரமேல்வைத்துங்
காணுறக்கேட்கவொன்றுங் கட்செவிக்குண்டலத்தோன்
சேணுறவொளிருஞ்சோதிக் குண்டலஞ்செவிதரித்து. (௬௭)
இருகணற்காணுதென் றிமையவரியம்புவார்நா
லிருகணற்பதுமன்றானு மெனக்குநோக்கொணுதென்பான்பன்
னிருகணனஃதேயென்ன வீரைஞ்ஞூறெனுங்கண்ணானு
மிருசகத்திரக்கண்ணானு மெய்ப்படப்பேரெழிலிலங்க. (௬௮)
அழகினுக்கழகியான சௌந்தரநாயகிப்பே
ரொழுகொளிதுளும்பு கோமளாம்பிகையுடனே தூய
மழவிடையதின்மிசைப்தி மணக்கோலமதனைக்காட்டி
விழவுறுகணத்தரோடு வெளிப்படவிமலனின்றான். (௬௯)
சொக்கமாய்வேகடஞ்செய் சோதிமாமணியைப்போல
நக்கனாருளிற்றந்த கோலத்தைஞானமீதிங்
கிக்கெனச்சீனியென்ன விருடியர்க்கிறைவன்காணு
மிக்கவானந்தமென்னுங் கடலிடைவீழ்ந்தானன்றே. (௭0)
கடலினைக்கரங்கொண்டுண்டோன் களிக்கடல்கரைகாணுதே
யுடலினைமண்ணின்மீதா வுறும்படிமிகப்பணிந்தே
மடலுறுகமலக்கண்ணீர் வழிந்துவாரிதிபின்மல்க
விடலினியென்னையென்று துதிபலவிளம்பலுற்றான். (௭௧)
முதுக்குறைவாளர்க்கெல்லா முன்னர்துய்த்திடுதீம்பாலே
யெதிர்க்குறுவாளர்க்கெல்லா மீறியற்றுவைதீம்பாலே
கதிக்குறுமடிமைக்கெல்லாங் கையுறுமமுதகும்பம்
விதிக்குறுகொடுமைக்கெல்லாம் விண்ணுறுமிராசிகும்பம். (௭௨)

---

கங்கணம் தலைக்கூட்டம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ஏலவேதுதிபுரிந்தே யெஞ்சிவலோகநாதர்
கோலம்வாழ்வுறவிருப்பின் வரங்கொடுகுறிக்கொடேயம்
மூலலிங்கத்துக்கேற்றசபரியின் முறையியற்றச்
சாலவேவேண்டல்யாவுஞ் சமைத்தனன்றவத்தெங்கோனே. ()

முன்புறுதயிலமாதி வகையினைமுறையினூட்டி
பின்பிறழ்வேணிக்கங்கை யேமுதல்விளம்பலுற்ற
பொன்பிறழ்பொன்னிகோதாவிரி பலபுனிததீர்த்த
மன்புறுநீரைக்கூட்டி யாட்டினனமலற்கம்மா. (எச)

மெல்லியகோசிகத்தான் மெய்யினீரொற்றிநீக்கிச்
சொல்லியவெண்பட்டாலே சூழற்றுநீறுசாத்திப்
பல்லியல்வடிவிலொப்பிலக்கமா மணியைப்பாங்காய்
நல்லியறிலகத்தோடு மணிந்தனன்ஞானமூர்த்தி. (எரு)

உதயமேயொடுக்கமாகு முறையின்றியுணர்வமைந்த
சிதைவிலாவண்டம்யாவு மணந்துறத்திகழாநின்ற
விதையமாமலரின்கண்வைத் தருச்சிக்குமிருடியெங்கோன்
புதியபன்மலரினாலே புறத்தினும்பூசித்தான்ல் (எசு)

வன்னிமாவருக்கைகோங்கு பனிச்செய்யாவரையேமத்தம்
பன்னியோடாத்திவங்கம் பாதிரியிலந்தைவில்வந்
துன்னியகுருவைபச்சை துளசியேபலாசுபிச்சி
யின்னபத்திரங்களாலு மருச்சனைவகையியற்றி. எள

ஆவியைநிவேதனிக்கு மறவன்பல்லோதனங்கள்
மேவியவப்பவர்க்கம் விளம்புபல்வகையினோடு
மாவியல்கனிமுன்னை பலகனிமல்குதாழை
தேவியரும்பூலாதி நிவேதனஞ்செய்துபின்னர். (எஅ)

என்றுமேதூபதீப மியலுயிர்தனையளிக்குங்
குன்றுறுமுனிவன்றூபதீபங்கள் குலவவாற்றி
யொன்றிரண்டாகாவொன்றிலேந் தையுமொன்றதாக்கி
நன்றிபைநினைந்திறைஞ்சித் துதிமொழிநவிலலுற்றான். (எகூ)

நகுசடைமுடியாய்போற்றி நஞ்சுண்டுமுடியாய்போற்றி
சுருபநல்லுடையாய்போற்றி கருதலர்க்குடையாய்போற்றி

தகுமாழ்ப்படையாய்போற்றி தகாவளம்படையாய்போற்றி
மிகுவெண்மையுடையாய்போற்றிமெலியர்பாலுடையாய்போற்றி.

பதுமனுக்கருளளித்தும் பாகசாதனனென்றேதிக்
கதுமனவந்திறைஞ்சுங் ககனநாடுறைவானுக்குங்
குதுகலக்கருணைவாரி கொடுத்தருள்கூரிலாயோ
விதுநல்லவமையமென்றே யெய்தினனிறைவபோற்றி. (௮௧)

பத்திபுந்திடமாய்வேண்டும் பகாருமுண்மைபெற்ற
புத்தியும்வேண்டுமிந்நாள் வரையுமேபுரிதவத்தின்
சித்தியும்வேண்டுநின்றன் றிருவடிநீழல்சேருஞ்
சத்தியும்வேண்டுநின்னைச் சரணெனச்சரண்புக்கேற்கே. (௮௨)

மங்களகல்யாணச்சீர் வாய்ந்திடுகோலந்தன்னை
மங்களவபிடேகாரா தனையெவர்வகுத்திட்டாரோ
வங்கவர்திருவுநீங்கா மகப்பெறலனைத்துமுற்று
மங்கவர்முத்திமெய்த வருளெனப்பணிந்தானங்கண். [௮௩)

அகத்தியமுனியிரப்ப வகந்தியமளித்துமென்ன
நகத்தினற்சிலைகைக்கொண்ட நக்கனுநவிறலாலே
சகத்தினிற்றத்துவங்கொ டலைமைவாய்ந்திட்டமிக்க
மகத்துவமிஃதுபோலெத் தலமதைவகுக்கற்பாலார். (௮௪)

எண்ணியவரங்களெல்லாம் யாவருமெய்தும்வண்ணம்
புண்ணியமுனியெங்கோமான் பொருந்தியவ்வயினேபன்னா
ணண்ணியதலத்தின்பாங்கர் நவிலுந்தன்பேரிலிங்க
மண்ணியதலத்திற்சின்னா ளமர்ந்தனனருளின்மூர்த்தி. (௮௫)

இன்னணஞ்சௌந்தரப்பேர் நாயகியானவெம்மோய்க்
கன்னவன்மனைவிலோபா முத்திரைசபரியாற்றிப்
பன்னரும்வரமனைத்தும் பாலனம்பெற்றுவந்து
தன்னிருசரோருகத்தின் சரணமேசரணாப்போற்றி. (௮௬)

இவ்வழிச்சபரியாற்றி யிருந்துழித்தென்வடக்குச்
செவ்வழிச்சமமதாக்கித் திருத்தமாபுலகிருப்பி
னெவ்வழியேனுமிக்க வறிஞர்களெண்ணிநோக்கின்
செவ்வழிப்புரியலுற்ற தவமலாற்சிறந்ததுண்டோ. (௮௭)

மறுவறுதவம்புரிந்த மாதவன்வளப்பமல்கி
யுறுதலமெனுங்கரஞ்ச மாவனமொருவிவெண்மை
பெறுமறைக்காட்டுக்கேகச் சென்றனன்பெட்பினுற்று
நறியமாணுக்கரான குழாத்தொடுநணுகலுற்றே. (அஅ)

அகத்தியமுனிவர் பூசித்தபடலம்
முற்றிற்று.

---

## அகத்தியர் பூசித்தபடலச் சுருக்கம்.

ஓநைமிசாரண்யவாசிகளாகிய மகரிஷிகளே! கேளுங்கள். தக்கனென்பவன் மகளாகிய ஈஸ்வரியானவள் பரமசிவனை நோக்கி யெங்கோமானே! எனக்குள்ள தாக்ஷாயணியென்னும் பெயரை மாற்றி யருளுக வென்று கேட்க, சிவபெருமான் பெண்ணே! இமயமலைக்கிறைவன் உன்னைப் புத்திரியாகவேண்டித்தவம்புரிகின்றமையின் அவன் மகளாகுவை யென்றருளிச்செய்ய, அவ்வாறே மாதேவி இமயமலையடைந்து அவ்வரசனுக்கெதிரே குழந்தையாய்த்தோன்றினள். இமயமலையரையன்கண்டு ஆனந்தக்களிகூர்ந்து இருகரங்களாலுமெடுத்து உச்சிமோந்து தன் மனைவிகையிற்கொடுக்க, அம்மேனுதேவியும் மிக்கமகிழ்ச்சியோடு பாராட்டி வளர்த்தனள். வளருநாளில் சிவபெருமான் சப்தமுனிவரையுமழைத்து இமயகிரிக்கரசன் மகளை நாம்மணஞ்செய்யப்பேசிவாருமென் றனுப்பினர். அவர்களும் மலையரையன்பாற்சென்று வினவலும் மலையரையன் களிகூர்ந்து தருவதற்கிசைந்தான். அச்செய்தியுணர்ந்த சிவபெருமான் அரிபிரமாதிதேவர் யாவருஞ்சூழ இமயமலைக்கு வந்தவளவில் இமயமலை தாழ்ந்து தென்றிசை உயர; அகத்தியமுனிவரைநோக்கி "நீர் தென்றிசைக்கேகி கரஞ்சாரணியத்தை யடைந்து பூமியைச் சமப்படுத்துவீரென விடைகொடுத்தருளினர். அப்போது குறுமுனியும், அம்மலையைவிட்டு நீங்கி விந்தகிரிகண்டு காவேரிநதியையும் அருளிப் பலதலங்களையுந் தரிசித்து கரஞ்சாரண்யத்தை யடைந்து மேற்கிலுங் கிழக்கிலுமுள்ள தீர்த்தமாடி ஆலயம்புகுந்து

சிவலோகேசரையுஞ் சௌந்தரநாயகியையுந் தெரிசித்து பன்னீ ராயிரம் உரு பஞ்சாக்கரஞ் செபித்துத் தவமுற்றிருக்குமளவில் சிவலோகநாயகர் கல்யாணக்கோலங்காட்டி யருளுவாராயினர். அதுகண்டு ஆனந்தங்கொண்டு பூசாவிதியை முடித்து வணங்கி த்தோத்திரம் புரிந்தனர். இவ்வண்ணம் உமையவளுக்கும் பூச னைபுரிந்து அடுத்ததலத்தில் தன்பெயரால் சிவலிங்கம் ஸ்தாபித் துத் திருமறைக் காட்டுக்குச்சென்றனர்.

சருக்கம் முற்றிற்று.

## பன்னிருவேலிபெற்றபடலம்.

பொன்னிருங்கடுக்கைவேணிப் புண்ணியன்பூந்தாள்போற்றி
யென்னிருமலன்மணந்த விமமலைகடுப்பத்தென்பான்
முன்னிருந்ததனைச்சொற்ற முகிற்பெயமுன்னும்பின்னும்
பன்னிருவேலிகொண்ட பான்மையைப்பகருற்றும். (௧)

மூன்றொனுமுகத்தினந்தங் கலியுகமுதலிற்சியத்
தோன்றலுஞ்சேயோன்றனு முன்னுறநடப்பச்சுங்கண்
மீன்றகுசிலின்னு ரிருவர்பின்னுறவேமேவி
யுன்றுறநவக்கோளின்ன கதியினிலிருந்தவம்மா. (௨)

தடிந்திடுமெழிலிபெய்த ருனல்காதாகிமேவின்
படிந்திடுமழைநீராறறு நீர்கசிவுறுநீர்பாயு
நெடுந்திரைக்கடலுங்குன்று மெனவான்றோர்நிகழ்த்தலாலே
மடிந்திடும்வையமென்ன வையமென்வகுக்குங்காலே. (௩)

மழையதுமறுக்குமாயின் மாநிலவளப்பமென்னோ
மழையதுதவத்தினாலே வாய்த்திடுமாதவந்தான்
பிழையிலாவறச்செங்கோலாற் பெருகிடும்பெருகிலாதேற்
பிழையிலாவுலகினோருக் கென்சுகம்பேசற்பாற்றே. (௪)

சுசியுறவிசும்பினின்று துளியவைவீழினல்லாற்
பசியுற்றலையுங்காணப் படாவெனப்பகர்ந்ததாலே

திசையுறுபைங்கூழேது செப்புதானியங்களேது
மிசையுணவிலைகளேதிங் கென்னினிவிளம்பற்பாற்றே. (௫)

மாரிபெய்வளப்பங்குன்றி மகியினின்மறுத்தலாலே
ஏரிணைப்பண்ணைதன்னி லோட்டுறுமியற்கைத்தாமோ
சூரியனுற்றோர்க்கெல்லாந் தானமெட்டுணையுமுண்டோ
சேரியதவமுமுண்டோ வென்னினிநிகழ்த்தற்பாற்றே. (௬)

மிக்கொளும்வறுமையெய்தி மேதினிவெயிலிற்பட்ட
பூக்கொளுமென்பிலாத புழுவெனப்புலம்பன்மூழ்க
நாக்கொளுநீருமின்றி யுரோதனநண்ணுவாரேல்
கோக்கொளுநீருமின்றி யுடைத்தெனிற்கூறலென்னே. (௭)

சகமதின்மறையோரெல்லாஞ் சதுர்மறைமகமறந்தார்
மிகவுறுபுத்தேளெல்லா மவியுணும்வினைதுறந்தார்
புகழுறுந்தொறுக்களெல்லாம் பொழிதரும்பயமறந்த
முகிலிலாக்குற்றந்தன்னையிற்றெனமொழியப்பாற்றோ. (௮)

தானமுந்தவமுநீத்தார் தரணியிலுள்ளோர்யாரு
மானமும்புகழுநீத்தார் வண்மையிலுள்ளோர்தாமு
மீனமுங்கொலைகள்யாவு மிழைத்தனரென்றும்பாலைக்
கானமுமருதந்தானுங் கடுத்ததுகாணுவோர்க்கே. (௯)

பிறப்பருடந்தைவித்தை பேணியேயுரைத்தோன்போதஞ்
சிறப்பினேயுபதேசித்தோன் றீமிடிக்கன்னமீந்தோ
னறப்பெரும்பயத்திலஞ்சே லென்றவரைவர்தாமுந்
துறப்பருந்தந்தையென்று முதியவர்சொற்றதாலே. (௧௦)

மேதினியுற்றோர்யாரும் வெறுக்கையைவெறுக்கையாக்கி
யோதனத்தேதுவான யாவையுமொன்றிலாராய்ச்
சேதனமழுங்கிவேறு செயலின்றிவல்லியத்தின்
கேதனமுயர்த்தமன்னன் பாற்றிரண்டொருங்குகிட்டி. (௧௧)

எந்தையேதருமச்செங்கோ லேந்தவேயெழுநிலத்தோர்
தந்தையேயறத்தின்றாயே தயாநிலையாமருந்தே
நந்தலில்விளக்கேயெங்க ளுதனேநன்மைமிக்க
சிந்தையேயுடையாயென்று [illegible]ர்சரணம்போற்றி. (௧௨)

சலம்பெறுவிடுலையெங்கு மிடியினுற்றகுகாணத்திற்
றிலம்படுமாறுபோலே யெண்ணுறச்செப்பவொண்ணுப்
புலம்பலையடைதனின்றுற் போக்குதலன்றியாரே
நலம்பெறப்புரிவாரென்செய் கோமெனநவின்றூரம்மா. (௧௩)

தானமேதருதலாலும்பாரதந் தந்ததாலும்
வானமுகிலமும்பொங்குந் துதிக்கையுமதியும்பெற்றே
யீனமாய்வருவார்தங்க ளிடர்களைந்திறைவனாகி
மானமும்பெறுதலாலைங் கரனிகர்மன்னனன்றே. (௧௪)

உரிமையினுறலாலாறு முகமதாலொன்னார்செற்ற
வருமையினுறலாற்கோழி யமைதலாற்சங்கயரானு
ரிருமையும்புகழ்தலாற்குன் றேறலாலிமையோரேத்தும்
பெருமையிலேலறலாலு முருகவேளினைபெருயோ. (௧௫)

குணகடறினைத்தெழுந்தே யிரவினைப்போக்குங்கொள்கை
மணமுகமலர்த்திக்கையா யிரந்தந்துமொளிமல்குற்று
வுணமொருதிகிரிதன்னைச் செலுத்திவையத்தின்மேவிக்
கணமதின்வரலாற்பானு நேரன்றேகாவலோனே. (௧௬)

இரவலர்முகமலர்த்தி மயல்கொளுமிருளைநீத்து
வருகலையெட்டெட்டான வனைத்தையும்வசமதாக்கிப்
பெருகுறும்புலவருண்ண வமுதீந்துமதியும்பெற்றே
யுருகலையுதயமானுய் சோமனேரொப்பேயன்றே. (௧௭)

உலகினைத்தாங்கிமிக்க பணங்களும்பொறையமைந்தே
மலருரமாலைமன்னி மணிமுடிபெற்றமைந்து
நலமுறப்பொறியடக்கி யறிவமைந்துறலான்ஞாலத்
தலமிணையனந்தனென்ன வையமென்னரசரேறே. (௧௮)

என்பத்தைக்கேட்டமன்னர்க் கிறையவனுள்ளமெய்த்தே
முன்பொத்ததோற்றத்தெம்மில் யானென்றுமுடிவிலாத
துன்பத்துக்கேதுவானே னென்னினிச்சொல்லப்பாற்றென்
றன்பத்துக்கெல்லையுண்டோ கண்கணீரரும்பிநின்றான். (௧௯)

செனித்ததீராப்பிழைக்குத் தெய்வமேதுணையென்பாரிக்
குனித்தவிற்கணையாலாவி குறைக்குவேனென்றபோழ்து

மெனைத்து றுகுழுக்களுக்கிங் கிடராறுமோவென்றெண்ணுப்
புனிற்றிளங்கன்றிறந்த சுரபிபோற்புலம்பினுனல். (உ0)

இடரெலாம்வந்தபோது மினைத்தெனவறியொணுத
படரெலாம்வந்தபோதும் பகரினம்மாலென்னுமோ
வுடரெலாமுயிரிலாமை போலவேயொல்கின்ற
குடரெலாங்குழம்பற்பாற்றே வென்றனன்கோழிவேந்தன்.(உக)

வேரினுங்குதகமூட்டின் விரிதழைமேவுமாபோ
னேருமந்திரமியக்கி னிகிலமெங்கும்போமாறே
யாரணிவேணியெம்மா னண்டங்களனைத்தினுக்கும்
வேரதால்குளிர்ச்சியெய்தின் மேலெலாங்குளிருமென்றே. (உஉ)

வசுந்தரைமீதேயெங்கு மன்னியசினகரத்துட்
பசுந்துளவணிந்தோன்போதன் பரவரும்பரமனுக்கன்
பிசைந்துநற்றிலநெய்யாதி யபிடேகமியற்றுவீரேல்
விசும்பினின்மழையுண்டாமென் றீகைமென்மேலளித்தான். ( )

ஆலயந்தொறுமெம்மானுக் கன்பினின்மிகப்புரிந்து
சாலவேசபரியைத்தான் றமிழைத்திட்டபோழ்து
மேலவேயொன்பானென்னுங் கோளினுக்கிறைவிதித்த
காலமேயெண்ணியெண்ணிக் கரைந்தனன்காவலோனே. (உச)

இன்னணமிவனிருப்ப விலேகர்கள்பலருங்கூடிப்
பொன்னியாற்றருகிற்கான கீர்த்தனப்புனிதனென்னு
மின்னவிர்வேணியானைப் பூசித்தார்வேண்டுகோளான்
மன்னவன்கனவின்கண்ணே யெழுந்தருள்புரிவன்வள்ளல். (உரு)

கோழியென்றுரைக்கும்வேந்தே குலவியபொழில்சூழ்ற்றே
யூழியுமழியாச்செல்வ மோங்கியதிருப்புன்கூரில்
வாழியசிவலோகேசன் வரத்தினின்மழைவந்தெய்தும்
மாழியவன்பிற்செல்கென் றருளினனறத்தின்மூர்த்தி. (உசா)

கோவிலூரெங்குஞ்சென்று குளகினையுண்போர்கட்
கேவலாலீகையீந்தே திருப்புன்கூரெய்துங்காலை
நாவலூராளியென்னுஞ் சுந்தரமூர்த்திநண்ப
ராவலாயத்தலத்தி லெய்தினரன்பர்சூழ. (உஎ)

ஒன்னலர்முடிகளெல்லா முரிஞ்சுறுதாளனை
மின்னவிர்வேலானன்னார் பெற்றிமைவிளம்பக்கேட்டு
முன்னவரடியாராலே முற்றுருக்கருமமுண்டோ
வின்னவராலேபாடி யெய்துறவடைவமென்றான். (௨௮]

துறவியென்றுரைப்போர்க்கெல்லாம் வேந்தனோர்துரும்பென்றெ
பிறவிவேரறுக்குமெங்கள் பேறருள்பெற்றியோர்மு [ண்ணிப்
னறைவிரிமாலைப்பொன்னி நாட்டினுக்கரசனண்ணி
மறைவிரிநாவினானை வணங்குபுவழுத்தலுற்றான். [௨௯]

சடையனார்தவத்தில்வந்த தனிக்குணக்குன்றேகொன்றைத்
தொடையர்மேற்றொடைகள்சூட்டுந் தொடுகடலமுதேபத்திக்
கடலெனவருசிவானந் தப்பெருங்கடலேகாண்போ
ருடலினிலுயிராய்வந்த வொப்பருமுறவேபோற்றி. [௩௦]

எம்பிரானாலைகாட்டித் தடுத்தாண்டுகொண்டுமேனோர்க்
கும்பிரானெனக்காட்டக் கோயிலின்வரையேஓகி
நம்பிராகத்தோடேபித்தாவென நமைப்பாடென்னச்
செய்பிரான்கேட்பப்பாடுந் திவ்வியப்பாவாய்போற்றி. (௩௧]

வேறு.

பாடுமுன்பெண்ணைக் குத்தரமிருந்த வெண்ணெய்நல்லூரெனும்பதியைப், பாடுதென்பாலாக்கினை வீரட்டானத்தான் பலதிரங்காலைச், சூடுபுசிரத்தினிட்டுறச்செய்தாய் தோழரென்றேதிருவாரூ, ராடுபுநின்றார்பரவைபாறா தாயாக்கினையயனே சரணம். [௩௨]

குன்றையூரதனிற்சொற்பொதி • குறடேக்குறும்பட்டிக் கூறினைகுறுகு, மன்றாறுநெல்லைப்பலர்க்குமேயளித்து மணைதருசெங்கலைப்பொன்னா, யென்றுமேபுரிந்துமாற்றினிலிட்ட மாழையைக்கோட்டத்திலெடுத்துஞ், சென்றிடக்குருகாவூரரன்பொதிசோறளித்திடச்செய்ததார்செயலே. [௩௩]

ஐயனேயாடவம்மைதான் றாளமடித்திடப் பாடிடவமைந்தோய், மையில்புக்கொளியூரிடைக்கராவுண்டமதலையை வரப்புரிந்தனையால், வையகந்தன்னினினக்கிணையாக வழங்குறத்தகுங்கொ

ஓகி-யென்பது ஒழுகி

லோவள்ளால், செய்யதாளிணைக்குப்பொய்யிலாவடிமை சேர்ந்த தார்சீர்மைசெப்புவரே. [௩௪]

செயற்கருஞ்செய்கைபுரிகுவர்பெரிய ரென்பதைத்தேற்றுற ச்செய்த, மயற்கறுமுதலேகின்றிருவடியெஞ் சென்னியில்வைத் தொருவரந்தா, பெயற்கருமுகில்பெய்துலகெலாம்வளப்பம் பெருகிடத்திருப்புன்கூரதனில், கயற்கருங்விழியாள்பாகமார்முதல் வன் கருணைதந்திடவருள்காண்பாய். (௩௫)

ஒவ்வொருவரமுமொவ்வொருவருக்கீக யுதவியதன்புகழுக, லிவ்வொருவரமுமெனக்கல வுலகத்தனைவர்க்குமெய்துதல்க ண்டாய், தவ்வொருவுற்றோ யுயிரெலாஞ்சோம்பித் தஞ்சுமா றிருப்பத்தோன்றினையால், செவ்வொருமேனிப்பிரானருள் சுரப் பத்திருவருள்செய்கெனத்தொழுதான். [௩௬]

சாற்றலும்வடிவேல்வளவனேமழையித்தலமதிற்பெய்திடினதனுக் கேற்றகைம்மாறுமெஞ்சிவலோகநாதனுக் கீவதென்னென்னப் பேற்றினைக்கேட்கும்பொழு துயிரேனும்பெட்புறவளிப்பன்யா போற்றியபோதுநாவலூராளிபுகலுவன்புகழுமைவுறவே[ னென்று.

பன்னிருவிழியும் பன்னிருசெவியும் பன்னிருகரமகற்களித் துப், பன்னிருமதியாண்டினுக்குமாமகந்தான் பன்னிருபருவமா ய்ப்படைத்துப், பன்னிரண்டினினந்தத்தினிற் றன்வாழ்பரனவ னுதலாலென்றும், பன்னிருவேலிதந்தருளென்னப் பணித்தனன் பார்த்திபனேர்ந்தான். (௩௮)

மன்னவன்மாகச்சோமன்றன்கதிர்காண் சகோரம்போன்ம கிழ்ந்தினிதிருப்ப, வென்னையாண்டருளுநாவலூராளி யெஞ்சிவ லோகநாயகன்முன், முன்னவநீமுன்னின்றிடின்முடியாப்பொருளு மேமொழிதரவுளவோ வென்னினிச்செய்வோங்கருணைநீபுரிவா யெந்தையேயெனவிரந்தனனால். (௩௯)

எனப்பலகேட்டுநாயனார்பாட றுவக்குமுனெங்கும்வான்ப ரவிக், கனக்குழாங்கடலினீருண்டகாலை யன்றுகொல்கருக்குமு ற்றினுமே, யனக்குழாம்விரிந்தவொப்பவெண் முகில்களருட் கடனீரையுண்டன்றே, மனக்குழாமெல்லாமண்மிசைகளிப்பத் தடித்துமின்னிப்புடைவயங்க. (௪0)

பெருமழையின் மேலெண்ணிடமின்றிப் பெய்தனசோலைவன
ப்பிறங்க, வொருமழைத்தூள்பூ சனிப்பபூமோவேறொருமலைத்து
களதோவென்ன, வருமழைத்தாரைதிசைக்கரித்துதிக்கை வானி
ன்றும்வந்ததோவன்றேற், பெருமழையண்டம்பொதுத்தொழு
கியதோ வெனச்சளசளவெனப்பெய்த. (௬௧)

நல்லவரொருவ ருளரெனிலெங்கு மவர்பொருட்டாகவேந
ண்ணி, யெல்லவர்தமக்கும்பெய்யுமாமழையென் றியம்புறுமொ
ழிபுண்மையெனவே, செல்லவர்தமக்கும்பெய்தலினாலே திரை
க்கடல்சூழுலகிடையே, யில்லிடமில்லையெனும்படி யெங்குப்பொ
ழிந்தனவிருண்டிடாவெழிலே. (௬௨)

ஒருழிநின்றுமோருழியொருவ ருய்ப்பதுஞ்செல்வதுமின்றாற்
சிருழியாக்கள்மேதிகள்மேயு முழியிடைச்சேறலுமின்றாற் [ந்
பேருழிபெருமிடமிலாமையிற்புள் ளோர்ந்திலகுடம்பையினின்றா
தேருழிவாரியூழிவந்ததுகொ லெனப்பெயுஞ்சேர்ந்திராப்பகலும்.

குளனொடுதடமேரிகணதியோடு குறுகும்வாய்க்கானிறைந்
தோட, வளனொடுபெய்யும்வகையினாற்காற்றும் வாய்ப்பினன்
றேங்கிடுமரங்கள், பளனொடுமேடுஞ்சரியதாயெங்கும்பரவி நீர்
பெருக்கெடுத்தோட, வுளனொடுமெங்குங்குளிரவேண்டினர் வே
ண்டாமெனவேண்டினரொருங்கே. (௬௪)

நாவலூராளிதன்முகநோக்கி நளினமாஞ்சீறடிபோற்றிக்,
காவலூராளிக்கிள்ளிபாமயன்கருத்துவந்தேயிரந்திடுவன், சேவ
லூராளிதந்தையெஞ்சிவலோ கப்பெருமான்றிருமுன்னென், றவ
லூராளிசெயற்கருஞ்செய்கைபுரிந்திடு பெருமையென்னறைவாம்.

பாடுமின்பாட்டின்விருப்பனாதலினாற் பரசிவனினக்கிரங்குற்று
வீடுகடோறுமிடியிலாவன்னம் வாங்கியேயளித்தனன்மிகவே
யேடுகள்கமழு மலங்கலங்குழலாள் பரவைபாலிரவெலாநடந்து
கூடுறப்புரிந்தானன்றியேகுவனோ கோதிலாமறைக்கரியோனே.

இந்நிலைபுதுமையெனச்சொலி ராஜேந்திரப்பெயரேற்றிடுசோ
ழன், மின்னிலைபுற்றவெண்முகில்பார்த்து வெள்ளிடையின்றியே
விரவி, யந்நிலைபெய்தகாட்சியெஞ்ஞான்று மறிந்திலனெனவிழுந்

பூதாய், சென்னிலையதனைமறுத்திடப் பாடுகெனவடிசென்னியிற் சேர்த்தான். (௬௫)

பன்னிருவேலிபெய்வதற்களித்தாய் பார்த்திபமறுத்திடப்பெயர்த்தும், பன்னிருவேலியளிப்பைபடியென்றேபகர்தலு மறுத்திடானுகிப்' பன்னிருவேலிதந்தனன்பன்னீராயிரம் பாரநெல்விளையப், பன்னிருநாளைத்தலைமிசைவைத்தே பணிந்தானருள்பெறும்பண்பன். (௬௬)

அன்றுதான்வேண்டமழைமழுத்ததுவா லன்றுதொட்டேதிங்கடோறு, மென்றுமேமும்மாரிகள்பெய்துதனதானியங் களும் வளங்களுமீண்டிக், குன்றுறாகிச்சோழனுடுதான்குறையறு செல்வமோங்கியதா, லின்றுமேமற்றைநாட்டினுக்கெல்லாஞ்சென்னிநாடெனினென்றேவிசைப்பாம். (௬௭)

தெய்வத்தின்செயலைத் தேர்ந்துளார்யாருந் தேர்ந்தனர் சிந்தையுட்டெளியச், சைவத்தின்றகைமைபறிவுளார்பலருமறிந்தனர் தலைமையீதென்றே, பொய்வத்துவினையேமேலெனவறியும்புல்லியபுலமையர்யாரு, நெய்வத்தியெரிமேல் மெழுதாய்க்கொளினுங்கீழுறாமேமாவெனநேர்ந்தார். (௬௮)

பன்னிருவேலிபெற்றபடலம்

முற்றிற்று.

---

## பன்னிருவேலிபெற்றபடலச்சுருக்கம்.

ஓ சௌனகாதிரிஷிகளே! கேட்பீர்களாக. உலகத்திலொருதலத்திலும் ஒருகாலத்து நடவாத மகாமகிமைபொருந்திய ஆச்சரியமுள்ள சரிதமொன்று இத்தலத்து நடந்துள்ளது. அவ்வாறுய அற்புதசரிதம் என்னவெனில், கலியுகாரம்பத்திலே சூரியனுஞ் செவ்வாயும் முன்னேயும், குருவுஞ் சுக்கிரனும் பின்னேயும், நடக்குமாறு நேரிட்டது. ஆதலின் இவ்வுலகத்தும்மழையுஞ் சிறிதுமில்லாதொழிந்தது. ஆகையால் விளைவுமுதலியு

யாவுஞ் சுருங்க க்ஷாமமிகுந்து ஜீவர்களுக்கு மலினமுண்டாகி யாவரும் இராஜ சமூகமடைந்து பூதலமெங்கும் பொதுநீக்குதிகிரியுருட்டி மனுநெறிசெலுத்தும் அரசரேறே! யாமெல்லாம் மழையில்லாமல் வறுமைநோயாற் பீடிக்கப்பட்டு மிகவருந்துகிறோம். வேறுஉய்வகையில்லை. என்றுமுறையிட அதுகேட்டு இராஜேந்திரசோழனென்னும் அரசனும் மனக்கவற்சியடைந்து இதற்கு என்செய்வோமென்றேங்கி வேரில் ஜலம்விடுதலால் மரத்தின் இலைமுதலிய தளிர்த்தல்போல எப்பொருட்குமிறையாகிய பரசிவப்பெருமானை அபிஷேகாதிகள் சிறப்புறச்செய்து பூசனைபுரிவித்தால் உலகு செழிப்படையுமென்று கருதி பற்பல சிவாலயங்களுக்கும் பூசையாதியன புரிவித்தான். அப்போது காவிரியின் வடகரையிலுள்ள திருநீடூரென்னுந் தலத்திலெழுந்தருளிய கானநிர்த்தனேஸ்வரர் அரசன் கனவில் எழுந்தருளி அரசனே! திருப்புன்கூரென்னுந் தலத்தில்வாழ்கின்ற சிவலோகேசன் அனுக்கிரகஞ்செய்யின் மழைபொழியும் ஆகலின் நீ அத்தலத்திற்சென்று பூசித்திடுக என்று கட்டளையிட அதுகேட்ட சோழன் திருப்புன்கூரென்னுந் தலத்தையடைந்து பெருமானைப்பூசித்து வேண்டிக்கொள்ளும் போது சுந்தரமூர்த்திசுவாமிகள் தமது திருக்கூட்டத்துடனே எழுந்தருளுவாராயினர் அவரைக்கண்டு சோழன்வணங்கித் தோத்திரித்து மழைமறுத்தமையால் சந்நிதியிற்பாடி மழைபெய்யும்படிச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். சுவாமிகள் அங்ஙனம் மழைபெய்யின் பெருமானுக்குப் பன்னிருவேலி நிலம்விடுகவென அரசனுக்கு விதித்து உடனே சிவலோகநாதர் சந்நிதியிற்பாடவுங் கடவுளருளால் மேகங்கள் நீர்முகந்து மின்னிஇடித்துநிலமெலாம் பலவளஞ் சுரக்கும்படி பெருமழைபெய்தன. அவ்வாறுபெய்தலாலுண்டாகிய வெள்ளப்பெருக்கைக்கண்டு அரசன் மிகமகிழ்ந்து மழையை நிற்கச்செய்யவேண்டுமென்று சுவாமிகளைப்பின்னும்வேண்ட இன்னும் பன்னிருவேலிதந்தால் நிற்குமென்ன அப்படியேதந்தேனென்றான். உடனே மழையானது நின்றது. க்ஷாமமும் இல்லாதொழிந்து அன்றுமுதலாக மாதமும்மாரி பெய்து உலகஞ் செழித்தது. அங்ஙனம் திருவருட்பெற்றிபுடைய சிவ

லோகேசர்மகிமை யாவராற் சொல்லிமுடியுமென்று சூதபுராணிகர்திருவாய்மலர்ந்தருளினார்.

சுருக்கம் முற்றிற்று.

---

## இராஜேந்திரச்சோழன் பூஜித்தபடலம்.

---

பனியிராதகலப்பானுவந்ததுபோற் பாடுமாரூரர்தன்றோழன், றனியிராதகலப்பாடிவெண்முகில்கள் சொரிந்தனகாதையையாஞ்சொற்றாந், தனியிராமேசன்றனையிராமன்முன் றருசபரியினையாற்றியபோ, லினியிராசேந்த்ரமன்னன்பூசித்த வியல்பினையிசைத்திடுவாமால். (௧)

உலகெலாம்வியப்ப வித்தகைபுரிந்த வுயர்சிவலோகநாதன்றன், றிலகவாணுதலாளொடுஞ்சவுந்தரநா யகிதனைப்பாகத்திற்சேர்த்தே, யிலகுமெம்பெருமானருளினாற்சேயை யெளியனேனின்றிடக்கருணை, யலகிலாதளிக்கநின்னருளுண்டே லமையுமென்றியம்பினனரசன். (௨)

அன்றியுமெல்லாத்தலத்திற்கு மீண்டிங்கதிகமென்னித்தலத்தமைந்த, நன்றியெண்ணெளியேன் றெளியுறுமாறேநவிலுதிநாவலோவென்ன, வென்றிகொண்டொளிரும் புலால்கமழுற்றவெற்றிவேல்வேந்தனேகேண்மோ, துன்றினோரெண்ணப்படிக்கருள்சிறந்தத்தலத்தின்சீர்சொல்லுறப்பாற்றே. (௩)

வேறு.

சேகரத்தலர்த்திசைமுகன் வரம்பெற்றான்சேவாம்
வாகனப்பெருமானடிக் கஞ்சத்தைவணங்கி
மேகவாகனமேறியே யூர்ந்தவன்வேண்டும்
போகமுன்னியே கோதமன்பன்னியைப்புணர்ந்தான். (௪)

மற்றவன்றருசாபத்தின் மாற்றவொண்ணாத
குற்றமுற்றவுகேக்குறுங் கொள்கையித்தலமால
புற்றுவேலிமவான்மகள் மணந்தனிற்பலரு
மூற்றகாலைத்தென் மேலதாயுத்தரந்தாழ்ந்த, (௫)

வேதந்தேடுமெங் கோனிடமரவிந்தமேய
போதன்மான்முதற் புரந்தராதியரெலாம்பொருந்திப்
பூதரத்தினுத்தரமுறப் புகழ்குறுமுனியா
மாதவத்தனிங்கமர்தரச் சமமெனவாய்ந்த (௬)

அன்னவன்றனக்குவப்புற வரன்மணக்கோலந்
தன்னையித்தலந்தன்னிடைத் தரிசனந்தந்தா
னின்னமிப்பெருந்தகைமையென் சொல்லுனெளியேன்
சொன்னசொற்பழுதாமலாற் றூயதாயாமோ. (௭)

இத்தலப்பெருந்தலத்தினை யெத்தலமுளதோ
வித்தலத்தடத்தீர்த்தநே ரெத்தடமுளதோ
வித்தலச்சிவலோகநா தற்கிணையேதோ
வித்தலத்தலாலெப்பய னடைகுவரெவரும். (௮)

சினகரத்தின்மேல்பால் விடைத்தீர்த்தமுங்கீழ்பா
லனகமுற்றிடுமிந்திர தீர்த்தமுமமையு
நினைவினுற்றிடுபலனெலா முற்றவுநேர்ந்தே
தனகமற்றிடுமுத்தியு முண்மையிற்றருமால். (௯)

ஆதலாலுன்றன்மனக்கிடை தானுமேயமைந்தே
வீதலின்றியேமுத்தியு மடைகுவைவேந்தே
நோதலுற்றுளனையலை நுவலுமெம்பெருமான்
காதலால்விழைபூசனை செய்யெனக்கரைந்தான். (௰)

பொன்னிநாட்டினுக் கிறையவன்போற்பொன்னிநாடாள்
மன்னவன்சிவனர்ச்சைக்கு வேண்டுவவரித்து
நன்னயம்பெறுமிடபக்கோட் டந்தனைநண்ணி
பின்னயம்பெறச்சங்கற்பம் விதிமுறையியற்றி. (௧௧)

சோடசம்பெறுதானங்க ளேய்மையிற்புரிந்தே
யாடகப்பணியணிதரு மொய்ம்புகொளரசன்
வீடகப்படப்பிதிர்கட்கும் வேண்டுவநல்கிப்
பீடகப்படுசான்றவர் தமக்கும்பொன்பெய்து. (௧௨)

ஆக்கயத்தினீராடிய பின்னரேய்யில்வேல்
கைக்கொள்காவலன் காப்பினைப்புண்டரங்களுல

வக்கமாமணியாகம விதிப்படியணிந்து
தக்கசந்தியிலாம்பஞ்சாக் கரந்தழுதழுத்து. (கங)

மூவலஞ்செய்துவசவண்ணர் பின்முறையிறைஞ்சி
நாவிலேந்தெழுத்தினை யிடைவிடாதுறநவின்று
தீவலஞ்செயுமோமங்கள் தபனங்கள்சிறப்ப
நாவலஞ்செயும் பளவராலாற்றிடநடத்தி. (கச)

திலமெலாந்தருநெய்முத லாரமீருச்செப்
பலமெலாம்புரிதருமபி டேகங்களாற்றித்
தலமெலாந்திகழ்பொன்னி நீர்சகத்திரகும்பம்
வலமெலாம்பெறப்புரிவித்தான் வளவர்தமன்னன். (கரு)

நன்னிறத்தகோடிகத்தினு லொற்றியேநலத்த
செந்நிறத்தகோசிகத்தினற் றிருவரைசுற்றிப்
பொன்னிறத்ததாங்கலையினற் பொலிவுறப்போர்த்து
மின்னிறத்தபன்மணியிழை பணிபலவேய்ந்து. (கசா)

சாதிமௌவலம்பிணையலைத் தருமுறைசாத்தி
யோதிமப்பெடைபோலவே கவரியையோச்சிச்
சாதரூபங்கடருமுக வாசங்கடந்து
கோதகன்றபல்பாளித நிவேதனங்கொடுத்து. (கஎ)

முல்லைமல்லிகைசண்பகஞ் செவ்வந்திமுளரி
யல்லியாம்பல்செ ங்கிறகொடு துரோணமேயாதிப்
பல்விதப்பமலரினல் கூவிளம்பலவு
நல்லருச்சனைசகத்திர மனுவினனயந்து (கஅ)

எண்ணிரண்டெனப்படுமுப சாரங்களிழைத்துக்
கண்ணிறைந்திடுபளிதத்தாற் றீபத்தைக்காட்டி
யுண்ணிறைந்தவன்பூற்றெடுத் தெனக்கணீருகுப்பப்
பண்ணிறைந்திடுதுதியினற் பழிச்சுதலுற்றான் (ககூ)

வேறு

மறைநான்குந்தேடரிய வானவனேவன்சரிகைத்
துறைநான்குக்கப்பாலாய் நின்றிலங்குதூமணியே

சிறைநான்குயோனியினுந் திரிந்துலைந் துதியங்குவனை
முறைநான்கெனும்பரவி தந்தருளுமுதல்போற்றி (௨௦)

நிலவுமிழுமெயிற்றரவின் வாய்த்தேரைநேர்ந்ததுபோற்
பலவுபிருமிடியின்கணகப்பட்டுப் பரிவுறுநா
ளலகிலருட்கடலதனைக்கடைக்கணித்திங் களித்துற்றே
யுலகனைத்துஞ்செழிப்பித்தா யுனக்கென்னகைம்மாறே (௨௧)

வழிவழியாய்மயின்முறையின் குலம்விளக்குமகவில்லே
னெழுபிறப்புந்தீயவைதீண் டாவிந்தவிருநிலத்திற்
பழிபிறங்காப்பண்புடைமக் கட்பெறினென்றேபகரு
மொழிகருத்துக்கடையேன்பால் முற்றவிலைமுன்னவனே (௨௨)

எம்பொருளென்பனவுன்னை யன்றிவேறினியுண்டோ
நம்பொருளென்பனவெல்லாங் கதிகொடுக்க நண்ணிடுமோ
தம்பொருளென்பனதமது மக்களவர்தாமன்றிச்
செம்பொருள்கள்வரைவிலாதிருந்திதன்றேசேருவதே. (௨௩)

தகவினையேபெற்றாலுந் தரணிமுற்றும்பெற்றாலு
மகமியற்றித்தேவனாய் வரும்வழியைப்பெற்றாலு
மிகபரத்தையடைவிக்குந் தொழில்பூண்டில்லறம்விளக்கு
மகவிலையேற்கதியுண்டோ வள்ளானீயருளுவையே, (௨௪)

இனையவகைபலதுதிக ளிரப்புரைகளாமொழிந்து
மனையவகையச்செல்வ நாயகியாமம்பிகைக்குந்
தனையகிலத்தொருவரியற் றிலையென்னும்படிச்சபரி
நினையரியதாப்புரிந்து நேரிறைஞ்சியுருகினனால். (௨௫)

மருப்பணிசெய்யிறைவனொடு மாதுளம்பூமேனியினாள்
விருப்பணிசெய்சினகரமு மண்டபமும் வெயிலெயிலுங்
கருப்பணிசெய்கிரகமுமே கவின்கொள்ளும்படிப்பலவாந்
திருப்பணிகளிழைத்ததனைப் புதுக்கிமகிழ்சிறந்தனனால். (௨௬]

என்பெருமான்விடைபெற்றுச் சோழன்மாளிகையென்னுந்
தன்பெரியநகரத்தினிற் புக்கதற்பின்றரணிபற்குப்
பொன்பெரியகொன்றையணி குடிலனருளாலே
பின்பெரியகளிகொள்ள வொருமகவுபிறந்ததனே. (௨௭)

அச்சுதனுக்கருட்பாக்கி யச்சோழனென்றமைய
நச்சுறவேயிட்டளவாக் காதலொடுநாடோறும்
வச்சடிமைபூண்டவனாய்த் திருப்புன்கூர்வள்ளலடி
நிச்சலுமேதுதிப்பவனாய் நெஞ்சினுளேயிருத்தினனால். (உஅ)

எப்பொருள்வந்துற்றாலு மெப்புதுமையேய்ந்தாலு
மப்பொருளெஞ்சிவபெருமா னடிக்கென்றேயாக்குவித்து
பொய்ப்பொருளைநீக்கியுண்மை தேர்ந்தறிவுபொலிவுற்று
மெய்ப்பொருளாஞ்சிவலோக நாதன்றாண்மேவினனே. (உகூ)

முற்றிற்று.

---

## இராசேந்திரச்சோழன்பூசித்தபடலச்சுருக்கம்

ஓசௌனகாதரிஷிகளே! கேட்பீராக. இம்மகிமையைக்கண்ட இராஜேந்திரச்சோழமகாராஜன் சுந்தரமூர்த்திசுவாமிகளால்இத்தலமான்மியத்தை விரிவாய்க் கேட்டு அற்புதமெய்தி ரிடபதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து நித்தியகருமமுடித்துத் திருக்கோயிலையடைந்து வலஞ்செய்து சிவலோகநாதரை அபிடேகாதிகளாற் பூசித்து அன்புமீதூரத் தோத்திரஞ்செய்து மகப்பேறுதவுமாறு வரமும்பெற்றுத் திருக்கோயிலுக்குரிய திருப்பணிபலவுஞ் செவ்விதிற்செய்துதனதுவாழ்விடத்தைச்சார்ந்தான்.

சுருக்கம் முற்றிற்று.

---

## சந்திரன் பூசித்தபடலம்.

கொங்கலம்பைந்தாரணிந்த கொற்றவேல்கைக்கொண்டு
பிங்கலனாமென்னுமிரா சேந்திரப்பேர்பெறும்வளவன்
றுங்கமுறமழைபெற்றுச் சுதன்பெற்றகாதையிது
திங்கள்பூசித்திட்ட தேற்றமினித்தெரிந்துரைப்பாம். (க)

தீத்தசைமையென்பவையுஞ் செப்புகின்றதாழ்மையையு
நீத்தவரேநேமிவன வாசிகளேநீர்கேண்மின்
சீத்திரையையெண்ணிடினுந் திகழுடுவையெண்ணிடினு
மாத்தலத்தினியற்பெருமை யாவரளவிடவல்லார். (உ)

சித்தவருமந்தணருமன்னரு நாய்கருமெழுங்கு
சூத்திரருந்தாழ்மையருந் தொழுதுநாடொறும்வரங்கள்
காத்திரியிற்சிவலோக நாதர்தரப்பெற்றோரைப்
பூத்திகழுமுடியனந்த னளவிடான்புகல்வதென்னே. (௩)

கின்னரர்கிம்புருடர்சித்த ரட்டதிசைகெழுமினவர்
முன்னடைந்துபேறடைனே சித்திகள்யார்மொழிகுவரா
லன்னசிவலோகநா யகனடியையருச்சித்தே
நன்னருடபதிபெற்ற பேற்றினையென்னவிளுறுவாம். (௪)

அயன்படைத்தவண்டத்துக் கல்வினுக்கோர்விளக்கென்ன
வியன்படைத்தவிருணீக்கி மேதினியெலாம்விளக்கு
நயன்படைத்தவொளிதிகழு நவ்விக்கோருருவான
செயன்படைத்தவதனத்துத் திங்களையென்செப்புவதே. (௫)

சித்தசராயிரவரையோ ருருச்செயினுஞ்செப்பொண்ணா
வத்தகையவனப்பினொடு மொளிவிளங்குமாகத்தான்
பத்தினொடுமாதினிலோர் கலைகுறையும்பான்மையிலா
னுத்தமத்தினுத்தமமாம்பொன்னனிடத்தோதுறுவான் (௬)

செவ்விமிகுந்திங்கடனைக் காண்டலுமேதிகைப்புற்ற
நவ்வியாளெனச்சொல்லும் பொன்னவன்றனையகியாங்
கவ்வையமிகுதாரையென்பாள் கலவிசெயவேயெண்ணி
வீவ்விமனங்கூடும்வகைச் சருவல்மிகவாய்ப்புற்றாள். (௭)

மையல்மிகச்செயபமுத வடிவினள்மலைவென்ற
நெய்பொழுகுவேற்கண்ணாள் சருவிமிகவெழுங்குதலான்
மெய்யழகார்தருசோமன் வேள்கணைபட்டிடமெலிந்து
தையலைத்தான்புணர்வனெனக் குருமனையென்பதுந்தணந்தான்.

வாசவனும்பிறர்நகைக்க வுடலாறன்வருநகுடன்
மாசுணத்தினுருவாகி வதிந்தாற்றான் மலர்வேத
னாசிலொருதலையிழந்தான் கோசிகனாழ்ந்தானென்னிற்
றேசுபெறுகலைமதியு மையல்வலைசேரானோ. (௯)

ஆதலினாற்றானுமய லெனுங்கடலி லழுந்தாற்றே
காதலினாலவளைமணந் தேகலவிக்கரைகண்டான்

மீதலமாமவ்வுழிபுந் தியையீன்றான்விருப்புடைய
ஞாதலேமிக்கறிந்தபொன்னேனன் றன்சினத்தனுபினனுல். (க0)

கோலமிகப்பெற்றமையாற் குருமணியென்றெண்ணுது
சாலவிரகாற்கூடிப் புதன்றன்னைத்தந்தனையா
னீலமுயனேய்கொண்டு நின்கலையெலாந்தணந்து
மூலமேகெடுவையென மொழிந்திட்டான்கடுஞ்சாபம். (கக)

பொன்னேனச்சாபமது புகன்றிடலும்போதொன்றிற்
கன்னேனெவ்வொருகலையாக் குறைந்தூற்றானேம்மூன்று
மின்ஞருங்கலேகுறைய மீதியொருகலேநிற்பத்
தன்னுவிபொன்றுமே நின்றனைச்சசியென்பான். (கஉ)

அத்தகைமை தனேக்கண்ட மகதியாழமைமுனிவன்
சித்தமகிழ்வொடுநோக்கிச் செழுங்கலேயோய்வையத்துன்
மெய்த்தவறெலாநீங்குந் திருப்புன்கூரிடைமேவிச்
சுத்தவருளாகரத்தையடைந் தடியைத்தொழுதுய்வாய். (கங)

எனவுரைத்தமொழிகேட்ட வமுதகுணத்திங்கென்பான்
மனவுவப்பினெடுசென்று வண்மையொடுவலம்வந்தே
யனகமுறுந்தன்பேரால் வாவியையொன்றமைத்தரனேச்
சினகரத்திற்பதிட்டைசெய்து தொண்டுசெயச்சிந்தித்தான் (கச)

இடபதீர்த்தந்தனிலு மிந்திரதீர்த்தந்தனிலுந்
திடமுறவேபுக்காடிச் சிவலோகநாயகன்றாள்க்
கடிமையெனவேயிறைஞ்சி யமுதினலபிடேகங்
கடகபதிதான்புரிந்து சபரியையேகண்டனனுல். (கரு)

உள்ளுருக்கங்கொண்டின்று தவறிலுயிர்போமெனவே
யெள்ளிருக்குநெய்முதலா மபிடேகந்தனேயியற்றிக்
கள்ளிருக்குமலர்கைக்கொ டருச்சித்துக்கம்பலேயாய்த்
தெள்ளிருக்கும்படிமிக்க வுண்மையொடுதேர்ந்தியற்றி. (கசு)

செயிரகன்றதூபதீபத்தினி வேதனஞ்செய்தே
யுயிரகலாதுறும் படிப்பொற்றுள்போற்றியுய்யும்வண்ணந்
தயிரவநாயகன்கரைந்து களித்திடாவுயிராகும்
பயிரினுக்குப்புயல்போல்வா யென்றுள்ளம்பதைத்தனனுல் (கஎ)

துறந்தவர்கடொழும்பாதச் சோதியேநின் கருணை
நிறைந்தருளையீவையென்று நேயனேன்விழைபுங்காற்
சிறந்தசெல்வமிகப்பெற்றுச் சேர்விரைவிலுய்யும்வண்ண
மிறந்தபின்போவெனைக்கர்ப்ப தெந்தாய்நீயிரங்குதியால். (௧௮)

முன்னொருமையேற்றிறைவன் றனைச்செற்றமுண்டகத்தாள்
பின்னருமையேத்தியமாற் கண்டன்றான்பெறவளித்தாய்
பொன்னருமைச்சாபத்தை நீத்துன்னருள்புரியாயே
லுன்னரிதாய்கருணையிலா நரகதனிலுழலுவனே. (௧௯)

உம்மையின்மாபாதகன் றானுனைந்திடுங்காலுமையினொடு
நம்மையலாலிவற்புரப்பா ராரென்றுநவின்றனைபால்
மெய்ம்மையலானின்வாக்கு விளம்புமோவேதமன்றோ
வம்மொழியும்பொய்யாமோவெனவுன்பாலடைந்தனனால். (௨௦)

வேறு.

என்பனதுதிபல வியம்பியேத்தியே
முன்புளாங்கரைந்தவனிற்பமுன்னுவோ
ரன்பினுக்கிரங்குறு மையன்றோன்றியே
தன்பெருந்திருவுருக் காட்சிதந்தனன். (௨௧)

வணங்கிநின்றேங்குறு மதியைநோக்கியே
யணங்குறேல்சாபம் பொன்னவனறைந்ததா
லிணங்கியகலையிறற் குறைவெய்தினும்
வணங்கெழிலிவளர்வை யெம்வரத்தினாலென்றான். (௨௨)

என்றருள்புரிந்தபி னிணையிலெம்பிரா
னன்றொருகலையினை யங்கையேந்தியே
தன்றலைச்சடைத்திற் றரித்துநின்றனன்
குன்றவில்லிப்பெருங் கருணைக்கொண்டலே. (௨௩)

மதியவன்றேய்ந்துழி வளரும்வண்மைத்தா
நதியணியெஞ்சிவலோக நாயகன்
விதியருட்டன்மையி னன்றிவேறுண்டோ
கதியிவனல்லதார் காட்டுகிற்பரே. (௨௪)

முற்றிற்று.

## சந்திரன்பூசித்தபடலச்சுருக்கம்.

ஓசௌனகாதிரிஷிகளே! கேட்பீர்களென்று சூதபுராணிகர் சொல்லுகின்றார். ஆதிகாலத்திலே சந்திரனானவன் எக்காலத்தும் ஒரேதன்மையாயுள்ள தனது சோடசகலைகளோடும் மிக்க அழகும்வாய்ந்து விளங்கியிருந்தகாலை வியாழபகவான் மனையாட்டியாகிய தாரையென்பவள் நேரிற்கண்டுவியப்பெய்திச்சுகித்தற்கரிய மோகங்கொண்டு தன்னையணையுமாறு வேண்டலும் அவன்குருமனைவியென்று ஒப்புக்கொள்ளாமல் இருந்தான். அவள் பலாத்காரமாக வென்னைப் புணரவேண்டுமென்று சேர்ந்து புதனைப் பெற்றமையால் வியாழபகவான் கோபங்கொண்டு ஓ சந்திரா அழகுகுறைந்து உன்கலைகளெல்லாம் நாளுக்குநாள் தேயக்கடவையென்று சபித்தார் சந்திரன் நாளொன்றுக்கு ஒவ்வொருகலையாகக் குறைந்து ஒரேகலையாயிருந்தகாலத்தில் நாரதமுனிவரால் கேழ்வியுற்று இத்திருப்புன்கூரை யடைந்து தீர்த்தமாடிச் சிவலோகேசனைப் பூசித்து வளரும்படியான வரம்பெற்று வணங்கித் தமது பதவியையடைந்தானென்று சூதமகாரிஷியானவர் திருவாய்மலர்ந்தருளினார்.

சுருக்கம்முற்றிற்று.

## சூரியன் பூசித்தபடலம்.

விரிதிரைக்கடல்வெண் டிங்கள்சாபத்தை
யொருவியுய்ந்தமை யோதினமாஇனிச்
சுருதிநாயகன்றாண்மலர் துன்னிய
பருதிபூசித்தபான்மை பகருவாம். (க)

தக்கனென்னுந்தறுகணன்றன்புரி
மிக்கமாமகம் தன்னிடைமேவுற

வுய்க்கும்பாசுரங் கேட்டவிண்ணோரெலாந்
தொக்குநின்றன ரன்னவன்சூழலில். (௨)

உவணப்புள்ளினை யூர்பவனோடுமே
சுவணத்தன்னப் புள்ளூருந் துரகத்தா
னெவணைக்கூட்டமும் வந்தமையெண்ணியே
அவனிற்சார்ந்தன னுக்கிரத்தண்ணலே. (௩)

திங்கடன்னைச் செறுத்துப்பதம்வைத்து
மங்குறும்படித்தேய்த் தனும்வானவன்
பங்கமுற்றிடவே யொளிபாற்றியே
சிங்குறும்படிச் செய்தனன்றீமையை. (௪)

நல்லவர்க்குபகார நன்றுற்றுவா
ரல்லலற்றின்ப வாழ்வையடைவரா
லெல்லவன்றக்கன் பக்கத்திலெய்தலால்
பல்லிறுத்தனனெங்கள் பகவனே. (௫)

பேயைநட்புப்புணர்ந்தவர் பின்னரும்
பேயரேயலதென் னெனப்பேசுவார்
தீயர்தங்களைச் சேருனர்தம்மையுந்
தியரென்பதற் கென்னசந்தேகமே. (௬)

மற்றுமுள்ளவர் வானவர்யார்க்குமே
குற்றமொவ்வோர் வகையாற்குறுகலாற்
றுற்றகால்கை சிரங்கடணிதரச்
செற்றனன்சிம்பு ளாகியதேவனே. (௭)

இக்குழக்கு ளிடை யூறுறமிகப்
புக்குளார்தம்மில் புண்படாரில்லையால்
செக்கர்வான்கதிர்த் தேவன்செவ்வாய்ப்பற்க
ளுக்கநாலென்செய்வேனென வுன்னினன். (௮)

இக்கிலாங்கலி யாவையுமேற்கவே
தக்கநல்லெயிறின்றித் தவிர்ந்துளா
னக்கருக்கொருகண்ணெனநண்ணினு
மிக்குறைவினை யெய்தலுற்றானரோ. (௯)

ஆரணிந்தபெம்மான் முனமண்ணியே
பூரணத்தம்புயத் தடிபோற்றியே
வேரலின்கண் விளங்குறுமுத்தென
மூரல்பெற்றிடு வேனெனமுன்னினான். (௧0)

ஏகநாயகனென்றியம்புஞ்சிவ
லோகநாயகன்வாழ்வுறுநோன்மைசேர்
போகபூமியெனச்சொற்றிருப்புன்கூர்
மோகமுற்றடைந்தான்கதிர்முன்னவன். (௧௧)

வேறு.

தன்பெயராலொரு கோட்டந்தான்றொட்டே
யன்பினிற்சிவலிங்கப் பதிட்டையாற்றியே
முன்புறவிடைத்தடம் விதியின்மூழ்குபு
வென்புநெக்குறக்கண்ணீரரும்பவெய்துற்றான். (௧௨)

வரன்முறைவணங்கியேமறைபின்சோதியைச்
சிரன்மிசைக்கைத்தலங் கூப்பிச்செய்வலந்
தரன்முறைவந்துமுத் தரத்திற்றங்குபு
பரன்றிருவடியினிற்பூசைபண்ணுவான். (௧௩)

எங்கணுயகனடிக்கீறிலன்புற்றே
செங்கணுயுற்றிடுந் தினகரப்பிரான்
கொங்கெலாந்தருமலர் கொண்டருச்சித்தே
யங்கணுபோற்றியென்றடிவணங்கினான். (௧௪)

வித்தின்றிவிளைவு தொன்றில்லைமெய்யநின்
சித்தின்றியுலகுளதாதற் செவ்விதோ
பித்துடைநெஞ்சினல் வணங்கும்பேதைபால்
சித்தம்வைத்தருளுவை தேவபோற்றியே. (௧௫)

ஆட்டிவைப்பானுநீ யாடத்தக்கதைக்
காட்டிவைப்பானுநீ காணுமின்சுவை
யூட்டிவைப்பானுநீ யுறக்குவித்துப்பின்
கூட்டிவைப்பானுநீ குழகபோற்றியே. (௧௬)

பல்லிலாதாகுமேற் பரமமந்திரஞ்
சொல்லிலாதாகுமாற் சொற்பலிப்பின்றேல்

மல்லிலாதாகுமே வாழ்வையுற்றிடு
மில்லிலாதாகுமே யென்செய்கிற்பனே. (கஎ)

இச்சிவசூரியனென் றிங்கென்னையே
மெச்சுறமேலவர் விளம்புவாரன்றோ
வச்சுதனுக்குக் கண்ணளித்தலபோலவே
சச்சிதானந்த தந்தருள்வைதந்தமே. (கஅ)

சதனமீந்தரு டருந்தலைவதற்பர
மதனனைமுதலியர் மண்ணில்வானினில்
வதனந்தான்பல்லின்றேல் வனப்புண்டாங்கொலோ
விதனமெய்திடினெனக்கென்ன மேன்மையோ. (க௯)

என்றுபற்பலதுதி யிசைத்தலோடுமே
யென்றுமாமலர்முக மிறைவனோக்கியே
சென்றுறுதசனமுமருளிச்செய்யவா
யின்றுபோல்வாழ்தி யென்றேவினனரோ. (உ0)

எக்குறைதவிர்த்துறவெண்ணுகிற்பினும்
பக்குவம்யாவுமே பலிப்பவேண்டினு
நக்கனென்றிடு சிவலோகநாயகற்
புக்குவேண்டிறில் வராப்பொருள்களென்னையே. [உக]

முற்றிற்று.

---

## சூரியன்பூசித்தபடலச்சுருக்கம்.

---

சூதமகாரிஷியானவர் நைமிசாரண்ணியரிஷிகளை நோக்கிச் சொல்லுகின்றார். கேட்பீராக பூர்வத்தில் தக்கனென்பவன் மகாபலவானாய் பரமசிவத்துக்கு மாமனாயிருந்தான், அவன் மகாயாகஞ்செய்யத்தொடங்கி பிரம விஷ்ணு முதலாகிய முப்பத்துமுக்கோடிதேவரும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் சூழ யாகம்புரிந்தான். அக்காலையில் சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணிற்பிறந்த உக்கிரவீரபத்திரருக்குக் கட்டளையிட்டபடி அக்கடவுள் அந்தயாகத்தினிடையே சென்று விஷ்ணுமுதலிய

தேவரைத் தனித்தனியே தண்டிக்குங்கால் வாயிலுள்ள பல் விழுந்த சூரியனானவன் பெறச்சிந்தித்து இத்திருப்புன்கூரென்னும் உத்தமதலத்தைச்சேர்ந்து ரிஷபதீர்த்தமாடிச்சிவலோகேசரைப்பூசித்து வணங்கித்தோத்திரஞ்செய்து ஓ சிவபெருமானே என்முகத்தினுக்குப் பங்கமில்லாமல் பற்களையருள்கவென்ன ஐயன் அருளினால் பற்களைப்பெற்று மகிழ்வுகூர்ந்து தன்பேரால்இலிங்கப்பிரதிட்டை புரிந்துதன்பதவியைச்சேர்வானாயினான்.

சுருக்கமுற்றிற்று.

---

## அக்கினிபூசித்தபடலம்.

---

பங்கமிலருடரு பரமற்பெற்றிடு
செங்கதிரவன்கதை செப்பினமினி
வெங்குணமேவினே னவையைமேவிய
வங்கிதனர்ச்சையை யறைகுவாமரோ. [க]

பணங்களினரவணி பரமற்போற்றிடு
குணங்களுள்ளாரையே தெய்வமாக்கொள்வர்
குணங்கள்சற்றிலரெவ்வெக் கொள்கையோருமே
பிணங்களென்பனவலாற் பேசலென்னையே. (உ)

தாங்கெடலன்றியே துட்டர்சாருவோர்
தாங்கெடுவாரெனற் கையஞ்சாருமோ
வாங்குறுந்தக்கன்பா லணுகுந்தன்மையா
றீங்குறலெய்தினன் றேயுத்தேவனே. [௩]

முழுதெனுமவியுண முன்னுநாவினால்
பழுதுறப்பிசிதமுண் பான்மையெண்ணுறான்
வழுவுறுநாவினன் மணத்திலுண்ணுறா
னெழுவகைநாவினா லுண்பதேழ்விதம். (௪)

நன்குணவுலகினுக் குண்ணநல்குவன்
தன்குணஞ்சார்ந்ததைத் தகனமாக்குவன்
பின்குணந்தாமதப் பெற்றிநீங்கிலான்
றென்குணதிசையில் வாழங்கித்தேவனே. [௫]

வெய்யவன்யானையும் விழுங்கும்வண்ணமே
செய்யுணவொன்றுறத்திரட்டித்தந்திடுங்
கையினையொறுத்தனன்கனற்கண்வந்திடுஞ்
செய்யொளிமேனியே திகழும்வீரனே. (௬)

கையறுபடுதலுஞ் சனலுதாசனன்
மெய்யறுபட்டது போலுமீமக
நெய்யறுப்பட்டன னிலத்துளோர்தருங்
குய்யறுபட்டனன் கூறலென்னையே. (௭)

பறியலூர்ப்பதியிடைப் படுதுயர்க்கணி
னிறுதியைக்காணிய வெண்ணுங்கோட்டுடை
மறியினைநடத்துறு வன்னியானவன்
செறிதருமகிமைகொ டிருப்புன்கூருற்றான். (௮)

அவ்வயிற்கோட்ட முண்டாக்கியற்புதத்
திவ்வியவிலிங்கமுஞ் சிறப்பக்கண்டபின்
முவ்வியனுலகமு முழுப்பயன்பெற
மவ்விடைத்தடத்தினி லாடினனரோ. (௯)

மற்றயவிந்திர கோட்டமன்னியே
முற்றுறுவிதிமுறை யாகமூழ்குபு
வற்றையின்கடன்களை யாற்றியாலயஞ்
சுற்றுமாவரணத்தைச் சூழ்ந்துளானரோ. (௧௦)

விழியொருதீநகை தானுமேவுதீ
மழுவொருதிகரத் தேந்தும்வானவன்
செழுமலரோன்றிரு மாலுந்தேடமெய்ப்
யழலுருவாற்குநீராட்டினனரோ. (௧௧)

முன்பெழுமுகில்கட லுண்டுமொய்த்துமே
யின்புறவாட்டினு மேழுவாரிநீர்
பின்புறவாட்டினு முவகைபேணுமோ
வன்புநீராட்டினை மகிழ்வதல்லதே. (௧௨)

மற்றுளவருச்சனை வகைநிவேதனம்
பெற்றுளமுற்றுமே பிறங்கவர்ச்சையைப்

பற்றுளவன்பினிற் பரவியாற்றியே
கற்றுளவோமென கவிலலுற்றனன், (கங)

வேறு-

அங்கணாபோற்றிவாய்மை யாரணாபோற்றியன்பர்
தங்கணாரவுசெய்யுந் தயாக்கடல்மடைதிறந்த
செங்கணாபோற்றியாதி சிவபரஞ்சுடரேபோற்றி
யெங்கணாயகனேபோற்றி யென்னையாட்கொள்வாய்போற்றி. ()

மழையினைவேண்டிநின்ற மன்னவனுளத்தினாடி
யிழைவினைமாறும்வண்ணம் வெண்முகில்பெய்யச்செய்தே
யுழையினைக்கரத்திற்கொண்ட வுத்தமவொருவேன்செய்யும்
பிழையினைப்பொறுத்தாட்கொள்வாய் பிஞ்ஞகபெருமபோற்றி.

வரத்தினைவேண்டிநின்ற மரையினைமலர்த்துவோன்பல்
லுரத்தினைத்தந்தாய்சோமன் வளர்தொறுமொள்ளியோனுந்
தரத்தினைத்தந்தாய்கின்று ளருச்சித்துச்சபரிசெய்யக்
கரத்தினைத்தரவேயென்றுங் கடைக்கணித்தருள்வாய்போற்றி. ()

தனஞ்சயனிவ்வாறேத்தத் தற்பரன்கருணைகூர்ந்து
மனஞ்செறியுவகையோடு வரமிகவளித்தலாலே
முனஞ்செறிகரம்போனீண்டு மொய்த்துறத்தென்குணக்கிற்
றனஞ்செறியிறைமையாகச் சார்ந்துதன்வாழ்வுற்றனன். (கஎ)

முற்றிற்று.

---

## அக்கினிபூசித்தபடலச்சருக்கம்.

---

சூதபுராணிகர் நைமிசாரண்ணியவாசிகளை நோக்கிச் சொல்லுகின்றார். முன்கூறிய தக்கன்யாகத்தில் அக்கினிபகவானைவன் தான் அவிப்பாகங்களை வாங்கிஉண்டமையால் வீரபத்திரக்கடவுள் யாவருக்குஞ்செய்த தண்டனைபோல அக்கினிபகவானைநோக்கி நீ அவிப்பாகம் வாங்கினகையை நீட்டென்று தண்டித்தார். உடனே அவ்வக்கினிபகவான் பயந்து என்செய்வேனென்று ஏக்கமுற்று இத்திருப்புன்கூரென்னும் க்ஷேத்

திராமடைந்து தீர்த்தமாடிச் சிவலோகேசரைத் தெரிசித்துப் பூசித்துத் தன்னுடைய அற்றகை உண்டாகும் வரத்தைப்பெற்றுத் தன்பேராலிங்கப்பிரதிட்டை புரிந்து தன் பதவி யடைவானாயினான்.

சருக்கம் முற்றிற்று.

---

## வானரம்பூசித்தபடலம்.

---

செவிக்குணவானவேதச் சிரப்பொருடிருத்தாளின்கண்
ணவிச்சருவினைவிண்ணோர்க்கீ யழலவனர்ச்சைசொற்றும்
புவிக்கிறையானதாச ரதித்துணையாகப்போந்த
கவிக்குழாமர்ச்சைசெய்த காதையைக்கழறுகிற்பாம். (௧)

நிசிசரக்குழுக்கடம்மை நேமியிற்றமிக்கப்போந்து
தசரதன்பெற்றதாலே தாசரதிப்பேர்வாய்ந்து
கசரததுரகங்கொண்ட காகுத்தனெனுமிராமன்
சுசரதங்கையிற்கொண்டே யயோத்தியிற்றன்னினானல். (௨)

பிதாவொடுதாய்க்குஞ்சேய்தா னடக்கும்பெற்றியும்பேராண்மை
சுதாமுறைமன்னர்க்கெல்லாந் தருமநன்னெறியுந்தம்பி
நிதானமுமில்லறத்தி னேர்மையுஞ்செங்கோனேருஞ்
சதாசிவபூசையின்றேற் றமுங்காட்டத் தரணிவந்தான். (௩)

அன்னையும்பிதாவுஞ்சொன்ன மொழியினைச்சிரமீதாக்கிப்
பின்னையாஞ்சீதையோடுதம்பியும்பெட்பிற்கூடி
முன்னைவாணகரநீங்கி முளரிகாந்தாரம்போந்த
தென்னைபேசொல்வன் கோதாவிரிநதியெய்தினானல். (௪)

பொய்யிராவணமகத்தைப்புரிதரும்பொற்பீர்கேண்மின்
மையிராவணந்தானுற்ற மகதேவர்க்காதியான
வையிராவணன்முன்மேவுங் கயிலையையகற்றித்தூக்குங்
கையிராவணன்றன்சீதை தன்னையே கவர்ந்துசென்றான். (௫)

சீதையைப்பிரிந்தபின்பு சிந்தனைதிகைத்தேகாகி
வாதையையடைந்துணங்கிக் கிட்கிந்தைவரையைமன்னி

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER
BESANT ...

வேதையைவாலியெய்த விட்டிப்பின்றேனைநட்ட
காதையைச்சொல்லவென்றால் கடலெனவிரியுமன்றே. (சா)

அவன்வருதினியைக்கூடி யாயிழைதன்னைத்தேடத்
தவனடையாளங்கூறித் தரணியிற்காண்டிலென்ன
வுவன்முனமுய்த்தகாலை யொருங்குநாற்றிசையுந்தேடிக்
கவனவேகத்திற்சென்று கரஞ்சமாம்பதியைக்கண்ட. (எ)

அப்பதிமகிமையாவு மான்றவர் மொழியக்கேட்டுச்
செப்பருங்குணத்தின்மிக்க வெஞ்சிவலோகதேவன்
மெய்ப்பெருசரணம்போற்றின் வேண்டியவிறல்கொள்வோமென்
றெப்பறுமர்ச்சைதன்னை யுஞற்றுறவெண்ணியுங்கண். (அ)

அர்ச்சைக்குவேண்டுமாறு சனிமுதலனைத்தும்பெற்றுத்
தற்செய்கைக்கேற்பமேல்கீ ழுளதடந்தம்மிலாடி
யுற்சவம்புரிவதேய்ப்பவுண்மை யினைபிடேகித்து
நற்செயல்புரியும்பொன்னி நதியிடைநறுநீர்கொண்டு. (கூ)

தேவுலகிடைப்புமிப்பூ வேதெனத்தேவர்செப்ப
மாவுலகிடைவேறுள்ளமலரிலையெனக்கொணர்ந்து
மூவுலகினுமப்பாலுமேமண மொய்த்ததாலே
பூவுலகெனும்பேரன்று முதலின்றும்புகலுவாரால். (க0)

திருச்சிறப்புற்றவிந்தத் திருப்புன்கூர்நாதன்றனுக்
கருச்சனையலவுமாற்றிக் கனிவகையளப்பிலாது
வரிச்சிறைத்தும்பிமொய்ப்ப மதுக்குடம்வரைவிலாமே
யுருச்சுவையாறனுக்கு நிவேதனமுவப்பிற்செய்து. (கக)

தூபதீபமுமியற்றிச் சோடசம்பலவுமாற்றித்
தாபதர்பலர்நமக்கித் தகையிலையெனச்சமழ்ப்பச்
சீபதியாங்காகுத்தன் குற்றேவல்செறிந்தசேனை
பாபம்யாவுந்தொலைப்பப் பரசியேபழிச்சலுற்ற. (கஉ)

பரசிவம்பிரமமென்னப் படுமொருமுதலேபோற்றி
சரசரணங்கள்யாவுங் களித்துனக்கேவல்செய்யத்
தரையிலெவ்வுழிசென்றாலுஞ் சதாபலமிகவருந்த
வரமருள்புரியவேண்டும் வள்ளலேபோற்றிபோற்றி. (கங)

இராகவன்றூதராசவேகலானிருநிலத்தி
லராவகலல்குற்செவ்வா யணங்களுடன்னைக்காணா
விராவியகருணைபெற்று மீண்டிடக்கருணைசெய்வாய்
கராசலவுரியாயெங்கள் கணாகணாபோற்றிபோற்றி. (௧௪)

முசுக்கலையொன்றுகையாற் கூவிளம்பறித்துமுன்னஞ்
சசிக்கலையுடையான்மீதே யெறிதலின்றாணிமுற்று
மிசைக்குறுமுசுகுந்தப்பேர்ச் சக்கரவர்த்தியென்றே
துசக்கொடிபெற்றேயாண்டான் பெருமையார்சொல்லப்பாற்றே.

நயத்தொடுமிக்கசெல்வம் வேண்டிலேஞாலமீது
பயத்தொடுமன்னரெல்லாந் திறையிடும்பரிசுவேண்டேங்
கயத்தொடுவிமானமேறு மிந்திரன்கதியும்வேண்டேஞ்
செயத்தொடும்வாழ்கவென்று கருணைநீசெய்வாயென்ன. (௧௬)

எனப்பலதுதிபுரிந்தே யெந்தைதன்னருளும்பெற்றே
நினைப்புறுபலமொன்னார்க டமைத்தெறவெழுங்கலுற்ற
வெனைப்பலகீசகங்க ளப்பதியிகந்துதென்பான்
னனைப்பெறுகடல்பரந்த தொப்பவேமுடுகிச்சென்ற. (௧௭)

முற்றிற்று.

---

## வானரம்பூசித்தபடலச்சுருக்கம்.

---

சூதமகாரிஷியானவர் நைமிசாரண்ணியவாசிகளைநோக்கிச் சொல்லுகின்றார். ஓமகாரிஷிகளே! கேட்பீர். பூர்வத்தில் அயோத்தியாபுரிக்கரசனாகிய இராமமூர்த்தியின் மனைவியாகிய சீதாபிராட்டியாரை இலங்காபுரியை ஆண்ட இராவணன் கவர்ந்துகொண்டு போனகாலத்தில், இராமமூர்த்தியானவர் வாலியைக்கொன்று சுக்கிரீபனுக்கு அரசளித்து அவனது வானரசேனைகளை வருவித்துச் சீதாபிராட்டியாரிருக்குமிடந்தேடிக் காண்கவென்று செலுத்த, அச்சேனைகள் இலங்கைத்தீவுக்குப்போகும்போது திருப்புன்கூரென்னும் முக்கியதலத்தின் மகிமையை யுணர்ந்து சிவலோகேசர் சன்னிதியடைந்து தீர்த்தமாடிப் பூசனைபுரிந்து தாங்கள் செல்லும் இடங்களில் தங்

ளுக்கு உண்ணும்படிக்கு காய்கனிகள் கிடைக்கவும் சீதாபிராட்டியைக்காணவும் வரம்பெற்றுச்சென்றனர்.

சருக்கம் முற்றிற்று.

---

## பதஞ்சலிமுனிவர்பூசித்தபடலம்.

---

ஈசனெஞ்சிவலோகக்கோ னெந்தையையிறைஞ்சிநின்ற
கீசகக்குழாங்கள்பெற்ற வரத்தினைக்கெழுமச்சொற்றாந்
தாசனென்றென்றென்றைக்குந் தவம்புரிபதஞ்சலிப்பேர்
மாசிலாமணியனன்செய் பூசனைவழுத்துவாமால். (௧)

வேறு.

நிதஞ்சலியாமலே தவத்தைநேர்ந்துளான்
சிதஞ்சலியாமிகு திருவுள்ளத்தவ
னிதஞ்சலியாமலே யுரைக்குமேற்றத்தன்
பதஞ்சலிமுனிவரனென்னும் பான்மையான். (௨)

சேணுறும்விபுதர்தாள் போற்றத்தில்லையுட்
பாணுறும்விபஞ்சியர் பரதம்பாடிடுந்
தாணுறும்பெருநடந் தன்னையென்றுமே
காணுறாதேயுளக்கண்டிலாதவன். (௩)

இரசிதகிரியினை யெய்தியுற்றநாள்
விரசிடுகாதையை யண்ணல்வேதியற்
குரைசெயுமேன்மையை யுன்னியித்தலம்
பரசுறவேயுளம் பதிந்துற்றனரோ. (௪)

இறுதியில்புகழமை திருப்புன்கூரினி
லறுதியிருணுவி னடிவணங்குற
வுறுதியையெய்தினே னெனவுரைத்தலும்
பெறுதியென்றண்ணலும் பேசினனரோ. (௫)

இண்டையோன்றனுவை யெய்தியெய்திய
* வுண்டையோடேயர்ச்சை யினையுஞற்றியே
பண்டைநாள்பெற்றிடு பயனனைத்தையுங்
கொண்டுளங்கது வலாற்கூடுமார்வத்தான். (௬)

---

* உண்டை—சேனை

உண்டையோடிந்திரனுஞற்று மர்ச்சையைக்
குண்டையூர்பவன் களிகூர்ந்துகோதமன்
பண்டைநாளீந்திடு பழிதவிர்த்திடு
மொண்டிறற்செய்கையை யுன்னுவானரோ. (எ)

யானுமத்தலத்தினை யெய்தியர்ச்சைபைக்
கோனுவப்புறபுரிந் தளப்பில்கோடியாம்
பானுவைக்கண்டருள் பழுத்தளித்திடுந்
தேனுவைப்பெறுவலென் றுளந்தெளிந்தனன். (அ)

இருபுறம்பொன்னியா றெய்தநாப்புண்வாழ்
வருபுறம்பணையொடும் பொழில்கண்மல்கியே
திருபுறம்போந்திடா தமைந்துசீர்கொளீண்
டொருபுறம்போந்திடுந் திருப்புன்கூருற்றுன். (கூ)

தலவிசேடத்தினை யுளத்திற்றுன்கொண்டே
பலவிசேடங்களும் பொருந்தும்பண்பினு
னலவிசேடத்தட மிலிங்கத்தா பனங்
குலவியேய்வுறமுனங் குயிற்றினனரோ. (௧௦)

அத்தடமூழ்கியும் விடையின்பேரமை
மெய்த்தடமூழ்கியும் வெள்ளிக்காப்பொடும்
பொய்த்தடம்போக்குறு மணியும்பூண்டுள
பித்தடச்சந்தியைச் செய்யப்பெற்றபின். (௧௧)

சபரிசெய்பொருளன யாவுந்தன்கரத்
துபரியாக்கொண்டு மூவலமுஞற்றியே
யுபரிடதப்பொருளினை யுளங்கொடே
சபதமதாகவே சமைப்பவுன்னினன். (௧௨)

உந்தியினீரெலாமுற வரித்துமே
யைந்தெனுஞ்சுத்தியை யாரவாற்றியே
புந்தியின்மாயையின் புணர்ச்சிபோக்கியே
யிந்தியமவித்தன னுகியேய்ந்தனன். (௧௩)

அருச்சனைமுதலிய கடன்களாற்றியே
யுருச்சுவைநிவேதன மொருங்கமைத்தரோ

குருச்சுடர்பளிதமுங் குலவக்காட்டியே
திருச்சரண் சரணெனச் சென்னிசேர்த்தரோ. (கச)

வேறு.

உம்பருக்கமுதே யொப்பிலாமணியே யுயர்பழமறையினு ளொளிருஞ், செம்பொருட்டுணிவே சிந்தையினமர்ந்து தெவிட்டுறுதினிக்குஞ்செங்கரும்பே, யிப்பருற்றெண்ணப்படிக்கருளென் றே யிறைஞ்சுறுமேழையேற்கிரங்கும், கொம்பனைப்போல்வாள் குறித்திடுங் கணவ கோகனகத்தடிபோற்றி. (கரு)

உன்னெளிப்பெருமை கையிலையினுறைய முபமிடதத்தனை நோக்கி, யின்னெளிக்கமலாசனனுசாவுதலு மிபம்புறவேவிழை வுற்றே, மின்னெளிகொண்டசெஞ்சடைப்பரம வேதியதேவர் கோமானே, பொன்னெளியாம்பேரொளிக்கொளியான புண்ணி யப்பெருமதாள்போற்றி. (கசு)

வேறு.

என்னவேபன்னிவீழ்ந் திறைஞ்சுவான்றனக்
குன்னுறுமருட்பெருக் கூக்கமோடளித்
தென்னிருசரண்மலரெய் தியென்றுமே
பொன்னிருஞ்சிறையளியெனப் பொருந்துவாய். (கஎ)

என்றலுமவனருளென்னும்வேலையு
ளொன்றியேயத்தலத்துற்றவம்மைக்கு
நன்றிகொளர்ச்சையின் முறைநடத்தியே
யன்றவனருள்வரமமையப்பெற்றரோ. (கஅ)

தனியனமந்திரந்தலைக்கொண்டேற்றிடு
முனியெனவந்திடு மூதுணர்ந்தவன்
கனியெனக்களிமதுவெண்ணக் கண்டவ
னினியெவன்குறையென்று மிலையென்றேகினன். (கசு)

முற்றிற்று.

## பதஞ்சலிமுனிவர்பூசித்த படலச்சுருக்கம்.

சூதமகரிஷியானவர் நைமிசாரணியவாசிகளைநோக்கி ஓ மகரிஷிகளே! கேட்பீராக. பூர்வத்தில் கைலையங்கிரியில் பிர

மதேவனுக்கு சிவபெருமான் அருளிச்செய்த வண்ணத்தைக் கேள்வியுற்றவராகிய பதஞ்சலிமுனிவர் இத்திருப்புன்கூரென்னுந் தலத்தையடைந்து, தீர்த்தமாடிச் சிவலோகேசரைப் பூசித்து இலிங்கப்பிரதிஷ்டைசெய்து வேண்டியவரங்களைப்பெற்று சிதம்பரஞ் செல்வாராயினார்.

சருக்கம் முற்றிற்று.

## வியாக்கிரபாதமுனிவர் பூசித்தபடலம்.

---

இம்முனிகாதையை யிற்றெனுவிசைத்
தம்முனியுடனுறை யன்னமந்திரச்
செம்முனியாம்புலிக் கால்சிறந்துள
மெய்ம்முனிவரன்கதை விரித்துக்கேட்டிரால். (௧)

வல்லியக்கால்கொடு மாதவர்க்குளே
நல்லியல்பியன்றிடு நாயகப்பிரா
னல்லியல்கண்டனை யர்ச்சையாற்றிடச்
சொல்லியநகையினே தொழும்புபூண்டினான். (௨)

தில்லையினடந்தரி சித்திடாமலோ
ரெல்லையுமுணவுறா விரதமேற்றவன்
வல்லவாந்தரனருள் வரம்பிலாவரந்
தொல்லையிற்பெற்றிடு தூய்மைமிக்குளான். (௩)

வந்துறுநாளினே வள்ளறன்னரு
ளுந்துறுபாற்றிரைக் கடலையுண்டிடு
சந்ததியெனுமுப மன்யதாபதன்
றந்தையென்றிடுமிகு தவந்தழைந்துளான். (௪)

நாவலூராளிதான் கயிலைநண்ணுறப்
போவதைக்காண்டுறும் புண்ணியங்கொளு
மேவரும்புகழுமம் முனியையீன்றிடுந்
தேவனென்றிடு புகழ்சிறந்துளானரோ. (௫)

நற்றுளவணிந்திடு துவரைநாதனுக்
குற்றவைந்தெழுத்தினை யுணர்த்திவைத்திடு

மற்றவக்குருவினை மகவெனச்சொலப்
பெற்றவனிவனலாற் பிறிதுவேறுண்டோ. (௬)

ஒருவர்வைத்திடுநந்த வனத்திலுற்றிடு
மருமலரெடுத்தருச் சனையைமன்னிடிற்
பொருவரும்பயனவர் தமக்கும்போமெனப்
பெருமகிழ்வோடுதா னியற்றப்பெற்றவன். (௭)

கயத்துரிபோர்த்தவன் கழலருச்சிப்ப
நயத்தின்மானவர்கள்பூ வெடுத்துநல்கிடிற்
பயத்தினிலுறுவெனப் பானெழாமுனஞ்
சுயத்திற்றானேயெடுத் திடுநற்றாயவன். (௮)

உடுவினைமழுக்குவ னுதயமாயபின்
கடிமதுவினையறு கால்சளுண்டுறிற்
செடிமலரனைத்துமுச் சிட்டமாமென
விடியுமுனெடுத்துறு மேதக்கோனரோ. (௯)

எங்குலப்புறுவதன் னவனன்பேற்றமே
கங்குலின்மலர்கொய்யுங் கருமநோக்கியே
யொங்குலநாயகன் வரமிசைந்ததா
லங்குலிதொறும்விழி யமைந்துளானரோ. (௧௰)

அகக்கணையரனடிக் கமைக்கப்பெற்றவன்
முகக்கணானோக்கியே முருகுசேர்மல
ரிகக்கணார்போலவே யெடுக்கப்பாலனோ
நகக்கணானோக்கியே கொய்யுநண்ணுவான். (௧௧)

பழுதறுமலரொடு பத்திரத்தினுக்
கெழுதருந்தருக்கனி லேற்றங்கொண்டிட
வழுவுறும்பனியினி லெனும்வழக்கினா
லுழுவையினடியிணை யுற்றுளானரோ. (௧௨)

அன்னவன்கைலையி லருளுமாற்றஞ்சொன்
முன்னவன்பதியிறும் பூதைமுன்னியே
யென்னவன்பெருமையென் றெண்ணியெய்திய
பின்னவன்பெற்றியைப் பெட்பிற்கேட்டிரால், (௧௩)

வேறு.

கரஞ்சமாவனக்காட்சியைக் கண்ணுறீஇ
நிரஞ்சனத்தலப்பேற்றி னிலைமையால்
வரஞ்செறிந்திடு வாவியுந்தொட்டபின்
றரஞ்சிறந்தவிலிங்கஞ் சமைத்தனன். (கச)

வாவியாடி வழுவில்கடன்முறை
யோவிலாமனு ஞற்றிவலம்வந்தே
யாவியன்னவ னம்புயத்தாண்மிசை
மேவிப்பணிந் தான்வினைவீட்டுவான். (கரு)

ஆதியந்தமில் லாதவம்மான்றனக்
காதியந்தம தாமபிடேகமோ
டோதியாவுஞ் சரியைக்குள்ளன
வோதியாற்புரிந் தேபணிந்தேத்துவான். (கசு)

வேறு.

அண்ணலெனுங் கரஞ்சவனச்சிவலோக நாயகப்பேரம்மா
னேநின், னெண்ணம்வன்கண்மையதாமோ விரக்கமதுபெருங்கட
லாயில்லைகொல்லோ, மண்ணதனினொரடைந்துவாடுவதோ நின்
னருளின்வாழ்வுகண்டா, யெண்ணமெலாமுறும்படிக்கே யென
க்கருளிற்பிழையாமோ வினியீவாயே. (கஎ)

வாயசந்தானொருகோடியுறினுமொரு கல்லின்முனைமரு
வுமோகொல்லோ, பாயசந்தானுண்டைபுண்டையாயுறினும் வல்லிய
முன்பாறிடாவோ, நேயதிருப்புன்கூரிலெனதுகருத்தினைபருள்வா
ய்நீணிலத்தி, லாயசந்தானடையாய்நீ யெனத்தந்தநிமித்தமதெ
ன்னுகுமம்மா. (கஅ)

என்குற்றம்பார்த்தருளாதிருந்திடினே சிவலோகப்பேரம்
மானே, முன்குற்றம்பின்குற்றம்யாவுநீகுணமுமீ யெனமொழிந்
தோர், நன்குற்றமொழிபார்க்கினடியருரை நின்னுரையன்றோ
நவின்றோர், தன்குற்றமெண்விடுவாய்கொல்லோ வென்றோவினி
யென்சாற்றுமாறே. (ககூ)

---

*ஆயாசமென்பது—குறுகிற்று.

வேறு.

என்னப்போற்றி யிறைஞ்சுறுவான்றனக்
கன்னமந்திரந் தன்னையருளியே
பின்னமின்றிப் பலவுருட்பேறுற
வென்னையாளுடை நாயகனீங்கனன். (உ0)

வேண்டுமாறு வரமிகப்பெற்றபின்
றாண்டுசோதி துளும்புமுள்ளத்தவன்
காண்டொறுங்கண் பிலிற்றக்கரைதலோ
டாண்டுநீங்கியணுகினன் றில்லைக்கே. (உக)

முற்றிற்று.

## வியாக்கிரபாதமுனிவர் பூசித்தபடலச்சுருக்கம்.

சூதமகரிஷியானவர் நைமிசாரண்ணியவாசிகளை நோக்கி ஓ மகரிஷிகளே! கேட்பீர்களாக. பூர்வத்தில் கைலையங்கிரியில் பிரமதேவனுக்குச் சிவபெருமான் அருளிச்செய்த வண்ணத்தைக் கேள்வியுற்று வியாக்கிரபாதமுனிவர் இத்திருப்புன்கூரென்னும் பதியையடைந்து தீர்த்தமாடிச் சிவலோகேசரைப் பூசைசெய்து இலிங்கப் பிரதிஷ்டைசெய்து வேண்டியவரங்களைப்பெற்று சிதம்பரஞ்செல்வாராயினர்.

சுருக்கம் முற்றிற்று.

## சப்தகன்னியார்பூசித்தபடலம்.

வன்னிமானை மலர்க்கரந்தன்னிலே
மன்னினானை வழுத்துசன்மார்க்கரிற்
சென்னியாம்புலிக் காற்கதைசெப்பினேங்
கன்னியார்தங் கதையைக்கழறுவாம். (க)

முத்திருத்திய முண்டகமாமலர்
வைத்திருத்திய தென்னும்வதனத்துக்

* அன்னமந்திரம்—ஹம்ஸமந்திரம்.

கொத்திருத்திய கூந்தலுமையவள்
பத்திருத்திய தாமுளப்பண்பினுள். (உ.)

சொன்னமாக்கொடி போலுந்துளங்கிடை
யன்னமாகுநடையுடை யம்பிகை
முன்னமேமகிடாசுரன் மொய்ம்பினைச்
சின்னமாக்குறச் செற்றிடவெண்ணியே. (ந)

வேறு.

மூன்றுநாடுற்கையாகிப் பின்மூன்றுநாடிருவாய்
மூன்றுநாள்கலைமாதென மூவுருவாய்மும்
மூன்றிராத்திரிமலிதவ முயன்றிடலாலே
மூன்றுகண்ணுடைநாயக னுமைதவமுன்னி. (ச)

பற்றலாரிலையெனும்படிப் பகர்வுறப்பாரின்
முற்றிலாமுலையுமைநடையாய்மிக முதமாய்ச்
செற்றுநம்மிடைமீளுவை யென்றுநீக்காலுங்
கொற்றவாளிகளளித்தனன் கோறலின்பொருட்டே. (ரு)

ஆயபின்மகிடாசுரன் றன்னையாகவத்தின்
காயமெங்கணும் வானவர்மலர்மழைசொல
மீயுயர்ந்தபொன்மாரியை மேகங்கள்பொழிய
மாயுறும்படிச்செற்றனண் மலைதருமகளே. (சா)

அன்னபின்னரேயிரத்த பீசப்பெயரவுணன்
வன்னியாசுரனெனப் படுமவுணரில்வல்லா
ரென்னவுள்ளுறுதானவ ரொன்பதென்பவருந்
துன்னவெங்கணுமின்னலைப் புரிந்துறச்சூழ்வார். (எ)

இந்திரன்றனையெள்ளியே யவனிபமேறி
யந்தரத்தினிலுணையை நடத்துறவணைவார்
சந்திரன்றனைத்தவிர்த்து மானத்தினிற்சார்வார்
மந்திரிக்கணேவவ்வுவ ரிருநிதிவைப்பை. (அ)

மயிலையீயெனவானவர் தமையெலாம்வதைப்பர்
குயிலையீயெனக்குவலயத்தோர் களைக்குமைப்ப

*முதம்—ஆசை.

ரயிலையீயெனவானவர் மயனேயேயலைப்பர்
கயிலையீசனேயமர்பொரக் கருதியேகாண்பர். (௯)

இன்னவாறிவரலைத்திடு மின்னலையெல்லா
முன்னமாலயனுதியர் தமக்குலப்புறுமோ
வென்னவாறெனவுமக் குணர்த்திடுவமென்றிமையோர்
சொன்னவாறெலாங் கேட்டனள்மலைமகடொகுத்து (௧o)

ஐந்துசத்தியாயகிலமெல்லாம் படைத்தளித்து
நந்தவேயழித்தேமறைத் தருள்மலைநங்கை
யைந்துவானமுங்வையமு நலிவுறுதென்று
முய்ந்துறும்படியவுணரைச் செற்றிடவுன்னி. (௧௧)

வன்னிதாங்கியகரத்தவன் மாலயன்முதலோர்
நன்னிதானமாய்வென்றிடத் துணையெனநண்ணத்
தன்னின்வேறதாய்ச்சங்கரியுதவுறச்சப்த
கன்னிமாரெனவிளங்கின ருலகெலாங்கருத. (௧௨)

மத்தவாரணமுரித்தது மாபலியிடஞ்சேர்
நத்தனுகத்தையுரித்ததுந் திரிபுரநசிப்பக்
கைத்தனுப்பெறமேருவை வளைத்ததுங்காணிற்
சத்தியன்றியுமொல்லுமோ சங்கரற்கம்மா. (௧௩)

நவிரம்போன்றிடுஞ்சிலையினை வளைத்ததுஞால
மிவரக்கேழலாயெடுத்தது மேனையோருயிரைக்
கவருறப்புரிந்ததுங் கடலினைக்கலக்கலுமா
லிவளையல்லதுவெல்லுறும் வகையுண்டோவெண்ணில். (௧௪)

எங்குலப்புறுமிவர் பெருந்தகைமையையெண்ணிற்
கங்குலைப்பழித்திடு குழற்கன்னியராகி
யிங்குலப்பறுதவந்தரு தலமதுவென்றே
யெங்குநாடியேயிதுவலா விலையெனவெண்ணி. (௧௫)

முன்னமும்பஞ்சாக்கர மருள்புரிந்திடுமுறைபோ
லின்னமும்பலவரமெலா மெய்திடுமென்றே
கன்னங்கேட்டவாகண்டவப் பேற்றினற்காண்போ
மென்னமுந்துறுமன்பதே யீர்த்திடவெய்தி. (௧௬)

நன்றுதேர்ந்திடுவரமெலா நல்கிடுதலங்க
ளொன்றும்வேறிலையென விவணெய்துறலாலே
யின்றுங்கன்னியர்குடி யெனவியம்புவரென்னிற்
றொன்றுதொட்டுறுபுகழ்மையார் சொற்றுறப்பாற்றே. (௧௭)

ஆயவிப்பதியெய்தியே விடையெனுமாவித்
தூயதாம்புனன்மூழ்கு புவலம்வந்துதொழுது
மேயவர்ச்சைக்கிவேண்டுவ கொண்டுவெள்விடையின்
ஞயகன்றனையணுகினர் யாருமுண்ணயப்ப. (௧௮)

ஐந்துசுத்தியாலகம்புறந் தூய்மையதாக்கி
நைந்துகண்கணீரரும்பிட நான்மறையாதி
முந்துரைத்தவோமாதிகள் முறைப்படிமுடித்தே
யிந்துசேகரன்றனக்கபி டேகங்களியற்றி. (௧௯)

ஐந்துதானமேலுறைதரும் பொருளினைவறிய
வைந்தெழுத்துருவாகிபுற்றிலங் கஞமென்ன
வைந்தெனப்படுவதனமு மமைந்தனவென்ற
ணைந்தெனுஞ்சிருங்கம்பெறு மரனகமகிழ. (௨0)

தரக்கினூற்றருந்தோலொடு தந்திபின்றோலு
மரைக்கணையுடுத்தப் பெறுமமனுக்கேதென்
றுரைக்கவேமணிபற்பல விழைத்ததிறனொளிசேர்
ரஞ்கெதிர்திடுகோசிக வெழில்பெறவமைத்தார். (௨௧)

அத்தனுக்கெங்கள் சௌந்தரநாயகியன்றி
யித்தலத்தினிலெமையன்றிச் சூட்டுவரெவரே
பொய்த்தநுண்ணிடையார்க்கெலாம் பொருந்துமோவென்ன
பத்தியோடவர்சூட்டினர் பன்மலர்ப்படலை. (௨௨)

ஈசனைந்தெழுத்தெண்ணியே யருச்சனையியற்றி
வாசமிக்குறுதூபதீபங்களை வயக்கி
பூசனைத்திறமுற்றுமே புரிந்தடிபோற்றி
மாசனைத்தையுநீக்கியே வழுத்துறலுற்றார். (௨௩)

முத்தரா வெனுமல்குல்வாணகைமுகிழ்முலைபா
தித்தராம்பலபூணணி நாயகிக்கிறைவ

பத்தரானவர்தங்களுக் கருடரும்பகல
நித்தமாகியசங்கர நின்மலபோற்றி. (௨௪)

வந்தரத்தபீசாதியொன்பதின் மரைமடிக்கச்
சிந்தைகொண்டனம் வேறல்செய்வகையினைத்தெரிபோ
மெந்தமக்கருளளித்தொளிர்படைக்கலமீதி
யிந்துசேகரவிறையவ வென்றடிதொழுதார். (௨௫)

உன்னருட்டுணையுள்ளதே யுலகெலாமுறவாய்
நன்னயத்தொடுமெண்ணுங் காரியஞ்செய்நண்ணு
முன்னருட்டுணையில்லதே லுலகுயிர்க்கதிக
ளின்னலுற்றிடுமே யெங்களிறையவபோற்றி. (௨௬)

எனப்பலதுதிமொழிந்த வெஞ்சத்தமாதர்க்கெல்லா
நினைப்பருங்கருணைகூர்ந்து நிகரிலாக்காட்சிதந்து
முனைப்பொரவேண்டுகின்றதந்தன்மை சேர்படைகளீந்து
தனிப்பலவரமுநல்கிச் சாருவீர்வென்றேயென்றான். (௨௭)

என்றரனளித்தலோடு மெம்பரமேட்டியோர்தாஞ்
சென்றனரவுணர்மேவு சூழலிற்சேறலோடு
மன்றவரெழுந்தசேனை யாகவத்திடையேபுக்கு
வென்றிடப்பெரும்போராற்றிப்படைகளைச்செற்றார்மேலும் (௨௮)

இரத்தபீசப்பேருற்றவவுணன் மெய்யிடையினின்றுந்
தரித்திடுசோணிதந் தானொருதுளிதரையின்வீழிற்
பெருத்திடுமுருவத்தோடு கோடியராகப்பெற்று
வருத்தவர்தம்மைக்கோற லரனுக்குமொண்ணாதென்று. [௨௯]

வெஞ்சமர்மிகப்புரிந்தே வேறலேயரிதென்றெண்ணி
யஞ்சிவர்போகாவண்ணமொறுப் பமென்றுள்ளங்கொண்டு
பஞ்சின்மெல்லடியளாமோர் காளியைப்படைத்தாரன்னோன்
செஞ்சிறுதுளியேயல்லாற் பெருக்கையுந்தெவிட்டாதுண்டாள். )

வீழ்விழுஞ்சோணிதந்தான் கடலெனக்கிளர்ந்தபோழ்தும்
பாழ்படத்துமிதந்தானுந் தரையிசைப்படாமலுண்ண
வேழ்பெருந்தேவிமாரு மேந்தயில்வாளால்வெட்டிப்
கேழ்படவந்துளோரை வென்றனர்கிளையினோடும். [௩௧]

பொன்னெனுமாரிதன்னைப் புயல்பெயவிண்ணோரெல்லாம்
பன்னுயாமலரின்மாரிபெய்யப் பல்லாண்டுகூற
வன்னையாயருளுமெங்க ளம்மையாருறையுமாற்றால்
கன்னியார்குடியெனப்பேர் வாய்ந்தென்றுங்களுமம்மா. [௩௧]

முற்றிற்று.

---

## சப்தகன்னியர்பூசித்தபடலச்சுருக்கம்.

---

சௌனகாதிரிஷிகளே! கேளுங்களென்று சூதபுராணிகர் பின்னுஞ்சொல்லுகின்றார். உமாதேவியாரானவர் தேவாதியருக்கு நீங்கா இடுக்கணையேபுரிந்து வருகின்ற கொடுமையுள்ள மகிடாசூரனென்னும் அசுரத்தலைவனைக் சொல்லுமாறு திருவுளத்தெண்ணி முன் மூன்றுநாள் துர்க்கையாகவும், இடைமூன்றுநாள் இலக்ஷுமியாகவும், பின்மூன்றுநாள் சரஸ்வதியாகவுந் திருவுருக்கொண்டு நவராத்திரியாக சிவபெருமானைப் பூசித்து அருந்தவஞ்செய்தனள். பின்னேகொண்டது சரஸ்வதிஉருவமாகலின் இந்நவராத்திரி இறுதிநாள் சரஸ்வதிபூசை கொண்டாடப்படுகின்றது. பத்தாநாள் பெருமானிடம் வேண்டியாங்கே ஆயுதமுதலிய துணைக்கருவிகள் பெற்று அம்மகிடாசூரனை அம்மையார் சங்கரிப்பாளாயினள். பின்னர் இரக்தபீஜன் வன்னிகாசூரன் முதலிய மகாகொடியர்களை வெல்லக்கருதி சப்தகன்னிபராக உருவங்கொண்டு திருப்புன்கூரையடைந்துஇடபதீர்த்தத்து விதிப்படி மூழ்கிச் சிவலோகேசரை அபிடேகாதிகளாலுபசரித்துத்தவஞ்செய்து நல்வரம்பெற்று அசுரரை எதிர்த்துப் போர்புரிந்து வென்றனர். இத்தருணத்து அம்மையார் வசித்தஇடமே இன்றும் கன்னியார்குடி என்னும்பேரால் விளங்குகின்றது.

முற்றிற்று.

---

## வீரவிக்கிரமச்சோழன் பூசித்தபடலம்.

வாரிதிகலவுகின்றவசுந்தரை மீதுசெங்கோ
லாரினியிவனோடொப்பா ரெனவரமமைந்தேயோச்சுந்
தாரணிகுவவுத்திண்டோண் மனுகுலந்தன்னில்வந்த
வீரவிக்கிரமனென்னுநாமங் கொள்வெற்றிவேலோன். (௧)

அள்ளிலைபோன்றுநெய்த்தா யலகைக்குவிருந்திடற்கா
மொள்ளியவேலாற்சோரர் தமையெலாமொருங்கவித்தே
கள்ளினற்குழலார்க்கெல்லாங் காமனுக்காத்தலாலே
வள்ளியதிருமாலென்ன மன்னவன்வாழ்வுற்றானால். (௨)

பைந்திரைசுருட்டுந்தெண்ணீர்ப் பார்முற்றுமாளிலென்ன
செந்திருமாதுவீரமாதெலாஞ் சேரினென்ன
முந்தியகள்ளிநற்காய்கனியின்றி முதிருமாபோற்
சந்ததியில்லாச்செல்வந் தழைத்தென்னசாற்றுங்காலே. (௩

பொன்னிமாநதிதீரத்திற் போந்துபல்லாண்டதாக
மன்னியேமகப்பேற்றுக்கா மகம்பலவாயிழைத்தும்
பன்னுமுப்பானிரண்டா மறமெலாம்பயின்றுநின்று
மின்னறிர்நோன்பனைத்து மியற்றியுமின்மைகண்டான். (௪)

வேண்டியவடியவர்க்கு வேண்டியவடிவனாகிப்
பூண்டுறுகருணைசெய்வான் றிருப்புன்கூர்புகுந்தேயங்க
ணீண்டியபெற்றியாவும் வினையுளத்துவகையெய்தித்
தூண்டியவிளக்கேயென்னத் தூய்மையின்விளங்கப்பெற்றான். ()

இச்சிவலோகநாதற் றரிசித்தவிபல்பினாலே
அச்சுதனுதித்ததென்ன வுதித்தவச்சுதற்குநாமஞ்
சிற்சபாநடேசனென்னத் திகழுறத்தேற்றத்தாலே
வைச்சுளத்தளப்பிலாத மகிழ்வொடுமன்னினானால். (௬)

மறையொலிமுழக்கமோங்க மகம்பலவினிதியற்றித்
துறைதொறுமறங்கண்மல்கித் தொறுக்கள்பாலினிதுநல்க
விறைமையிற்செங்கோலோச்சி யெண்ணிரண்டென்னப்பட்ட
குறையறுசெல்வம்பெற்றே குவலயத்தினிதுவாழ்ந்தான். (௭)

இத்தலமேன்மைதன்னால் யாவுமெய்தினனுமென்றே
யத்தலமதனிற்றீர்த்த மமைத்திலிங்கப்பதிட்டை
முத்தலமதிப்பவாற்றி முளைக்குமாமுடிபுனைந்து
கைத்தலமமர்ந்தசெங்கோ லரசினைக்களிப்பாலக்கி. (௯)

இருவினைச்சமத்தனாகி யெஞ்சிவலோகநாதன்
மருவிணைப்பதுமத்தாளை மருவியின்புற்றுவாழ்ந்தான்
றருவினைநிகர்கரத்துச் சிற்சபாநடேசன்றானுஞ்
செருவினையடக்கிமன்னர் திறையிடச்செருக்கினின்றான். (௧0)

படைகுடிகூழமைச்சுநட்• பரணாறும்பாங்கா
யுடையவனரசர்தம்மி லேறெனவுரைக்குமாற்றா
லுடைவுடன்முற்றும்பெற்றே யண்டத்திற்பரிதியென்னப்
புடவியிற்புகழ்விளங்கப் புலிக்கொடியவன்வாழ்நாளில். (௧௧)

பிறந்திடின்முத்தியாகும் பேற்றினையளிக்குமாரூர்ச்
சிறந்திடுதலத்தின்மேவுஞ் சிற்சபேசன்றாடம்மை
நிறைந்திடுமன்பினாலே நிசியர்த்தயாமந்தன்னிற்
மறந்திடான்றினமும்போற்றித் தரிசிக்குநியமம்வாய்ந்தான். (௧௨

இத்தகையானவேந்த னெம்பிரான்றிருவாரூரிற்
பத்தியோடுறையுநாளி லிந்திரன்பழியைநீத்தே
யுத்தமதலங்கட்கெல்லா முத்தமமாயுறைந்த
சித்திரக்கரஞ்சத்தாவப் பெற்றியைச்செப்பக்கேட்டு. (௧௩)

சீர்தருமாரூருக்கு மேன்மைசேர்திருப்புன்கூரை
யாதரவொடுபணிந்தா லறமுதற்பொருளனைத்தும்
போதருமெளவுளத்திற் புகலருமுவகைபூத்து
மோத*மங்கலமெடுப்ப முதுநகர்முன்னினானால். (௧௪]

தன்பிதாவரத்தினாலே சாத§முற்றமையையெண்ணிப்
பொன்பிறழ்கடுக்கைவேணிப் புனிதனைவலமாய்ப்போந்தே
யன்புதானுருவாய்வந்தேயன்னவன் பணிந்துபோற்றி
யென்பெருமானேயென்றே யிருகணீரிறைப்பநின்றான். [௧௫]

என்புநெக்குருகும்வண்ண மிதயந்தான்மிகத்துளங்க
வன்பினெவ்வளவுருக்க மாயினரோவவர்க்குத்

* மோதம்—உயர்வு.
§ சாதம்—பிறப்பு.

துன்பினையகற்றிவேண்டும் வரமெலாந்துலங்கத்தந்தே
யின்பினையிருமைக்கியு மெந்தையேயிணைத்தாள்போற்றி. (கசு)

அரகரசம்போவெங்கள் சங்கராவடியர்துன்பப்
பரவையின்விழினின்னே பதைத்துறுங்கன்றினுக்கான்
வருவதுபோன்றுவந்திங் காளுறும்வள்ளலேயீங்
கொருவருந்துணையிலேனுக் குறுதுணையாவாய்போற்றி. (கஎ)

என்னவேதுதித்துவேண்டும் வரம்பலவியைந்துமீண்டு
பொன்னவாஞ்சுணங்குபூத்த புணர்முலைச்சௌந்தரப்பே
ரன்னையம்புயத்தாள்போற்றி யளப்பில்வரமமைந்து
பின்னையோர்மண்டபத்தி னிடையுற்றான்பிறங்கற்றோளான். (கஅ)

வேறு.

அவ்வழிப்பரதநூலினைச் செய்யாளழகைவெள்ளலர்மகளறி
வைச், செவ்வழிப்பண்ணின்சுவையினையொன்றாய்த் திரட்டியே
யோருருவாக்கி, நவ்விகொள்மடநனுய்த்தென வந்தவங்கணுமணி
யெனுநாரி, யொவ்விலாவுருவத்தவள் சௌந்தரமென்றுரைபெறு
கணிகையங்குற்றாள், (க௯)

பிறங்குறுகணிகை தமிழ்சிறப்புற்ற பேரெழிலுடையவளு
ருவி, னிறங்குறிகுணங்கடமைக்கண்டவளவி னிருபர்கள்சிகாம
ணிநோக்கி, யிறங்குறுதுறையி னீச்சுதாயினபோ லேந்திழையவ
ளப்பெனுங்கடலிற், கறங்கெனச்சுழன்றே யாழ்ந்தனன் கரை
யைக்காணுறாதுளமிகக்கவன்றான். (௨0)

பெருத்திடுவேணுவானதுநாரி யெனவொருபேர்படைத்த
மையால், விருத்தமடதாய்த்தன்றலைவணங்குற் றுவில்லெனப்போய்
ப்புகுமென்னி, லுருத்திகடாவே மங்கையாய்வந்திங் குறைதரினு
ரைத்திடப்பாற்றோ, கருத்தெனுமூசிதனையவளழகாங் காந்த
மேகவர்ந்ததுகடிதின். (௨க)

கோசிகன்பிருகுவதிட்டர்வான்மீகி குறுமுனிபரத்துவாசன்
றன், காசிபன்முதலாய்விருத்தமாய்ச்சருகு கந்தமூலாதிகளயி
ன்றும், பாசிழைமடந்தைபடவரவல்குற் பரவையிற்படிந்தனு

ரென்னிற், றேசுமெவ்வனமுஞ்செல்வமுமலிந்த திரணைச்செப்புவதெவனே. (௨௨)

வேதியன்பதுமன்பெறுதிலோத்தமையா மகளினைமேவுறவிழைந்தான், மாதவன்மகன்பெற்றிட்டபூதேவி யெனும்பௌத்திரிதனைமணந்தான், பூதல்மேல்மாபாதகன்றாயைப் புணர்ந்துமேவுற்றனனதனால், காதல்காமத்திற்கில்லைகண்ணென்பர் கணிகையைவிரும்புதல்கடனே. (௨௩)

கிருபனாதரித்தேநகரறுவனப்பி னிறைந்திடுநேரிழைசெல்லும், பொருவருமில்லிற்புக்குழிச்சென்று போர்மதமாதங்கம்போல்வான், பெருவிலைப்பணியுமளப்பிலநிதியும் பெய்தவட்டணமெனும்வரைமேல், வெருவராதேறி நிதம்பமாங்கடலில் வீழ்ந்தனனிராமுற்றும்விழைய. (௨௪)

காமமாமதுவுண்டவற்கு வேறெண்ணக் கருத்தெழுமோகருத்தெழினும், வாமமாங்கழல்கொள் கானடக்குறுமோ மற்றுணாவேற்றிடவருமோ, நேமமாகித்தக்கடன்செயவுணர்வு நேருமோநிலைபெறுமுத்தி, சேமமீதன்றிவேறுளதென்னச் சிந்தனைவருங்கொலோசெப்பின். (௨௫)

ஊடுறப்பசிதான்மிகநலிந்துற்றே யுறுப்பெலாநோய்மிகமலிந்து, வாடையிலாடைமீதுபோர்த்துறவே யீப்பிடுங்குறவருந்துவனும், பீடுறுமயிலார்விரகநோயென்னும் பிணிக்குடைந்தேபுறங்கடைபோய், வாடையேற்றிடுவரேன்மதனம்பால் வாய்ந்தவர்விடுவர்கொல்மயலை. (௨௬)

சந்தியானதனைத்தான்மறந்திடினுந் தனத்தரார்கருபொதுச்சேரிச், சந்தியானதனைத்தாவென்று மறவாத்தகைமையான்சுந்திசெய்தோறு, முந்திசெய்யங்கந்யாசத்தைமறந்து முறைவழுவுறினுமொய்முலையை, முந்தியேகரந்யாசத்தினைமறவா முறையினின்றேயொழுகுவனால், (௨௭)

எண்ணினுக்கரிதாமின்பவாருதியை யெல்லினும்பகலினுமெய்திக், கண்ணினுக்கரிதாமுருவினளோடு கலப்புறுகாவலன்றானும், பண்ணினுக்கரிதாஞ்சுவையையும்பருகிப் பகருமுத்தி

யீதென்ன, மண்ணினுக்கரிதாயடைந்தவன்சின்ன ளகன்றயினே ருரைவழங்கும். (உ௮)

இம்பர்வீடளிக்குந்தெய்வமாமகளிர்க் கிறைவியாமெனது கண்மணியே, யும்பருக்கரியவமுதே வரிவண்டுண்ணவொண்ணு ததீங்தேனே, கொம்பரிற்பழுத்தகனியனுப் முன்கூடிப்பிரியேலெனக்கூறுஞ். செம்பொருட்பயனைநினைந்துளமுருகித் தியங்குதற் கென்செயற்பாற்றே. (உ௯)

என்றுநல்லாரைக் காணுதலொழிகென் றியம்பியமாற்றமுண்மையதே, தன்றுறினட்புப்பேணுதலொழிக துவன்றியேபேணுறின்பிரிய, லென்றதையொழிக பிரிவுறினுயிர்வாழ்ந்திருத்தலொழிகவென்றிடலான், மின்றிகழ்மேனிப்பெண்ணினுக்கமுதே * விரளினென்னுயிர்விடுமென்றான். (௩௦)

மலரினின்மணமுநீரினுண்மீனு மாழையிலொளியும்வாவியினி, னலரிநன்கொட்டியாம்பலுமாகத் தாவியுமதுவினிற்சுவையுநலமுறல்யாண்டுமற்றிடுவதுபோமுறவாகவேநண்ணி, புலருமாறின்றியிருப்பவென்னுளம்போலுன்னுளமுறமுவையென்றான். [ ]

செங்கழுநீரினலரொடாம்பலுமே திகழ்கமலம்பலவாகத், தங்கமும்புத்துத்திகழ்ந்திடு கமலாலயமுறுதலத்தில்விண்ணகன்றே, யெங்களுக்காகவெழுந்தரு டியாகேசப்பிரானின்டையந்தாளைத், துங்கமாய்ப்பணிந்திங்குற்றிடலாம்பைந் தோகையேவருகநீயென்றான். (௩௧)

† சொற்பொதிபெற்றபாவைதான் பலர்க்குந்தோன்றல்போலளித்தனளென்னைக், கற்பொதிகொணருமாறுகைக்கரிமேற் சகடமேல்யாந்தருங்கனகப், பொற்பொதியதனைக்கொணர்ந்துபல்லோர்க்கும்புகழ்பெறவேயளித்திடலாம், விற்பொதிந்தொளிரும் வாணுதலேவா மீட்டுமோருரைசொலாவென்றான். (௩௩)

பாலொடுதேனைச்சீனியின்சுவையைப்பாகினைவடித்தொன்றுபடுத்தி, நூலொடுகலந்தேநொடித்திடுமாறன் னவடிருவுளத்தினிலுழையக், கோலொடுநீதிபிரிவுறாதாளுங் கொற்றவர்சிங்கத்தைநோக்கி, § நாலொடிரண்டினடிகொளற்கேய்ப்ப மொழிகுவணன்குரைநயந்தே. (௩௪)

---

* விரளின்—நீங்கின்.

† சொல்—நெல்.

§ நாலடியார்—குறள்.

வெள்ளியேபதினைந்து நான்கென்னும் வீட்டின் மேவுற்றருள்வான்போல், *கிள்ளியேநீயெற்கருளுவையெனினு மறுதலங்செழுமுருவிரத, முள்ளியேயிருப்பனொருகணமேனுமொருவுநேறனித்தலத்துகிரார், கிள்ளியேதரினும் விழைகுவேனென் பின்வரற்கொல்லேனென்றுரைகிளக்கும். (நடு)

இவ்வுரைகேட்டகிள்ளியென்பவனு மவளுறுமில்லினையிகந்து, செவ்வுரைபண்ணின்சுவைகொளுந் சகுணப்புள்ளுறுசெவித்தலமதனுற், றெவ்வுரையானபறையொலிதனைக்கேட் டயருமாறேதியங்குற்று, வெவ்வுரைபொருளுய்த்தென்றிசைநோக்கிமீண்டனன்பொன்னியாள்வேந்தன். [நடசு]

அச்சவுந்தரப்பேர்க்கணிகை பொன்பிரியமல்லதங்கவன்பிரிவெண்ணி, நச்சுறவாளோவிருட்டறைதன்னிற் பிணந்தழீஇயற்றன்றேநசைதா, னிச்சையாரெழுகிக்கிண்ணமாற் றிடுமோர்காதையன்றேபிறகீண்டு, பச்சிலைகோலக்காயுறைபேழை தனைக்கொளப்பாவையுட்சென்றாள். [நடஎ]

மாழையின்கண்ணேமணிபதிபலபூண் மருவுறும்பேழையைநோக்காத், தாழையினினீரெனநெடுநாளாய்த் தான்பெற்றபணிகள்காணுமன், மாழையுண்கண்ணிச்சிற்றிடைமடமான் மருண்டுயிர்நீத்தமெய்மானச், சோழைமிக்குற்றேயென்செய்வனென்னத் துளங்கியேதுயர்க்கடலழுந்தி. [நடஅ]

பார்த்திபன்சென்றநெறியினைத்தொடர்ந்து பாணியைக்கரத்தினுற்பற்றி, ‡நேத்திரமோடுபலபணிகளுமே னெமுங்குபேழையிலிலாமையினு, லார்த்திகொணினதுபரிசனரெவரோ வவ்வினராதவினருளிக், கேத்திரஞ்செல்வையென்றுரைத்திடலுங் கணிகையைநோக்கியேகிளத்தும். [நடகூ]

நந்தமைச்சொல்லவஞ்சியேநந்தந் தானைமேனவிலுவளென்ரூச், சிந்தனைகலங்கிச்சேயிழையார்க்குட் டிகழ்ந்திடுதிருந்திழாய்கேண்மோ, சந்தனங்கமழும்பூணணி பெரியதனத்தைக்கைப்பற்றினனன்றி, வந்தவர்தம்மில்மாளம்விற்றுணு நின்றனத்தையாவவ்வுவமென்றான். (சுo)

* கிள்ளி—சோழன்.
‡ நேத்திரம்—வஸ்திரம்.

யானுமேயபழியேனெவ்வழியெப்பேழை யினுழியனுகிற்றேவ தனைத் தானுமேயறியொணுமையால்வீணிற் றடுத்திடேலெனப் பலசாற்றி, வானுமேபோற்றுந் திருப்புன்கூருறையும் வள்ளலா ரருளுளதெனவீ, தானுமேமொழியாதேகுதியென்னத் தடிப்பரு ஞ்சினத்திற்சாற்றினுல். [சக]

பொய்யுரையாடாவாடவர்தமக்குப் பொய்ம்மயக்கத்தினிற் புணர்த்திப், பொய்யெனலன்றி வஞ்சகங்கொடுமை புதுக்கிய கொலையெலாங்கண்ணுய்ப், பொய்யினைவடிவுகாண்டிறவெண்ணி ற் * புற்கலமெடுத்தநாரனெனாய், பொய்யுரைத்திடுதனின்வழக்க ன்றேவேனிந்தப் புதுமையைப்புகல்வாய். [சஉ]

என்றுமன்மொழிந்தமாற்றத்தைக்கேட்டவிரக்கமில்கணிகை யுமிசைப்பாள், குன்றுபோற்றிவவும்பாழிகொளிணைத் தோட்கு ரிசிலேகுறுகியித்தலத்தி, லொன்றுறுந்தடத்திற்படிந்துருஞ்சை யா தொழுகிடில்விடேனெனவுரைத்தா, ளன்றுபோந்தரசனிந்தி ரதீர்த்தந் தருகினினின்றிடுமளவில். [சங]

ஆயபின்கோட்டமூழ்குறவெண்ணுமுன்னமே யந்தநீர்மூழ் று, மாயமாய்க்குருதிவடிவமதாகு மாற்றத்தைமன்னவனறிந்து, நாயகன்செய்யகிறக்தணுதலினு னண்ணியதிவ்வுருவென்னப், பேர் யதின்மூழ்கானகன்றுசந்நிதியிற் பொலிபலிபீடப்பாற்புக்கே. [ ]

சரதமாயுரைப்பன்பணிபுறும்பேழைதன்னையுங்கண்டிலேனீ றன்னு, ளரதனுதியபூணென்றுமேயுணரேனென்னவே மன்னவ னறையக், கரதலாமலகம்போற் றிருக்குளமேகரியுரைத்திடவுங் காவலனே, விரதவஞ்சகர்கள்னேருளர்கொல்லோ மெய்யனே வெனவிளம்பினரால். [சரு]

உரிப்பொருடந்துபோமெனக் கணிகையுரைத்தலுமன்னவ னேர்ந்து, விரிப்புறப்பகரேனுதனின்னருளை மேவினேனெனம னத்தடையேல், மருப்புறமுலையாய்கின்னையோர்கணத்தின் மரி ப்புறும்வகையியற்றுவனென், றெரிப்பிறழ்வேல்கொள்கரத்திறை யவனுமிகலியேயியம்புறுமேல்வை. (சசு)

அவ்வழியெம்மானருளினிற் றுவாரபாலகராயமர்வுற்றோர், செவ்விகொளிருவர்தம்மிலே யொருவன்சீற ராவாகினனதனை,

* புற்கலம்—சரீரம்.

வெளவியேயுவணவடிவமாமொருவன் மன்னவன்கந்தரத்திடவே யெவ்வம்வாய்ந்துள்ளந் துளங்கினனாகி யிடிகண்டவரவெனவினைந்தான். [௬௭]

இந்தமன்னவனுக்கேனிந்தவாசை யிதுதகுமோவிகழ்வெண்ணான், றந்தபொன்னணியையன்றி வேறிருந்ததனிமணிப்பூணையுங்கவர்ந்து, தந்திரம்புரியின்றெய்வமும்பொய்மை தனக்கிசைந்திடுங்கொலோசாற்றீ, ரெந்தையெம்பெருமான்சன்னிதிப்பானுமிவன்பொய்மை யேற்குமோவென்பார். (௬௮)

இன்னவன்கரந்துதணிந்தவனுக வெம்பிரான்றிருத்தடமெய்த, வன்னதுகுருதியாயின மீண்டுமமர்தருங்கோயிலிலரவந், துன்னியோளத்தைச் சுற்றியவதனைற் றளங்குறுமின்னவனன்றி மின்னணியெவரு மெடுத்திலரிவன்போற் சோரராரெனவிளம்பினரே. (௬௯)

எடுத்துறுபணியுமின்னமும்பூணிக ளிவடனக்கீந்துமேயெந்தைக், கடுத்துறுபணியுமணியுமென்பணியுமகற்றியே யவிர்சுடர்ப்பணியும், படித்தவாலயத்தினுறுதிருப்பணியும் பாலித்துப்பணியுறும்போழ்துந், தொடுத்தகந்தரத்திற்சுற்றியபணிதானகனுமோ சொல்லுதிரென்றார். (௫0)

வேறு.

இன்னம்வேண்டும் வசுந்தரையேமுதற்
பன்னெறுதனகாணிக்கை பாலித்துத்
தன்னிலிங்கப்பதிட்டைசமைத்திடி
னென்னமோவறியோமஃதிகப்பதே. (௫க)

என்றுபல்லோரிசைத்த மொழிகளை
யன்றுகேட்டிடு கோனதிரேகித்து
நன்றிந்தப்பதிச் சத்தியெங்நாட்டுள்ளு
மென்றுங்கண்டில னென்னவிம்மாயமே. (௫௨)

இத்தலத்தினி லீசனருண்மிக
வைத்திருப்பதினு லிம்மகிமைபோன்
முத்தலத்து மிலையெனமுன்விழுந்
தொத்தவுண்மைய னாகியுருகினன். (௫௩)

உன்கழுத்தின் விடமுள்ள துன்னியோ
வெண்கழுத்தின் விடவரவேற்றிட்டாய்
நன்கழுத்திக்கடித்துருதில்லி ஞண்
பொன்கழுத்துறச் செய்யெனப்போற்றினன். (௫௪)

கந்தரத்தினி னின்றுமிக்கட்செவி
யந்தரத்தினிற் செல்லவகலுமே
லெந்தரத்தினுக் கேற்றிடப்பூமிபொன்
சுந்தரத்தளிப் பேனெனச்சொற்றனன். (௫௫)

சொற்றலோடுங்களத்தினிற் றன்னல்விட்
டற்றுக்கட்செவி யந்தரமானதான்
மற்றவன்சிவலோக வரதனுக்
குற்றமாமணிப் பூண்களுதவினன். (௫௬)

நித்தியக்கட்டளைக்குறீ நேமிபுஞ்
சித்தியாகவருச்சனை செய்திடக்
கொத்து றாநந்தன மூங்குயிற்றியே
தத்துவத்தினிலிங்கமுந் தாபித்தான். [௫௭)

எந்தையாஞ்சிவலோக விறைவனுக்
கந்திலானமுறை யபிடேகித்து
நந்தலில்லவருச்சனை நன்குற
முந்தியற்றுபுவர்ச்சையை முற்றினன். [௫௮]

வீழ்ந்தனன்றிருத்தாண் மிசைமின்முடி
தாழ்ந்தனன்பர மானந்தஞ்சாரன்பி
ஞழ்ந்தனன்கண் ணருவியிற்றிவினை
போழ்ந்தனன் கிள்ளியென்னும்புரவலன். [௫௯]

பன்னருந்துதி பற்பலகூறியே
யுன்னருந்திகழன்பின் மிக்கூறியே
யென்னருஞ்சிவ லோகவிறைவன்பால்
பின்னருஞ்செயல் யாவையும்பெற்றுளான். (௬0]

ஆண்டுநீங்கி யணிகமலாலயை
[illegible]ண்டவப்பத் நோநதுங்மல்

வேண்டுமர்த்த யாமத்தினின்மேவியே
தூண்டும்பத்தியிற் போற்றுந்தொழும்பினன். (சுக)

நாளுங்கண்டுநற் பத்தியினண்ணின
னாளுஞ்செல்வ மலகில்லெனப்பெற்றே
வாளும்வேலுஞ்செயந்தர மல்கியே
வேளும்போற்றும் விறலினைப்பூண்டனன். (சுஉ)

நேமிசூழ்ந்தபுவியை நெறியினிற்
சேமமாமிகச்செய்ய கோலோச்சிமா
மாமியோடுமருகியு மொன்றுற
நேமியாள்புதல்வன் மகிழ்நீடவே. (சுங)

மாகநாயகன்போன் மிருவாழ்வினிற்
றாகமென்பனயாவையுஞ் சார்தந்து
போகமென்பன முற்றிப்புன்கூரம
ரேகநாதன்டியிணை யெய்தினன். (சுச)

முற்றிற்று.

---

## வீரவிக்கிரமசோழன் பூசித்தபடலச்சுருக்கம்.

---

சூதமகாரிஷியானவர் நைமிசாரண்ணியவாசிகளாகிய மகாரிஷிகளே! கேட்பீர்களாக. உலகின்கண் ணொப்பில்லாதவரென்று சொல்லும்படிச் செங்கோல்செலுத்தி இராச்சியபரிபாலனஞ்செய்த மனுகுலத்திலவதரித்த வேலாயுதபாணியான வீரவிக்கிரமசோழராஜனென்று வாழ்வுற்றிருக்குங்காலத்தில் மகப்பேறின்றி காவிரிநதிதீரத்தி லனேக யாகாதிகளைச்செய்தும் முப்பத்திரண்டு தர்மமும் வழுவாது நடாத்தியும் விரதாதிகளைத்தையுமியற்றியும் புத்திரப்பேறில்லாதவனாய் இத்திருப்புன்கூரெனுந்தலத்தையணுகி அவ்வழி மகிமைகள் யாவற்றையும் வினவித் தூய்மைமிக்க மனமுடையவனாகி இச்சிவலோகேசனைத்தரிசித்துப்பூசனாவிதிகள்புரிந்து மகப்பேறுவேண்டினமையால் சிவலோகேசன்கடாக்ஷத்தால் நல்லபுத்திரனைப்பெற்று அப்புத்திரனுக்குச் சிற்சபாநடேசனென்று நாமகரணமிட்டு அளவில்லாத மனமகிட்சி

யோடு குறைவற்று வாழ்ந்தான். திருப்புன்கூர் மகிமையினால் நாம் மகப்பேறடைந்தோமென்று இத்தலத்தி லிங்கப்பிரதிட்டைசெய்து திரிலோகமும் அதிசயிக்கப் புத்திரனுக்கு முடிகவித்துச் செங்கோலையுங்கொடுத்து மலபரிபாகத்தனாய் சிவலோகேசன் றிருவடிநீழலடைந்தான். அதன்பின்னர் அச்சிற்சபாநடேஜனென்னுஞ்சோழமகாராஜன் வாழ்கின்றநாளில் திருவாரூரின்கண்பொருந்திய தியாகேசர் திருவடியையுஞ் சிற்சபேசன்றிருவடியையுந் தினந்தோறும் அர்த்தயாம தெரிசனைசெய்து வாழும்நியமத்தைப் பூண்டான். இப்படி நிகழும் நாளில் திருப்புன்கூர் க்ஷேத்திர மகிமையைக்கேழ்வியுற்று அஷ்டமங்கலமும் மெதிர்கொள்ள இக்கரஞ்சாரண்ணியம் வந்துசேர்ந்தான். பின்பிதாவரத்தினாலே தான்பிறந்தமையை யெண்ணிச் சிவலோகநாதரைவலம்வந்து நமஸ்கரித்து ஆனந்தபாஷ்பம்பொழிய வணங்கிச் சிவலோகேசரைவேண்டியுஞ் சௌந்தரநாயகி அம்மையையும் அவ்வண்ணம்வணங்கி யோர்மண்டபத்தின்கண் வீற்றிருக்கும்போது அவ்வழி சௌந்தரமென்னும் பெயரையுடைய ஓர் தாசியானவள் அங்குற்றாள். அவளைக்கண்டு இறங்கின துறையில் நீச்சாயினது போல அவள் அழகென்னுங் கடலுள்ஆழ்ந்து கரைகாணாமல் மிகுந்தகவலையுற்று அவள்சென்றநெறியே தான்சென்று அவள் வீடுபுகுந்து அளவில்லாத ஆபரணமும் அளவில்லாதநிதியுங் கொடுத்துத் தனமென்னும் மலைமீதேறி அல்குலென்னுங் கடலிலாழ்ந்து கரைகாணாத மகிழ்ச்சியடைந்தான். அவளைநோக்கிக் கூடிப்பிரியேலெனக் கூறுஞ்சொல்லுக்குப் பொருளை நினைந்துநினைந்து யென்செய்வனென்று ஏ பெண்ணாரமுதே பெண்களுக்கரசே கண்ணார்மணியே கடையுறாஅமுதே நான் உன்னைவிட்டுப்பிரியின் என்னுயிர் தரியேனாதலால் நீ யென்னோடுகூடவரும்படி உன்னுள்ளங் கனிவை. திருவாரூரின்கண் ணெழுந்தருளிய தியாகேசப் பெருமானைக்கண்டு வணங்கிக்கொண்டு யென்னால் கொடுக்கும்படியான திரவியங்களையும் பெற்றுவந்தால் நீ பரவைநாச்சியாரைப்போல அநந்தம்பேர்களுக்கு உதவிபுரியலாம் வேறுமொழி சொல்லாமல் நன்மொழி சொல்லக்கடவை. யென்னலும் அச்சௌந்தரியென்பவள் ஓ அரசே நான் ஒருநாளாகிலும் இத்தலத்தின் தரிசனையை விட்டு நீங்கமாட்டேன். மற்று

த்தலத்தோர் அள்ளிக்கொடுப்பதினும் இந்தத்தலத்தோர் கிள்ளிக்கொடுப்பது போதுமென்று விரதம்பெற்றவளாதலால் பின்வருவதற்கொண்ணுதென்று சொன்னமாத்திரத்தில் அரசன்அயர்ந்து தியங்கித் தென்றிசைநோக்கித் தன்நகரஞ்செல்ல மீண்டேகினன். ஏகினபின்னர் அச்சௌந்தரியென்னுந் தாசி தாம்பூலந்தரித்துக்கொள்ளப் பேழையிருக்கும் உள்புகுந்தாள். புகுந்தஅளவில் இரத்தினபரணங்கள் நெடுநாட் சம்பாதித்து வைத்திருந்த பேழையைக்கண்டமாத்திரத்தில் ஆபரணாதிகளைக்காணமல் மிகமருண்டு உயிரைவிட்டசரீரம்போல வருந்திக் கலங்கித்துயர்க்கடலிலாழ்ந்து அரசன்சென்ற நெறியே தான்சென்றுஅவன்கையைப் பற்றிக்கொண்டு என் ஆபரணங்களையும் வஸ்திரங்களையுங் காணுமையால் கொடுத்துவிட்டுப் போமென்றாள். அரசன் நமக்கொன்றுந் தெரியாதென்ன உன் சேனைகளாகிலும் எடுத்திருக்கவேண்டுமென்று கேட்கஅரசன் நம்மைக்கேட்க வஞ்சிச் சேனைகள்மேற் சொல்லுகிறாளென்று ஏ கணிகையே உன் தனத்தைக் கைப்பற்றினதல்லதுபெட்டித்தனத்தைக் கைப்பற்றிலோமென்றான். பேழையிருந்தவிடமு மறியோமென்றான். அப்போதுகணிகை நீ திருப்புன்கூரையடைந்து சன்னிதிப் படித்துறையில்மூழ்கிச் சபதஞ்செய்தாலன்றி விடேனென்ன உடன் அரசன்வந்து இந்திரதீர்த்தக்கரையில் வந்துநின்றவளவில் அத்தீர்த்தமுழுதும் மாயமாய் இரத்தமாய் இருந்தவிதத்தை யறிந்து அதில்மூழ்காணுகிச் சிவலோகநாதர் சன்னிதானஞ்சென்றுபலிபீடத்தின் பக்கத்தில் நின்று சத்தியமாய்ச்சொல்வன். இவளது ஆபரண மிருந்த பெட்டியையுங்காணேன் ஆபரணங்களையுங் காணேனென்ன. உடனே இருபுறங்களிலுமுள்ள துவாரபாலகரிருவரில் ஒருவன் சர்ப்பமாயிருப்ப மற்றொருவன் கெருடவடிவமாகி அப்பாம்பை யெடுத்து அரசன் கழுத்திலிட அது சுற்றிக்கொள்ள அவ்வரசன் பயமுற்று நடுங்கிநிற்குமளவில் சகலரும்பார்த்து இவ்வரசனைத்தவிர யெடுத்தவரொருவருமில்லை ஏன் இந்தஆசை இவருக்கு எந்தவிதத்தாலும் இப்பழிநீங்காது யென்னுமளவில் அரசன் சிவலோகநாதரைநோக்கி யென்னையனே என்கழுத்திலுற்ற சற்பமானது யென்னைவிட்டகலுமேயாயின் உமக்குவேண்டிய பொன் பூமி தருவனென்றான். என்றமாத்திரத்தில் அந்த

சர்ப்பமானது நீங்கலும் அரசன்மிகமகிழ்ந்து கவலையற்று எங்கோமானுக்குவேண்டிய இரத்தினாபரணமும் நித்தியப்படிக்கட்டளைக்குப் பூமியுங் கொடுத்து நந்தவனமுமியற்றி இலிங்கஸ்தாபனமும் நாகப்பிரதிஷ்டையுஞ் செய்து சிவலோகநாதருக்கு அபிஷேகாதி அர்ச்சனை பூசனாதிகளுஞ் செய்து வணங்கித்தோத்திரஞ்செய்து வேண்டியவரங்களைப் பெற்றுக்கொண்டு தனது பதியையடைந்தவனாயினான்.

சருக்கம் முற்றிற்று.

---

## விறன்மிண்டநாயனார் பூசித்தபடலம்.

---

திறன்விண்டிடும்படிக்கொள் ளொளிர்வேலைநிறுவனூறு
மறன்விண்டிடாவீரவிக்கிரமன் கதைவகுத்த
மறன்மிண்டிடுங்கருத்தினா னடியார்க்கடியரெனும்
விறன்மிண்டரெனும் பெரியர்காதையினைவிளம்புதுமால். (க)

அலையாளம்புயத்தமர வாவிதொறுமமர்ந்துமே
கலையாளம்புயத்தகலா திருவென்னக்கலவுற்ற
சிலையாளம்புயப்பரசி ராமனுறைசெவ்வித்தா
மலையாளம்புயனீங்கா தெனுநாடுவயங்குறுமால். (உ)

அந்நாடுதலைவணங்க வணிமுகமாயமைவுறுமா
லிந்நாடும்பொன்னாடு மென்நாடுமிறைஞ்சயணிந்த
மின்னாடுமிடைமடவார் முலைக்குவமைவேண்டுறினே
சொன்னாடும்புலவரெனைச் சொல்வரெனுஞ்செங்குன்றூர். (ங)

அத்தலத்தின்மேழிவேளாளர் குலத்தவதரித்துப்
பத்திபொறைவாய்மையெலா மோருருக்கொள்பான்மையா
யுத்தமோத்தமமான வடியவரென்றேயுரைப்பச்
சித்தமெலாமரனடிக்கு மடியவர்க்குஞ்செலுத்துறுவார். (ச)

நீறணிந்துகண்டிகையை யணிதந்தநேயத்தா
ராறணிந்தசிவபெருமா னடிபிரியாவகத்தினா
ரேறணிந்தேசிவநிந்தைபுரிபவரை யொறுப்பதினால்
வீறணிந்தவிறன்மிண்டரெனு நாமமேவுற்றார், (ரு)

தன்பதியையொருவியருள் தரும்பதிகள்பலசார்ந்து
தென்பொதிகைசேர்கூட லாதியவைசேவித்துப்
பொன்பொதியைக் கமலாலயந்தருபுராணதலத்
தின்பதிந்தேயமர்வுற்றேயெய்தினார் சின்னாளே. (௬)

வாரூருந்தனப்பரவை பாலணுகிமருவுற்றே
யாரூரின்சினகரத்தே வாசிரியமண்டபக்கண்
ணாரூரர்தன்றோழ ரணைவுறுதகன்றமைகண்
டேரூராய்த்திரிந்தவர்தஞ் செய்கையிற்றேறுவெனவுளைந்து. (௭)

அப்பதியைச்சினந்தவராய்க் கரஞ்சவளமணுகியே
மெய்ப்பதியீதென்றருகிமேய கதிபெறுவமென
வெப்பதியுமிதற்கிணையோ வென்னவிருகயமாடித்
துப்பதிகமொளிர்மெய்யோ னர்ச்சைதனைத்தொடங்குற்றான். ()

வேறு.

எங்கணுதற்கபிடேக மேய்வன
புங்கமாகப்புரிந்து புரிவன
வங்கமாகமலரி னருச்சனை
பொங்கவாற்றிப் பொற்றாண்மலர்போற்றியே. (௯)

அன்பதேயுரு வானவனன்றியு
மன்பருக்கருள் செய்பவனுதலா
லன்பிலாதவர் தம்மையகல்வனே
லன்பையன்றி யொன்றுகுங்கொலோவென. (௧௦)

வீழ்ந்தனன்படிமீது மெலிவுற்றே
தாழ்ந்தனன்சரணஞ் சரணம்மென
வாழ்ந்தனன் சின்மயத்தினமைவுறப்
போழ்ந்தனன்வினை யாவையும்போக்கியே. (௧௧)

வீயுமட்டும்வினை வசமேவுறி
னேயுறுந்தமியே னெவ்வணத்துய்வேன்
காயமேயொருகா லிற்கனியதாந்
தீயனேற்கஃதில் லெனிற்செய்வதென். (௧௨)

உன்வசப்படுமி யாவுமிங்கோர்ந்திடி
னென்வசப்படலொன்று மிங்கில்லையால்
மன்வசப்படுவா ருலகோர்மண்ணிற்
றன்வசப்படலியாரிங்கு சாற்றுவாய். (கங)

எங்கடேவவிறைவ சரணமே
திங்கள்சூடிய செல்வசரணமே
பங்கநீக்கும் பரமசரணமே
யிங்குகாத்தரு ளென்னைசரணமே. (கச)

ஏகநாயகவெம்மோய்சரணமே
நாகநாயகநாதசரணமே
தோகைநாயகதூயசரணமே
யாகமேவியவன்பசரணமே. (கரு)

வேறு.

என்றுரைபலவுமாடியினியதாங், கருணைபெற்று
நின்றிலிங்கப்பதிட்டை நேயமிக்குறக்குயிற்றி
யொன்றுறவாவிதொட்டே சிவகங்கையெனவுரைத்து
நின்றுறுமியோகமுற்று நேர்ந்தனராவையின்கண். (க௬)

முற்றிற்று.

---

## விறன்மிண்டநாயனார்பூசித்த படலச்சுருக்கம்.

---

ஓ நைமிசாரண்ணியவாசிகளான மகரிஷிகளே! கேட்பீர்களாக. மலையாளதேயத்திற் செங்குன்றூரென்னுந் தலத்தில், வேளாளர்குலத்தி லவதரித்த விறன்மிண்டநாயனாரென்னுந் திருநாமம்பெற்றவர், சிவநேயமும், அடியவர்நேயமும் மிக்குள்ளவர். அனேகதலங்களைத் தெரிசிக்க வெழுந்தருளிப் பலதலங்கடோறுஞ்சென்று திருவாரூரடைந்து வாசமாயுறையுநாளில், தேவாசிரியமண்டபத்தின்கண் அணையாது சென்ற சுந்தரமூர்த்திசுவாமிகள்மீது மிகுந்த சீற்றங்கொண்டு, இத்தகையர்க்குத் தியாகேசர் தூதுசென்றமையால், இவ்விருவர்களுந்

தகைமையுடையவர்க ளென்றென்று அத்தலத்தைவிட்டொழித்து, திருப்புன்கூரென்னுந் திவ்வியக்ஷேத்திரம் வந்தடைந்துதீர்த்தமாடிச், சிவலோகநாதரைப்பூசித்து அத்தலத்தில் இலிங்கப்பிரதிட்டைசெய்து,சிவகெங்கையென்னுந் தீர்த்தமுண்டுபண்ணியோகமார்க்கமாய்த் தவமியற்றி அத்தலத்தின்கண்ணே வாசஸ்தானமாக மேவினவரானார்.

சருக்கம் முற்றிற்று

## நந்தனார்பூசித்தபடலம்.

தேரோட்டமிக்கவிழாச் சிறப்பெல்லாஞ்செறிந்திலங்கு
நீரோட்டமிகும்பொன்னி வளநாட்டுணிகழ்மள்ளர்
காரோட்டமெனமேதிதமைத் தெழித்துக்கமுனியெலா
மேரோட்டக்கரும்பொடித் திங்கெங்கெங்குமீண்டிவரால். (க)

நாற்காவதங்கமழுநறு மலர்வாவிப்பதியைப்
போற்காணிலுளதேயோ புவனமொருமூன்றினுமே
தோற்காதோவிதற்கெதிரிலெனப் புலவோர்துதிமலிந்த
மேற்காநாட்டாதனூரென்னவொருபதிவிளங்கும். (உ)

விடையாளும்பரமனடித் துணைமலர்க்குவிருப்பமிலாக்
கடையாளர்தமக்கெல்லாங் கருதுபெருஞ்செவ்வியளித்
திடையாளும்படிக்கருளை யீயவேயெழுந்தருளு
மடையாளர்பதிப்பெருமை யாவரேயறைகுவரே. (ந)

மைக்குழுவினிலவனு றுமின்னெனவ்வளர்கருங்கான்
மிக்குறுமப்பள்ளர்குலம்விளங்க வுறுமேதக்கோ
னெக்குலமுமிவரவதாரஞ் செய்குலத்தினையேத்த
சொற்குலவுநந்தனெனு நாமந்தோன்றுற்றார். (ச)

இனத்தியல்பாமறிவென்ப தென்னுமொழிக்கெதிராக
மனத்திழுக்குவாய்ந்தகுலத் தவதரித்துமாசற்றார்
தனத்திலுறுவெறுப்புமரன் றாண்மலரின்மிக்கன்பு
மனத்தியல்பின்வளர்தரவே மகியதனின்வளர்வுற்றார். (ரு)

பிறையணியும்பெருமான்றண் மலர்க்கண்டு பெறுகிலரேன்
மறையவரும்பறையவரா மாற்கண்டு மருவுவரேற்
பறையவருமறையவரா மெனும்பெரியர் பழமொழிக்கு
மறையவரும்வணங்குபவ ரெனல்சான்றாய்வளர்ந்தனரால். (௬)

முளையிலேமருக்கொழுந்து மிக்கமணமொய்த்தறல்போற்
றளையிலேயுழலாமற் றறுகண்முதலவையென்னுங்
களையினேதமதகன்று களங்கமறுசிவமென்னும்
விளைவிலைபிறந்தநாண்முதற் றொண்டின்விழைந்தனரால். (௭)

கங்கைமதிசடைக்கரந்த கடவுள்சினகரத்தினுக்கிங்
கெங்குமுரசொடுபலவா மியங்களுக்குவேண்டுவன
மங்குமானுரிசரும வகையளித்தேயருச்சனைக்குப்
பொங்குகோரோசனையைச் சென்றளிக்கும்புலமையினர். (௮)

இவ்வகையதொண்டுஞற்றி யடியரையங்கெதிர்கண்டா
னவ்வியுறுகரத்தெந்தை நாதனைக்கண்டாலென்னச்
செவ்வியுறவலம்வந்தே திருந்தன்புமச்சமுமாய்க்
குவ்வியுறுமனத்தினரா யடிபணியுங்கொள்கையுற்றார். (௯)

எல்லிரவியிரவிருளை யிரிப்பதுபோலிரங்குற்று
வல்லையினிற்பழவினை தீர்த்தருளுமெனுமாண்போடே
யெல்லையிலாமகிமைபெறு திருப்புன்கூரெனும்பதியிற்
சொல்லவொண்ணாவருட் பெருக்கினதிரேகஞ்சொலக்கேட்டு. [ ]

அப்பதியையெய்தியெந்தை யருட்பெருக்கையாய்ந்தே
யொப்பதிகமில்லானைச் சந்நிதிமேலுறவணங்கிச்
சொற்பதிகம்பாடி வரமடைவனெனச்சூட்சியுற்று
மெய்ப்பதியாந் திருப்புன்கூரெனும்பதியைமேவினரால். (௧௧)

மேதினியிற்பெருங்கருணைத் திருப்புன்கூர்மேதகைபோ
லேதினியென்றேயீறி லன்புவகையெய்திப்பூ
மாதினிமைகொளுமிந்தத் தலத்தின்சீர்வாய்ந்தறியாக்
காதினிதோதோற்காது தோளாக்காதெனக்கரைவார். (௧௨)

நலக்கருமமுற்றோர்க ணாயகனையேநண்ணித்
துலக்கமுறக்காணாத கண்ணெல்லாஞ்சொலும்புண்கண்

ணிலக்கணமுமிலக்கியமு மிருந்திடினுங்குவியாத
வுலக்கைபயனடையாத வுலக்கையதற்கொப்பாமால். (கங)

சலம்வராத்தன்மையராய்ச் சாந்தகுணம்போந்தவராய்ப்
புலம்வராச்செயலெல்லாம் பொதிந்துறையும்புந்தியராய்க்
கிலம்வராதாண்டருளக் கெழுமியவர்சினகரத்து
வலம்வராககால்கொடிக்கால் வாய்க்காலம்மரக்காலே. (கச)

வேயாருந்திவளிதோளி சௌந்தரநாயகியெனுமித்
தாயாரைச்சிவலோகத் தம்மானைத்தனித்தனியே
நேயாரும்படியடிமை யாக்குவரென்றேநின்றே
வாயாரத்துதியாது வாய்நாவாய்மடைவாயே. [கரு]

கரவாதமெய்யன்பி னடியார்க்குக்கண்ணருவி
சுரவாதபெருங்கருணை சுரந்தருளத்தோன்றிநம்முன்
வரவாதவூரரெனப்பெம்மான்றன் மலர்ச்சரணைப்
பரவாததலைமதலைகுதலையெனுந் தலைபகர்வார். [கசு]

வேறு.

அந்திசந்தியு மண்ணுருட்டுணைமலரதனை
நைந்திறைஞ்சிபுநாதனைக் காணுணைமையினே
நந்திநாதன்வான் முகடுறவளர்ந்துநண்ணுதலான்
முந்தியற்றியபாவமெற் றேவெனமொழிந்து, [கஎ)

எந்தையேசிவலோக நாயகனெனுமிறையே
சிந்தைநோயளப்பரியதை யிலதெனச்செப்ப
வந்தமாவதோ வடியன்செய்பளகளப்பறுமோ
நந்திநாதனின்றனை மறைப்புற்றிடுகலிவால். (கஅ]

தண்டையோடுபல்லணி மெய்யிற்றுங்கியே காமம்
பண்டைநாடரக் காமதேனுக்கிப்பாலாற்றைத்
தொண்டைநாட்டினிற் றந்திடநின்றதோற்றத்துக்
குண்டைபோலெழிலுற்றடைந் ததையென்னேகுறிப்பாம்

படைசெய்வாணயனத்தெம்மோய் பாகமார்கொன்றைத்
தொடைசெய்வேணியெம் மானைக்காணுத்துயர்தோன்ற
வடைசெய்பாலனமயிலுறு மமயங்கைப்பற்றித் [ப்பாம்
தடைசெய்தாலெனத் தடைசெயும்விடையையென்றங்க

கொடியனுமமணக்குழாத் திறைவன்கூடலையே
படியின்மீதழித்திட மகம்புரிந்துய்த்தயசுவைச்
செடியினேசினந்தழித்த சேவெனச்செறிதலினு
லடியன்மீதினுஞ்சினமுண்டோ வறைகுவையமலா. [௨௧]

தறையின்மீக்கொடும்பாவியை நோக்குறறடுத்தே
யிறைவனந்திதானின்றிட லிற்றெனக்கிளப்பின்
மறையெனத்திருவுளப்படி மறைத்ததோவன்றேற்
பறையெனுமறைத்தத் கொலோவெனப்பகர்ந்துற்றே. [ ]

இடும்பைகூர்தர விருகணீரருவிவார்ந்திடவே
குடந்தம்பட்டுளநைவினற் புரம்வலங்கொண்டே
யடர்ந்துபாடிவராடிவ ரென்புநெக்காங்கே
கிடந்துவீதியினலறுவருலருவர்கெழுமி. [௨௩)

கன்றுமிக்குறக்கதறுதல் காணுமோதொறுத்தான்
சென்றணைந்துபாலளித்திடு முறைமையைச்சிவணத்
தொன்றுதொட்டடியவர் குறையினைத்தொலைத்திடலா
லென்றுமேயருட்கடலெனு நாமமதியைந்தான். (௨௪)

சென்னிதானவன் பாலிரந்திடவருள்செய்தோன்
முன்னதாகியகுண்டையை முகமனினோக்கிச்
சன்னிதானத்தைக்காட்டெனச் சாற்றலுந்தகைசா
னன்னிதானமா யுத்தரத்தொதுங்குபுநண்ண. [௨௫]

நண்ணவுமெங்கணுதனைக் கண்டுளநைந்தே
கண்ணினீர்மிகக்கம்பலை மீக்கொளக்கருத்தி
னண்ணுறுமுவகைப்பெரும் பரவையினாழ்ந்தென்
புண்ணியம்பெற்றே னென்னவேநந்தனார்புகழ்வார். (௨௬)

அன்றுதான்பொன்னுக்கொளித்தவன் றலத்திற்சேவதுதான்
றன்றுநாவலூரார்க் கியம்பாமலேசொல்லி
யின்றுமுத்தரநோக்கலா லிங்குமிஃதெனலா
லென்றுமேயடியவர்க் கெளிதினிற்றருமினிமை. (௨௭)

நாடினுரைநீர்பாடுமினெனு நந்தனார்தாம்
வாடினரதற்கிரட்டிய துவகையுள்மன்னிக்

கூடினார்கண்ணுளுண்பவர் போற்கண்டுகொண்டே
யாடினார்மறுகோடினு ரானந்தத்தாழ்ந்தார். (௨௮)

மீட்டும்வீழ்ந்தன ரிலேகருக்கரியமேதகைசேர்
தீட்டருந்திருமேனியைத் திருக்கடையேற்குக்
காட்டுறும்படிக்கருள் புரிந்தானெனக்களித்தே
மோட்டுறும்பதமலரிணை யிறைஞ்சுபுமொழிவார். (௨௯)

வேறு.

அடியர்தங்குறைவுதீர்த்தாண் டருள்பரம்பொருளேபோற்றி
நெடியவன்மலரோன்றேட நீண்டருணிமலாபோற்றி [றி
கொடியனேன் றனை யெள்ளாமற்கொண்டருள்குழகாபோற்
பொடியணிமேனிகாட்டும் புண்ணியப்பொருளேபோற்றி.

அம்மைதன்னையுமிவ்வண்ணம் வணங்கியேயன்புளோரை
வம்மினென்றழைத்துவந்து மகிபுகழ்தலத்தின்கண்ணே
பொம்மியேசினகரத்தின் குடக்கினிற்பொருந்துகோட்ட
மிம்மெனுமளவுமில்லா திசையுறத்தொட்டாரம்மா. (௩௧)

அண்டமூலத்துக்கப்பா லாழிவந்துதித்ததென்னத்
தெண்டிரைக்கடல்களெல்லாம் வாவியின்செய்யதானை
யண்டியேநாளும்போற்ற வாழ்பூமகலந்தானுங்
கண்டவருளரோவென்னத் தொட்டனர்கரையிலாதார். ()

அனந்தனையேறுவோனு மண்டருக்கரசன்றானு
மனந்தனிற்களைவுநீங்க வந்திறைஞ்சுற்றுரென்றக்
கனந்தனைத்தானுமெண்ணிக் கறைமிடற்றண்ணறானை
யனந்தன்வந்திறைஞ்சிச்செல்லு மதரெனப்பட்டதம்மா.()

தோட்டுறுவாவிதன்னிற் சூழுலகிடைவாழ்தீர்த்தக்
கோட்டமுமன்பர்போற்றக் குலவுறுமீசனெம்மா
னாட்டமூன்றுடையான் சென்னிக்கங்கையுநதிகள்யாவு
மாட்டத்தாற்புனிதமாயி னிதன்பயனளக்கப்பாற்றே. ௩௪

வேறு.

வருநாளுக்குணிக்குங்காலத்தே மனுநின்கண்
கருநாளைக்கு வாராமைக்கேகளிதில்லைத்

திருநாளைக்காணுறவே யெண்ணுன்செயலாலே
திருநாளைப்போவாரெனு நாமஞ்சேர்வுற்ருர். (௩௫)

பொன்னம்பலமேவுற்றே நடனம்புரிகின்ற
வன்னம்பலநாள்காணு தெய்க்குமம்மானைத்
தன்னம்பலவுங் குறையும்படியேதான்காணு
தின்னம்பலநாட் சென்ருலென்செய்வேனென்ருன். (௩௬)

என்ருமுன்னமடியா ரெண்ணமீடேற்ற
வன்ருர் துயிலின்கனவின் கண்ணேயமருற்றே
மூன்ரும்வந்தே முத்தியளிப்போமூதாரி
லென்ருவென்ரு யகனுஞ்சொன்ருரின்புற்றே. (௩௭)

சென்ருர்தில்லைப் பதிமேவுற்றேசிகரத்தை
யொன்ருமுணர்வோடுற்றே காணுவுருகுற்றே
பின்ருவண்ணம் வீழ்ந்தார்தாழ்ந்தார்பேதுற்ருர்
நின்ருரன்ஞர்செய்கையை யாரேநிகழ்கிற்பார். (௩௮)

குலம்வந்துற்றகோளுக் கஞ்சிக்கொடியேற்குன்
றலம்வந்துற்ற தமியேன்றன்னைத் தாங்காயே
லலம்வந்துற்றே யயர்வே ளைவமையென்றே
வலம்வந்துற்றே மறுகின்கண்ணேமறுகுற்ருர். (௩௯)

இந்தியைவேணிச்சிவலோகப்பே ரெம்மானே
நந்தியைநீக்கி நின்சந்நிதியைநான்காண
வந்தியைவிந்தா யிப்பதி நின்வாழ்வினைநோக்கத்
தந்தியைவிந்தா லென்பிழையாமோ சாற்ருயே. (௪௦)

என்னைப்பொருளா வென்கனவின்கண்ணேயுற்றே
யன்னைக்கிணையா யருள்வேனென்றேயருளுற்ருய்
பின்னைப்பொருவும் வேணிப்பெருமவிரளுற்ரு
லுன்னைப்போல்யார் தமியேற்குதவுவருரையாயே. (௪௧)

என்றேபலவாயேத்திப்போற்றி யெம்மானை
நன்றேதருவா யென்றேகேழ்ப்பநாதன்ரு
னன்றேமறையோர்தங்கனவின்கண்ணுறைகூவிச்
சென்றேயழைமினென்றே யோருரைசெய்வானல். [௪௨]

என்னப்புகலப்பழமறையோர்க ளிறும்பூதாய்ப்
பின்னற்பிறையெம்மம்மான் மொழியைப்பேசுற்றே
அன்னற்பாகோமதுரக்கனியோ கண்டோவென்
றுன்னிப்பலரும் பன்னிக்களிகூர்வுற்றாரே. (௪௩)

அந்தணர்யாருமொருங்கு குழீஇக்கொண்டத்தில்லை
வந்தணுகுற்ற திருநாளைப்போ வார்தம்மைச்
செந்தணன்மூட்டி மூழ்கியழைக்கச் செய்தாரா
லெந்தைபிரானென் றறைகூவக் கேட்டிதுசொல்வார் (௪௪)

அடியேன்மீது மெங்கோமானுக்கருள்வந்து
கொடியேன்றன்னைக் கூவினர்கொல்லோகோதான
படிமீதுற்றகால்வாய் நீரைப்பாராதே
கடியாதேற்குங் கடல்போற் கருணைக்கடலாரே. (௪௫)

என்றுரையாடுறுமெல்லையி னெல்லையினெரிமூட்டி
நின்றுபுகழ்ந்துறுமந்தணர் யாருமொருங்குற்றே
மன்றுணின்றாடியபெருமான் றிருவாய்மலர்தந்தே
யின்றுரைபாடியபடியனன் மூழ்கியெழுமென்றார். (௪௬)

வேறு.

பாம்பரையணிந்திலங்கும் புரஞ்சுடர்திருத்தாடன்னை
யோம்பலாற்கரங்கள்கூப்பிச் சென்னிகொண்டுள்ளத்துள்ளே
யாம்பரசிவத்துக்கொப்பா மக்கினிமூழ்கியங்கண்
டாம்பரனடியைப்பெற்றார் போலயல்சார்ந்துநின்றார். (௪௭)

இவ்வணங்கண்டோர்யாரு மீறிலாவிறும்பூதெய்தக்
கைவ்வணக்கத்தினோடு கம்பலையுடன்புகழ்ந்து
செவ்வணமேனியெம்மா னிவரெனத்தேர்ந்தேயேத்திப்
பைவ்வணமணந்தனுக்கும் பகர்வொணாப்பெருமைபெற்றார். ()

மறையவர்குழாங்களுக்கு வாழ்த்தொலி மிகவுண்டாகி
நிறையதிசேகமாகிநிகரிலாப் பெரியர்தம்மை
யிறையுமேநிலாதுபற்றி யிண்டைவாழ்வோன்மாறேடும்
பிறையணிவேணியெம்மான் முன்புகொண்டுய்க்கப்பெற்றார்.

தாமரைத்தடநீர்போலத் தணலினின்மூழ்கிநேரை
யேமுறிக்கரத்தர்முன்னே யீண்டுறச்செயலுமெம்மா

னாமரைக்கணமுந்தங்கா தவிர்தருஞ்சோதியாக்கி
நாமமில்வடிவாந்தன்பானண்ணி யின்புறச்செய்தானால். (௬௬)

முற்றிற்று.

---

## நந்தனார்பூசித்தபடலச்சருக்கம்.

---

சூதமகரிஷியானவர் நைமிசாரண்ணியவாசிகளை விளித்துக் கேட்பீர்களாக! முன்னொருக்கால் கொள்ளிடக்கரையின் பக்கத்திலுள்ள மேற்காநாட்டாதனூர் என்னுந்தலத்தில் பஞ்சமஜாதியி லுற்பவித்த நந்தனாரென்னுந் திருநாமம்பெற்ற நாயனாரென்பவர் தினந்தோறும் ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து உருத்திராக்ஷமாலைபூண்டு சிவபத்தியுஞ் சிவனடியார்பக்தியு மிக்குள்ளவராய் ஆலயங்களுக்கு வாத்தியமுதலியன கருவிகளுக்குச் சருமமும், அபிஷேகத்திற்கு கோரோசனையுஞ் சம்பாரித்துக் கொடுத்து, ஆலயங்கடோறுஞ் சென்று மெய்யன்புடன் வணங்கிவருநாளில், திருப்புன்கூரென்னும் மகாக்ஷேத்திரத்தைத் தரிசிக்கவந்தனர். அவ்வாலயத்தின் கண்ணே அதிகாத்திரசரீரமுள்ள நந்திகேசுவரரால் சந்நிதானம் மறைந்திருப்பது கண்டு என்செய்வேனென்று ஏக்கமுற்று மனமுருகி கடவுளைத்தரிசிக்கக் கூடவில்லையேயென்று வருத்தமுற்றிருந்தனர். அப்பொழுது சிவலோகேசர் வசவண்ணரை நோக்கி "சற்றேவிலகுக" வென்றாக்ஞாபிக்க, உடனேவிலகலும், நந்தனார்கடவுளைக்கண்டு ப்ரமானந்தபரவசமாய் ஆநந்தபாஷ்பம் பொழிந்து நடனமாடிவலம் வந்தனர். பின்னர் அவ்வாலயத்தின் பச்சிமதிசையிலுள்ள இடபதீர்த்தத்தை ஆழமாகவெட்டிச் சீர்படுத்தி அங்குப்பலநாள் வசித்துவந்தனர். அதன்பிறகு தில்லைக் கேகவேண்டுமென்னும் அவாவுள்ளவராய் "நாளைப்போவோம் நாளைப்போவோம்" என்றிருந்தமைபற்றி "திருநாளைப்போவா" ரென்னு நாமமெய்திச் சிதம்பரமென்னும் மகாக்ஷேத்திரத்தை யடைந்து வலம்வந்து ஸ்ரீநடராஜப்பெருமானைக் கண்டுதரிசிக்க வழிகாணாது வருத்தமுற்று மெய்வருந்தி மெலிந்தனர். அதைநோக்கி ஸ்ரீஆனந்தநடராஜமூர்த்தி அன்பருக்கிரங்கி, தில்லைவாழந்தணர்கள் சொற்பனத்திலெழுந்தருளி "நம்மெய்யடிமையுள்ள பக்தன் நந்தனாரெ

ன்பவரை அக்கினியில் மூழ்கச்செய்து அழைத்துக்கொண்டு வாருங்க" ளென்றருளிச்செய்ய, அப்பொழுதுயாவரும் ஆச்சரியமடைந்து அங்ஙனமேபோய் அவ்வண்ணமே யழைத்துக் கொண்டுவந்தனர். நந்தனார் அய்யனரு ளிவ்வண்ண மிருந்ததா வென்று வியந்து கனகசபையைநாடி ஆனந்தநடனங்கண்டு ஜோதிமயமானவரானார்.

சருக்கமுற்றிற்று.

## ஏயர்கோன்கலிக்காமநாயனார்பூசித்தபடலம்.

திகழ்வுறுந்திருப்புன்கூர்வா ணிமலனார்திருத்தாள்சேர்ந்து
மகிழ்தருநந்தனார்தஞ் செய்தியைவாய்ப்பச்சொற்று
மிகழ்தருநாவலூர ரானவிவுற்றின்புற்றுப்
புகழ்கலிக்கம்பநாய னார்திறம்புகலுகிற்பாம். [க]

கடலுடைமாதினுக்குக் கமலமாமுகமோகண்ணோ
வடலுடைமாலைசூடுஞ் சென்னியோமருமந்தானோ
வுடலுடைக்களமோவன்றி யுயிரினதுறையுடாளோ
வடலுடைக்கொங்கையோ வென்றமழகுறுஞ்சோழநாட்டுள். (உ)

ஒப்பருமழகிருந்தென் னுயர்பணிபலவிருந்தென்
றப்பருமங்கலத்தி னென்றினுற் றகையாம்போல
விப்பெருமங்கலப்பேர்ப் புரிகழுத்தெய்தலாலே
செப்பரும்புவிமாதென்றுஞ் சீருடன்வாழ்வளம்மா. (ங)

மங்கலமென்றுசொல்லன் மனைமாட்சிமற்றதங்க
ணங்கலநன்மக்கட்பே றென்னவேநாயனார்முன்
பிங்கலம்போன்றுரைத்த பெயர்ப்பெருமங்கலத்திற்
றங்கலமென்றுசெய்யா ளகல்வளோதான்வாழ்வாளால். (ச)

இப்பெருமங்கலத்தை யெய்தலினாலேயன்றோ
செப்பருங்கமலமேவுஞ் செந்திருமகளென்பாடான்
முப்பெரும்புவனத்துள்ள மொழிதருமடவார்க்கெல்லாந்
தப்பருமங்கலந்தானென்னவே தழைந்துற்றாள். (ரு)

முப்புவனத்திற்செங்கோன் முறையுறவோச்சிநின்ற
செப்புறும்புகழ்கொள்சேரசோழ பாண்டியராச்செப்பு
மப்பெருமூவருக்கு மமைச்சராயுற்றூரன்றே
யிப்பெருமங்கலந்தானவர்க்கே தென்றிசைத்தார்யாரும். (சா)

பூதலாதிபர்க்குவேண்டும் புத்திசொல்லமைச்சரெண்ணி
லோதலாநூலோரான டேகெடுமென்பேரோர்வ
ரீதலாகாமையாலே வசியர்கள்புகழையெய்தா
ராதலாலமைச்சர்மேழி யுடையவரென்றாளவ்வை. (எ)

ஆழிசூழுலகின்கண்ணே யமைச்சராயமருநாளில்
வாழியமுகிலைப்போகிக் களித்திடும்வண்மையாலே
பாழிகொள்கமுகுகன்னற்கதலி நெற்பயன்கொடெங்கு
மேழியின்கொடியும்பெற்று விளங்குவரேந்தனொன்றும். (அ)

ஆயவிப்பதியின்கண்ணே யமரும்வேளாளர்தம்மி
லேயுநன்கமையுமிக்க வேயர்கோன்குடிவிளங்கத்
தூயசுந்தரர்திருத்தொண்டத் தொகையிற்சேர்ந்தொன்று
நாயகக்கலிக்கம்பப்பேர் நாயனார்நண்ணினூரால். (கூ)

பதிதிருப்புன்கூரைத் தம்பதியெனப் பரிவின்வாழ்வர்
முதிர்திருப்பணிகள்செய்தறவ மெனமுயன்றுய்வாரா [வர்
னுதிகொள்செங்கோலே நோன்பின்செயலெனநொறிலாய்க்கொள்
நிதியெலாஞ்சிவலோகத்தெம் மானடிக்கென்னநேர்வர். (க0)

நீதுவிட்டகன்றோர்தாமே முத்தியைச்சேருவாரென்
றேதுவிட்டுரைத்தவீதி விடங்கராமெங்கோமானை
மாதுவிட்டுறுதுநேயம் வரும்படியவண்மனைக்கே
தூதுவிட்டனுப்பினுரென் றுரைக்குனர்சொல்லக்கேட்டு. (கக)

அரகரவரகராசம்போ சங்கராமிக்கான்ற
புரகரநீலகண்டபுனிதனே யென்றரற்றி
யெரியுறுமெழுகேயென்ன வென்புநெக்குருகிவெம்பி
யிருகரகமலத்தாலே யிருசெவிபொத்தியேங்கி. (கஉ)

விகாதம்வேறுண்டோ மாலும்பிரமனுமேலுங்கீழும்
புகாவிடம்புக்குங்காணு வடிமுடியிரண்டைப்போகத்

தகாதவண்பனேவாயின்கீழ் மேற்படிதாங்காண்டற்குத்
தகாதகாரியத்திற்குய்த்தா ரென்றுளந்தயங்கிநொந்து. (கங)

பாவையர்தம்மிற்றாழ்ந்த கணிகையாம்பரவைபாலே
மூவர்தம்முதல்வனை முக்கணெங்கோமான்றன்னைக்
கேவலமாகவெண்ணிக் கிடைத்திடுமேலுவனக
வேவினர்தம்மைக்காணி லெண்படுவாரோவென்ன. (கச)

வரவரச்சினத்தீப்பொங்கி வரையிலாவுளத்தான
தரமதைநாவலூரா ரிப்பெருந்தகையோர்கேட்டு
வரவரமனமுளைந்து வள்ளலார்தம்பாற்சென்று
நரநரப்பதனையெல்லா நவின்றுளார்நன்மையாக்க. (கரு)

அடைவிலராகிவேறு யுறினிவர்க்கன்பதாமோ
தடையிலராகிநட்பாவீரெனச் சாற்றக்கேளா
ரடைகலிலடித்தடித்தே யழுக்கைநீக்குறுமாறென்ன
விடையிடையூறென்று னட்பெய்துவரென்பதெண்ணி. (கசு)

ஏலியுறக்காணுறாதே யெய்தராபற்றலென்னப்
புலிவனச்சுரபிதன்னைப் போய்க்கொளுமாறுபோல
வலியுறு தூண்டிலாலே மயிலையைப்பற்றல்போலு
மலியுறுசூலைநோயை வயிற்றினுள்விடுத்தார்மன்னே. (கஎ)

ஏன்பிலாக்கீடம்வெய்ய தழலிடையேய்ந்தென்னப்
பின்பெலாக்குடருமீர்த்துத் துடக்கியேமுடக்கிப்பின்னித்
துன்பெலாமொன்றியொன்று யடைந்தெனத்துளக்கலாலே
பொன்குலாஞ்சிவலோகத்தெம் மானடிபோற்றிசெய்து. (கஅ)

பித்தனேயென்றுவைய்து பிச்சைநீயெடுக்கச்செய்து
கைத்த § னேகத்தைவாங்கிக் கணிகைபாறாதுசெல்ல
வைத்தனேகங்குற்றத்தை மன்னினோனல்லனேயோ
பத்தனென்றனையிவ்வாறு படுப்பையோவென்றுபோற்றி. (கசு)

கல்லினாலடித்தபேர்க்குங் காலினாலுதைத்தபேர்க்கும்
வில்லினாலடித்தபேர்க்கு மேற்பிரம்பதைக்கைப்பற்றி
வல்லினாலடித்தபேர்க்கும் வரம்பிலாவரம்பாலித்துச்
சொல்லினாலடித்தபேர்க்குத் துன்பமோதருவாயென்ன. (உ0)

§ கைத்து —திரவியம்.

சொற்றொடைசாத்துந்தொண்டர் தமதடித்தொண்டரென்னப்
பெற்றடாதனவைநீக்கும் பெரியவனன்றோநீதான்
கற்றிடாதல்லவிந்நோய் வன்றொண்டர்கடிந்தாலன்றி
யற்றிடாதறிவாயென்னவருளினனமலமூர்த்தி. (௨௧)

என்குடிமூதாதைக்கான் றோர்தமையென்றென்றைக்கும்
பொன்குடிகொண்டமேனிப் புண்ணியாநீயேயன்றோ
தன்குடிபோலேகாத்தாய் தமியனேன்சூலைநோயை
வன்குடிகொண்டான்றனே வந்துகாத்திடுவன்கொல்லோ. (௨௨)

மன்னுயிர்காக்கப்பொன்னி னைசையுமருவுதற்குத்
தன்னுயிர்போன்றபெண்பா லாசையுந்தழுவலுற்ற
வுன்னுயிர்போன்றான் சூலையொருவுவித்துறவுறாமு
னென்னுயிர்விடுதனன்றென் றியம்பினரேயர்கோமான். (௨௩)

என்றவர்மொழியக்கேட்ட வெம்பிரான்கரந்துசென்றே
நன்றொடைசாத்துகின்ற வன்றொண்டர்தம்பானண்ணி
யின்றுநம்மேவலாலே யேயர்கோன்சூலைநீத்தா
னென்றிடக்கேட்டோர் தூதங்கவர்வயினேவினரால். [௨௪]

வேலனார்தூதன்றானுங் காகுத்தன்விரைந்துவிட்ட
வாலனார்தூதன்றானுஞ் சென்றழித்திட்டவாபோன்
மேலனார்தூதனுப்ப மேவலராயுற்றார்பால்
காலனார்தூதனென்னக் கடுகியேதூதன்சென்றான். (௨௫)

காலையுமொப்பிலாதான் சென்றவர்தமைக்காணுவுன்
சூலையையெங்கோன்றீர்ப்பா னென்றிடச்சொற்றதுன்ப
வேலையைக்கேட்டலோடு மிக்குறவுள்ளம்வெம்பி
யாலையின்கரும்பனாரென் செய்வனென்றயர்ந்தாரம்மா. (௨௬)

மற்றவர்சூலைதீர்க்கவரினவர் வதனநோக்கேன்
சுற்றியென்குடரையீர்க்குஞ் சொலற்கருநோயாந்துன்பம்
பற்றியவுடலையீரப் படுவனென்றுயிரைக்கோறக்
குற்றுடைவாளைக்கொண்டே குத்தினர்குக்கிற்றனே. (௨௭)

நற்புடைமாதரெல்லாங் கணவரையன்றிவேறிந்
நற்புடைத்தெய்வந்தானு முண்டெனவுமைகுவாரோ

வெற்புடையுடலந்தன்னைத் துரும்பெனவெண்ணும்போது
தற்புடைசூழ்ந்ததொண்டர் சார்ந்தனரென்னக்கேட்டு. (உஅ)

என்சொல்வன்மனைவியார்த மியல்பினைநம்பிவந்த
தன்செயல்கேட்டபோழ்தே கணவரைமறைத்துச்சால
மின்செயுந்தீபமாதி பூரணகும்பம்வேய்ந்த
கொன்செய்மங்கலத்திரேறுமெதிருடன்கொண்மினென்றாள். உகூ

பூரணகும்பமெங்கும் பொலிதரமறுகின்வைத்தார்
தோரணம்பலவியற்றிச் சொக்குறத்தூக்கிவைத்தா
ரோரணமின்றியேயுங்கமுகு கணுற்றியெங்கும்
காரணமென்னசொல்வே னட்டமங்கலங்கலிப்ப. (௩0)

மறையவர்குழாங்களெல்லா மறையொலிமிகமுழங்கத்
துறைதுறையானகங்க டொகையிலாதுழக்கியார்ப்ப
முறைமுறையெதிர்கொண்டேத்தி மூகமன்களோடுபோற்றக்
கறையுளோர்திசயிப்பத் தொண்டனார்சார்ந்தாரம்மா. (௩க

மும்மையாருலகுமண்ணின் மூதுணர்க்தோர்கள்போற்ற
மெய்ம்மையாம்புகழெனுஞ் சிம்மாதனமேவுவோர்தா
நம்மையாளுடைய நாயனாருறுமில்லிற்சென்று
செம்மைசேராதனத்திற் றிகழவிற்றிருந்தாரம்மா. [௩உ)

கடன்முறைபலவும்பெற்றுக் கருணைசேர்நாயனாரிவ்
விடனிலையென்னத்தேர்ந்திங் கேயர்கோன்றனதகட்டில்
விடனெனவருந்துஞ்சூலை நீக்கியேமேவன்றோ
டுடனுறைவதனுக்குற்றே னெங்கெனவுசாவினரால். (௩௩]

வேறு.

கிள்ளைமென்மொழி யேவலைக்கிட்டினே
ருள்ளமாற்றமுரைப்ப தென்னையெனக்
கள்ளமின்றிக் கலிக்காமநாயனார்
பள்ளிகொள்கின்ற னரெனப்பன்னினார். (௩௪)

மாணவேண்டும்பெரியர் மகிழ்வினைப்
பேணவேண்டும் பிரானிவரென்னவே
பூணவேண்டும் புனிதரைக்கண்ணினிற்
காணவேண்டுமென்றே சொற்களுரைந்தனர். (௩௫)

கூறுமாற்றங் குறிக்கொள்குழுவினர்
வேறுமாற்றம் புகலவெருவின
ரூறுமாற்றுதலின்றி யுள்ளூற்றதைத்
தேறுமாற்றந் தெரிதரக்காட்டினர். (௩௬)

குருதிசோரக் குடருஞ்சொரிதரப்
பெரிதுமாவிபிரிந்து கரந்தனிற்
சுரிகையோடு கிடந்திடுதோற்றத்தை
மருவிநோக்கி மனமுளைந்தாரரோ. (௩௭)

என்னைக்காணுமு னீறுறக்கண்டநின்
றன்னைக்கண்டுந் தரித்திருப்பேன்கொலோ
மின்னைக்கண்டது போலுயிர்வீவனென்
றுன்னிக்கைப்பறித் தாருடைவாளினை. (௩௮)

என்னுமாற்ற மியம்பியெடாமுன
முன்னவன்றன் கருணைமுயுங்கியே
யென்னைகெட்டன னென்றுயிர்பெற்றெழீஇப்
பன்னுமவ்வுடை வாளினைப்பற்றினார். (௩௯)

பற்றிநின்றவர் பாதமுளரியைச்
சுற்றிவீழ்ந்து பராவித்துதித்தனர்
பெற்றகண்ணிழந் தேபின்னும்பெற்றவ
ருற்றிடுங்களிப்பென்னவுவந்தனர், (௪0)

வேறு.

வாளைமாற்றியேயெழுந் திடுநாயனார்மற்றென்
கோளையாற்றினை கொடுஞ்சமண்கோறல்செய்துற்ற
நாளைமாற்றினை நண்ணினைநானுவன்றிட்ட
சூளைமாற்றினையெனப் பணிந்தேமகிழ்துதைந்தார். (௪௧)

மேலையோர்சினத்தால் 'விளைபொருண்மிகுமென்னு
நூலையாய்ந்தனர் நுவன்றதுதேர்ந்தனனன்றே
சூலையோதவிர்ந்தேனென்றுந் தொலைவிலாப்பிறவி
வேலையேதவிர்ந்தேனெனக் களிக்கடல்வீழ்ந்தார். (௪௨)

இருவரும்பெருமங்கல மீதெனவெழுந்தே
யொருவரோர்மெற் றொருவருமுயிருறப்புல்லி

மருவியேமகிழ்ந்தனர் மனம்வழுங்குறவேண்டி
னிருவிகற்பம் வந்தவர்க்கலானிகழ்த்துறப்படுமோ. (௬௩)

மெய்க்கவந்தவரிருவருந் திருப்புன்கூர்மேவிச்
சொக்கநாயகிபங்கினை ரருளுளந்துதைந்து
மிக்கவாவொடுநினைந்து தாட்டுணைமலர்வீழ்ந்து
முக்கணாதனைப்பாடினர் தொண்டர்தம்முதல்வர். (௬௩)

மேவியேசிலநாளவணுறைந்து பின்விரளி
யாவிபோன்றவரிருவரு மோருயிராகிக்
காவியங்கமலாலயப் பதியினைக்கண்டு
மாவியப்பொடுவிடங்கரைப் பரவியேவாழ்ந்தார். (௬௪)

நம்பியாரருளருளாற் றுமுறைநாக்கரு
ளும்பர்நாயகனெனப் பரமானந்தமோங்கி
யெம்பிரான்சிவலோக நாயகனடியிணையா
மம்புயத்தினையணைந்தருள் வாழ்வினையடைந்தார். (௬௫)

முற்றிற்று.

---

## ஏயர்கோன்கலிக்காமநாயனார் பூசித்தபடலச்சுருக்கம்.

சகலசாஸ்திர வேதாகம புராணங்களில் வல்லுனரான சூதமகரிஷியானவர் நைமிசாரண்ணியவாசிகளாகிய ரிஷிகளைப் பார்த்து ஓ மகரிஷிகளே! கேட்பீர்களாக. சோழநாட்டிலே பெருமங்கலமென்னுஞ் க்ஷேத்திரத்திலே வேளாளர்குலத்திலே ஏயர்கோன்குடியிலே அவதரித்த கலிக்கம்பநாயனார் என்பவர் சிவபிரானிடத்துஞ் சிவனடியார்களிடத்தும் அன்புமிக்குள்ளவராய் இத்திருப்புன்கூர்ஸ்தலத்தில் திருப்பணிசெய்துவருவராயினர். சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூரிலெழுந்தருளிய காலத்தில் அங்கு தியாகேசப்பெருமானை பரவைநாச்சியார்வீட்டுக்குத் தூதனுப்பிய விஷயத்தைக்கேள்வியுற்று மனோவியாகுலமடைந்து இந்நாயனாரையும் அடியவரென்று புகலவொண்ணுமா? தூதுசென்றவரையும் ஈசனென்று கூறப்பாற்றோ? என்றுமிகவு நிந்தனை செய்துகொண்டிருப்பதைத் தியாகேசரறிந்து இவருக்குச்சூலைநோயை யுண்டாக்கி நாயனாரைக்கொண்டு தணித்தாலொ

றிய இவர் கோபம் நீங்காதெனக்கருதி சூலைநோயைக் கொடுத்தார். அவர் அந்நோயால் வருந்தும்பொழுது சுந்தரமூர்த்தி நாயனாரை "நீபோய் அந்நோயைத்தீர்ப்பாயாக" வென்றுகட்டளையிட்டருள, நாயனார் அந்நோய்தீர்க்கத் தாம்வருவதாக கலிக்கம்பநாயனாருக்குத் தூதனுப்பினார். இதனைக்கேட்டநாயனார் தானனுபவித்துவருங் கொடிய நோயைக்காட்டிலும் இவர் வரவு மனதில்மிகவும் அதிகதுன்பத்தை உண்டாக்கியதால் உயிர்துறப்பதுசிதமென்று உடைவாளினால் வயிற்றில் குத்திக் கொண்டு உயிரைமாய்த்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அத்தலஞ்சென்று அவரைக்காண விருப்பமேலிட்டால் அவர் எங்கேயென்றுவினவலும் அவ்வூரார் உள்ளதைச் சொல்லாது வேறுவிதஞ்சொல்லியுஞ் சாத்தியப்படாமைபால் கொண்டுபோய்க்காட்டினர். சுவாமிகள் அவரைப்பார்த்தவுடன் "என்மீது இத்தகைய தீர்க்கவைராக்கியங் கொண்டிறந்தமையால் யானும்உயிர் துறப்பேனென்றும் அவ்வுடைவாளைக் கைப்பற்ற சிவபெருமானருளினால் அக்கலிக்கம்பநாயனார் உயிர்மீண்டெழுந்து இவ்வுடைவாளை வாங்கிக்கொண்டு சரணஞ்செய்து மிக்கநண்பாயினர். இவ்விருவருந் திருப்புன்கூரடைந்து சிவலோகப்பெருமானைத் தரிசித்து அங்கு கருணைபெற்று சிலநாள் அவருடன் றிருவாரூர்முதலிய ஸ்தலங்களுக்குச்சென்று பிறகு சிவலோகநாதர் திருவடி நீழலில் சேர்ந்தார்.

சருக்கம் முற்றிற்று.

---

## தீர்த்தப்படலம்.

---

மூர்த்திதீர்த்தமெனமொழியப்படுஞ்
சீர்த்தலப்பெருமைக்குட் சிறப்புறு
மார்த்திகொண்டவராலுக் கியற்றிய
தீர்த்தமேவு திசைகளைச்செப்புவாம்.

வேறு.

வாசமார்காமரஞ்சூழ்கரஞ்சமா வனத்தின்பாங்கர்
பேச்சாற்பக்கத்தற்ற பெற்றியைப்பேசப்பாற்சேரு

யோசனைதூரத்துள்ளாந்திசைக்குள் சானவிக்குயர்ந்தே
மூசியதீர்த்தம் யாவுமொழியவொண் ணுறும்மாமுன்னீர். (௨)

எஞ்சிவலோகநாதனியைந்தவாலயக்குணக்கின்
மஞ்சுறிந்திரதீர்த்தப்பேருளதென வழங்கப்பாற்றும்
விஞ்சுமாலயத்தின்கீழ்பால் விண்ணிறையர்ச்சைசெய்த
நஞ்சணிகண்டத்தெம்மா னுறைதருமிலிங்கநண்ணும். (௩)

தென்குடக்குதனில் வியாக்ரபாதமாமுனியின்றீர்த்த
மென்னமேல்விளங்குமன்ன னர்ச்சைசெய்யிலிங்கம்வேண்டின்
சன்மமில்சனகருக்குத் தனித்தமூவிரல்கணிக்கிப்
பின்னிருவிரலாற்காட்டும் பெம்மான்முன்பிறங்குமன்றே. (௪)

பதஞ்சலிமுனிவனர்ச்சை பண்ணியவிலிங்கமென்ன
விதஞ்சலியாமலீயுமாலயக் குடக்கிருப்பை
நிதஞ்சலிப்பிலாக்கராக்கோ னிகழ்ச்சிபரியையினாலே
பதஞ்சலிமுனியிலிங்கப் பாங்கரிவ்விலிங்கப்பண்பாம். (௫)

கின்னரர்குழாமுழங்கச் சபரியைகெழுமலாலே
யென்னரன்றிசையின்கண்ணே கின்னரரிலிங்கமெய்து
முன்னரங்கெய்தியாவு மருளைமொழிந்திறைஞ்சிற்
பின்னரும்பெறுதலுண்டோ பெறுவர்சிந்தித்தவெல்லாம். (௬)

இந்திரதீர்த்தக்கீழ்பா லிந்திராணிப்பேர்த்தீர்த்த
நந்தரமாமோவந்தப்பெற்றியை நவிலுதற்கே
சுந்தரவத்தடத்தின் கூலத்தர்ச்சையின்றெழும்பின்
வந்துறுமவ்விலிங்க நாடொறும்வயங்குமன்றே. (௭)

அத்தடத்தீர்த்தக்கீழ்பா லபயமாரபயன்றெட்ட
மெய்த்தடந்தூய்தாய்மேவு மவனருச்சனைவிழைந்த
தத்துவப்பொருளிலிங்க மதன்கரைதன்னிற்சாருஞ்
சித்திகள்யாவும்போற்றுந் தொண்டர்கள்சேர்வரம்மா. (௮)

விண்ணயிராவதந்தொட்டுறுந் தடந்தென்கீழ்மேவு
மெண்ணயிரனைத்துந்தீர்த்தே யியம்பொணாவின்பநல்கி
மண்ணையைப்போக்கிநல்ல னைமந்தர்ப்பேறளித்துநின்ற
வெண்ணயிராவதப்பேரி லிங்கமப்பெயரின்மேவும். (௯)

சோமனார்தீர்த்தமென்னுந் தடந்தென்பாற்றலங்கலுற்ற
நாமனோனர்ச்சைசெய்த விலிங்கமத்தடத்தின்பாலாங்
காமனார்குருவாம்பொன்னன் குடக்கிலோர்கன்னற்றார
மாமனென்றடமும்மன்னனி லிங்கமுமமருமன்றே. [க0]

உபயவர்பரணந்தன்னிற் சத்தகன்னிகையுளூற்று
மபயதானங்கொடுக்குமி லிங்கமாண்டமைந்திலங்குந்
தபமுறைசித்தரர்ச்சை நவின்றிடுமிலிங்கந்தானுஞ்
சுபமதாயதின்வடக்கிற் றுன்னுறுஞ்சுகுணமாக. [கக]

அந்தமாவிலிங்கத்திற்குத் தரத்தினிலமர்ந்ததான
முந்துமுந்தணர்தங்கட்கு முதல்வனுஞ்சதுர்முகத்தோன்
சிந்தையினியன்றதூய விலிங்கமக்கரஞ்சஞ்சேர்ந்து
வெந்துயரகற்றிமேலாம் வீடுறமேவுமன்றே. [க௨]

வேறு.

கூறுகள்ளுண்டலாதி கோடானகோடியாக
வேறுறும்பாவம்யாவு வீவதற்கையமென்றோ
தேறுமிவ்வெவைக்குங் கீழ்பால்சிந்தனையாவுநல்க
வாறுகோடிட்டனமர்ந்தான் பெருமையாரளக்கப்பாலார். [கங]

கரஞ்சமாவிருக்கத்தின்கீழ்பால் மிகக்களிப்பின்மேவுந்
தரஞ்செறியிலிங்கமர்ச்சை யியக்கராற்சமைந்ததென்
கரஞ்சமாவனத்தின்பாலுத் தரத்தின்கண்கண்டதீர்த்தம்
பரஞ்சுடர்பிரமதீர்த்தமெனப் பெயர்பகருவாரால். [கச]

அத்தடக்குணக்கின்கண்ணே பாரதியாலமைந்த
சுத்தமெய்ப்பரமலிங்கந் துலங்குறலுற்றதென்ப
நத்துறுமயன்றீர்த்தத்தின் மருங்கெழுநாவோன்றீர்த்த
மித்தடமீசானத்தின் சர்வதீர்த்தமதென்றேயும். [கரு]

அலகிலாச்சித்திதன்னை யருளலாலந்தநாம
மிலகியவத்தீர்த்தத்தின்மருங்கு தென்மலையத்தெய்துங்
கலையமாமுனிவனர்ச்சைகண்டிடு மிலிங்கமாகுந்
தலைமைசேர்செல்வமெல்லாந் தந்திடுந்தரிசித்தோர்க்கே. [கசு]

அவ்விலிங்கத்தினுத்தரத்தினி லஞ்ஞோன்கோட்ட
மெவ்வுமென்றரைப்பதியாவு மிக்கிடுமகிமைத்தாகும்

செவ்வியவதன் குடக்கிற்றிகழ்ந்திடு கோட்டந்தானு
நவ்விகொள்விழியுலோ பாமுத்திரைவாவிநண்ணும். [௧௭]

குறுமுனியிலிங்கத்தென்பால் குலவியபாபநாசம்
பெறுமொருவிலிங்கமன்னுன் மனைவியின்பேறதாகு
நிறுவுமிக்கோட்டந்தம்முள் ளெழுங்கியோர்தரம்படிந்தே
யுறுமுறையிட்டலிங்கந்தனைப்பூசையுஞற்றுவாரேல். (௧௮)

சத்தியுள்ளளவுபஞ்சாக்கரந் தனைச்செபித்துத்தாந்தாம்
பத்தியின்வலம்புரிந்துபணிந்துறு வோருக்கெல்லா
நத்தியோர்கன்னலேனுங் கணமேனுநண்ணுவாரேற்
சித்திகள்யாவும்பெற்றுச் சுத்தியுஞ்சேர்வரம்மா. [௧௯]

கொந்தலர்கடுக்கைவேணிக் குழகனைருளைவேண்டி
வந்திடுமடியர்யாரும் வணங்கியவிலிங்கந்தீர்த்தஞ்
சிந்தையினுவந்தேயாடிச் சிவபூசைசெய்வராயின்
பந்தமதகன்றுநாலாம்பதவியு மடைவரம்மா. (௨௦]

முற்றிற்று.

---

## முனிவர் பூசித்தபடலம்

---

கனிதருமன்பின்மிக் கோர்கண்டிடுதீர்த்தமோடு
நனிவருமன்பினர்ச்சை யிலிங்கமுநவிற்றினேமால்
பனிவருமதிமிலேந்த பரஞ்சுடர்காதைகேட்ட
முனிவர்கள்பூசித்துற்ற முறைமையைமொழியலுற்றாம். (௧)

இத்திருப்புன்கூர்மேய சரித்திரம்யாவுமொன்ற
மெய்த்திருப்புகழைச் சூதமுனிவரன்விளம்பக்கேட்ட
வத்திருமுனிக்குழாங்களனைவருமதிரேகித்தே
யொத்திருபதம்வணங்கி யுசாவுவருளமுவந்தே. (௨)

தீதுசெய்பவங்கடோறுஞ் செய்திடுதீமைதன்னை
வாதுசெய்தொழிக்குமிந்தத் திருப்புன்கூர்மன்னுங்காதை
யீதுசெய்துரைத்தநின்ற வெங்குருநாதவெங்கள்
காதுசெய்பறம்போந்தண்ணுங் கணுறக்காட்டினீரால். (௩)

தலமதின்மகிமைகேட்ட தக்கனுந்தரிசித்தேத்தி
வலமதுபுரிந்துபோற்ற வம்மினென்றடைவிற்கூட்டி
நலமதுபெற்றநன்னா ளோரையைநாடியாய்ந்து
பலமதுபெறவேநேமி வனம்விட்டுப்பரிவிற்சூழ. (௪)

வாரணவாசியென்னு மாயிரும்புகழமைந்த
தோரணவனப்பமைந்த சொக்கமாநகரம்நண்ணி
நாரணனயனார்தேடு நாடருஞ்ஜோதிமேவிப்
பூரணமமர்ந்திலங்கும் பொருவரும்பதியைப்போற்றி. (௫)

நெருப்புறுமேனியான்வாழ்மலை யெனச்சிலையாநேர்ந்த
பொருப்புறுமேனிபொன்னும் வெள்ளியுமாய்ப்பொதிந்தே
யிருப்பினுமெமக்குற்றிட்ட பெருமையேதெனவியம்பும்
பருப்பதமெனவிளங்கு மலையினைப்பணிந்தாரம்மா. (௬)

அலகிலாத்தலங்களெல்லாம் வலம்வந்தேயமைவிற்போற்றி
யுலகிலாப்பெருமையாவு மொருங்கமைவுறுமாணிக்க
மலையினிலுறையெங்கோமா னிராசலிங்கப்பேர்வாய்ந்த
தலமதைவலம்வந்தேத்தித் தலைமிசைப்பணிந்துநின்றார். (௭)

விடைதுவன்றிட்டநாதன் றனைத்தரிசித்தோர்மீண்டிங்
கடைதரும்பலன்கணின்னைக் காணிலென்றறைந்தேயன்னான்
மிடைதரும்வலத்தோடன்னின் மேவியென்றென்றுமீச
னிடதுதோள்பெறுதண்டீசர் தலத்தினையெய்திப்போற்றி. (௮)

வந்துகண்ணுவர்தாமேவு மடத்தினிற்பசுவாயுற்று
முந்துறுபசுக்களோடு மேயுங்கான்முதல்வனுக்குங்
கிந்துறுநுதலெம்மோய் பாலபிடேகமிழைத்துநின்ற
கந்துகாபுரியைக்கண்டு கசிந்தவுள்ளத்திற்போற்றி. (௯)

கன்னத்திற்கேட்டுவந்து காண்டிருப்புன்கூர்தன்னிற்
பொன்னொத்தமலைநேர்பொற்கோ புரங்கண்டுபோற்றல்செய்து
தன்னொத்ததலத்தைச்சூழ வலம்வந்துத்வத்தரெல்லா
மின்னத்துக்கிடுண்டோவென் றண்டத்தைவிட்டிறங்கி. (௧0]

தலத்தினையுற்றுநந்தனார்க் கருடமழையத்தந்த
தலத்தினையுற்றுமிக்க புண்ணியநண்ணும்வீதி

வலத்தினையுற் றமேன்மை வாய்ந்திடும்வாவியின்கீழ்ப்
புலத்தினையுற்றகோட்டந் தன்னையும்புக்குமூழ்கி. (கக)

மெய்யினில்வெள்ளிக்காப்பை வீதியினணிந்தக்கத்தைக்
கையினிற்சிரத்தின்மார்பிற் களத்தினிற்கனலப்பூண்டு
தையினின்முதலயாருஞ் சந்திசெய்திடுதலாற்றி
மையினிற்கறுத்தகண்டன் றனையன்பின்வலமியற்றி. (கஉ)

இலிங்கமேயாதியெம்மோய் சௌந்தரமெனப்பேர்வாய்ந்த
வலங்கலங்குழலினட்கு மொழுந்தருள்னவருக்கு
மிலங்குறவபிடேகாதி தயிலம்பாலேனையாட்டிக்
கலிங்கமுந்தரித்துப் பற்பன்மலரருச்சனைகள்கண்டு. (கங)

மாபலாவாழைதந்த கனிபலவகையமைத்துத்
தீபஞதிக்கநீக்கநிவேதனம் பலதிருத்தித்
தூபதீபாதியான சோடசமுறைபுரிந்து
பாபநாசங்குயிற்றப் பணிந்திதுபகரலுற்றார். (கச)

எண்ணியவெண்ணமெல்லா மிமைப்பினின்முடித்துவைக்கும்
புண்ணியமுதல்வனை பூரணப்பொருளேபோற்றி
கண்ணியபற்றுக்கோடாய் கருணைசெய்தலைவாபோற்றி
நண்ணியசிவலோகப்பேர் நாதனேபோற்றிபோற்றி. (கரு)

ஏன்றடிவணங்கப்பெற்ற விருடியர்தங்கட்கெல்லா
நன்றடிமையினைக்கொண்ட நாயகனருளினோக்கி
யின்றடிவணங்குந்தன்மையாற் பலவரமுமேற்றே
யொன்றறமுத்தியீற்றி னடைவிரென்றுரைத்தானண்ணல். (கசு)

அவ்வரம்பெறுதலோடு மரனடிக்கன்புகூர்ந்து
தெவ்வரம்பனையகண்ணு டனக்குமவ்வண்ணஞ்செய்தே
யெவ்வரங்களுமேபெற்றே யிருவர்களருளுமுற்றே
யவ்வவர்விடையும்பெற்று ரருந்தவஞ்செய்யக்கற்றார். (கஎ)

முழுதுமிப்புராணங்கேட்டோர் முற்றுமேபயனுணர்ந்தோ
ரெழுதினோர்படித்தோர்யாரு மிந்திரசெல்வம்பெற்றே
வழுவிலாவாயுள்சந்தானத்தொடு வரங்கள்வாய்ந்து
மழுவலானருளடைந்து வாழ்குவர்மிகவுமம்மா. (கஅ)

மண்டலம்புகழ்பட்டினத்துப்பிள்ளை
　　மரபில்வந்துகாணுடுகாத்தானெனுந்
தொண்டருக்கடித்தொண்டனெனச்சொலுந்
　　தூய்சிதம்பரமால்மிக்குணமேவே
தொண்டமாந்துறையம்பலத்தாடையர்
　　துங்கசந்ததிதன்னிலிலங்கிடும்
பண்டிதர்புகழுங்கனகசபைப்
　　பாவலனன்பொடுபகர்ந்தானரோ. [௧௯]

நாதனுஞ்சிவலோகப்பேர் நாயகன்பாகம்வாழு
மாதெனுஞ்சௌந்தரப்பேர் வல்லியோடிருவர்வாழி
வேதமுமகமும்வாழி விண்ணுறுமாரிவாழி
பூதலத்தறம்வளங்கள் புரவலன்செங்கோல்வாழி. (௨0)

ஆயிரத்தியெண்ணூற்றியிருபத்தியெட்டெனச் சொற்றுறவ ஸமந்த, வாயுரத்தின் பிலவங்கவிடைமதியிற் றிருப்புன்கூர்மான் மியத்தைக் கேயுரத்தின்றேள்வள்ளிமணவாள முருகனருள்கிடைத்ததாலே, பாயிரத்தினெடு கனகசபைப்புலவனரங்கேற்றிப் பலன்பெற்றனல். (௨௧)

ஆக படலம் ௨௩-க்கு பாடல் ௮௫௫.

முற்றிற்று.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பிழை. | திருத்தம். |
|---|---|---|
| உ | தோளற்ற | தோளாற்ற |
| ருஉ | தெய்வநய | தெய்வநாய |
| ,, | தோற்றிக் | தோற்றி |
| ருசு | ஏனைபோர் | ஏனையோர் |
| எஎ | நாள | நாடாள் |
| அ0 | நாதனரூன் | நாதன்ருள் |
| ,, | திகழுவை | திகழுடுவை |
| அஎ | இனி | இனிச் |
| க0ச | அன்னுனன் | அன்னுள் |
| கக0 | அமுதே | அமுதமே |